புதுமலர்

15

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

புதுமலர் 15 : ஜூலை - செப்டெம்பர் 2026
திருவள்ளுவர் ஆண்டு 2057

ஆசிரியர்/வெளியீட்டாளர் : கண. குறிஞ்சி

இதழ் முகவரி : 6, முதல் வீதி, சக்தி நகர் மேற்கு, திண்டல் (அஞ்சல்), ஈரோடு 638 012.

இதழ் தொடர்பு எண் : **94433 07681**

மின்னஞ்சல் : gana.kurinji@gmail.com

புலனம் : புதுமலர் இதழ் நண்பர்கள்

அட்டை வடிவமைப்பு : **கண.குறிஞ்சி**

தனி இதழ்	:	ரூ. 130
ஆண்டுக்கட்டணம்	:	ரூ. 500
இரண்டாண்டுக் கட்டணம்	:	ரூ. 1000
மூன்றாண்டுக் கட்டணம்	:	ரூ. 1,500

இதழுக்கான கட்டணம் அனுப்பியவர்கள் உரிய தொகை அனுப்பிய பிறகு, மறவாமல் இதழின் தொடர்பு எண் மூலம் அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு கனிவுடன் வேண்டுகிறோம்

புலனம் (வாட்ஸ்அப்) மூலம் தகவல் தெரிவிப்பதை உறுதியாகத் தவிர்க்கவும்

ஆண்டுக்கட்டணம் குறித்துத்தகவல் தெரிவிக்க வேண்டிய தொடர்பு எண்: **94433 07681**

நெறியாளர்கள்

- **வீ. அரசு**
- **பொதியவெற்பன்**
- **ஜமாலன்**
- **ரவி குமாரசாமி**

வங்கிக்கணக்கு விவரம்

G. SHANMUGA SUNDARAM

INDIAN BANK, THINDAL BRANCH, ERODE

S/B A/c No. 7390 144 253 IFSC NO. IDIB 000 T202

G Pay No. 94433 07681 G. Shanmuga Sundaram

★ **புதுமலர் இதழில் வெளியாகும் படைப்புகளின் கருத்துக்கள் படைப்பாளிகளின் சொந்தக் கருத்துக்களாகும்.**

உள்ளடக்கம்

★ இதழின் குரல் 4

★ சாகித்திய அகாதமி விருதாளர்
ச. தமிழ்ச்செல்வன் பேட்டி 9
- **கண.குறிஞ்சி**

★ தகவல் தொழில்நுட்பத்துறையில்
பெண்களின் பங்கு ஒரு பார்வை 25
- **பரிமளா**

★ நவீன சிறார் இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு 36
- **சரிதா ஜோ**

★ பண்பாட்டு மேலாதிக்கமும் இந்திய அரசியலும்:
கிராம்சியின் கண்ணோட்டத்தில் ஓர் ஆய்வு 48
- **இரா.முரளி**

★ வாடிகனின் பாவமன்னிப்பும் எதிர்காலம்
பற்றிய எச்சரிக்கையும்! 59
- **எம் பாண்டியராஜன்**

★ தோழர் தியாகு பேட்டி (சென்ற இதழ் தொடர்ச்சி) 70
- **கண. குறிஞ்சி**

★ பிழை மலிந்த பிதற்றல் நூலுக்குப் பரிசா? 98
- **பொ.வேல்சாமி**

★ மூத்த எழுத்தாளர் க.ரத்னம் 114

★ முற்போக்கு இலக்கியத்தின் சமகால ஆளுமை
- ச. தமிழ்ச்செல்வன். 120
- **கண. குறிஞ்சி**

★ சாக்ரடீசும் திருவள்ளுவரும்:
இரு நாகரிகங்கள், ஓர் அறப்பார்வை 124
- **பொன் சந்திரன்**

★ நிகழ்வுகள் 129

இதழின் குரல்

கன்னியாகுமரி முனையிலுள்ள திருவள்ளுவர் சிலை போல். கருங்கல்லால் ஆன சிலை உலகில் எங்குமே இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. கடல்நீர் மட்டத்திலிருந்து 30 அடி பாறை மீதான இச்சிலையின் மொத்த எடை 7,000 டன் ஆகும். பீடத்தோடு சேர்த்து இச்சிலையின் உயரம் 133 அடியாகும். பீடத்தின் உயரம் அறத்துப்பால் அதிகாரங்களை மனதிற் கொண்டு 38 அடியும், பொருட்பால் / காமத்துப்பால் ஆகிய இரண்டு அதிகாரங்களின் அடிப்படையில் 95 அடி உயரமும் ஆக மொத்தம் 133 அதிகாரங்களைக் குறிக்கும் வண்ணம் 133 அடி உயரத்தில் சிற்பி கணபதி அவர்களால் கம்பீரமாக இச்சிலை உருவாக்கப் பட்டுள்ளது. உப்புக் காற்று இச்சிலையை அரிக்காமலிருக்க அவ்வப்பொழுது வேதியியல் கலவைப் பூச்சுப் பூசிப் பாதுகாக்கப் படுகிறது.

சிலையின் 130 அடி உள்ளீடற்று அமைக்கப்பட்டு இருப்பதால், கடுமையான கடற்காற்றும் சிலையைப் பாதிக்காதபடி தொழில்நுட்பத்துடன் அமைக்கப் பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் மிகக்கடுமையான சுனாமி அலைகள் தாக்கிய பொழுதும் திருவள்ளுவர் சிலையை ஒன்றும் செய்ய முடியவில்லை என்பது மிக மிக முக்கியமான செய்தியாகும்.

2000 ஆம் ஆண்டு சனவரி முதல் நாள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் திறக்கப்பட்ட குமரிமுனை திருவள்ளுவர் சிலை, அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலைக்கு இணையான முக்கியத்துவம் உடையதாகப் பலராலும் கருதப்படுகிறது. இதனால் கன்னியாகுமரியிலுள்ள ஆர் எஸ் எஸ் சார்பு விவேகானந்தா கேந்திரத்தின் முக்கியத்துவம் குறைவதாக

ஒரு சிலர் எண்ணி அதற்கேற்பக் காய்களை நகர்த்தி வருவதாகக் கன்னியாகுமரி மக்கள் தெரிவிக்கின்றனர். அதை உறுதிப்படுத்தும் வகையிலேயே நகர்வுகள் தொடர்வதையும் உணர முடிகிறது. இதனால் திருவள்ளுவர் சிலை தொடர்புறக்கணிப்புக்கு உள்ளாகி வருகிறது.

எடுத்துக்காட்டாக, திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டவுடன், கரையிலிருந்து திருள்ளுவர் சிலைக்கு நேரடியாகப் படகுப் போக்குவரத்து தேவை எனத் தமிழ் ஆர்வலர்களால் வலியுறுத்தப்பட்டது. ஆனால் ஒரு சில ஆண்டுகளே தமிழ்நாட்டு அரசின் பூம்புகார் போக்குவரத்துக் கழகத்தினால் செலுத்தப்படும் படகுகள் திருவள்ளுவர் சிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. பிறகு சிலைக்குப் படகு போகச் சரியான வகையில் சூழல் இல்லை, நீர் அளவு குறைவாக இருக்கிறது, காற்றுக் கடுமையாக இருக்கிறது என்கிற வகையில் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லித் திருவள்ளுவர் சிலைக்குப் படகுப் போக்குவரத்தை நிறுத்தி விட்டார்கள்.

பின்னர் முதலமைச்சராக வந்த ஜெயலலிதா உள்ளிட்டவர்கள் அந்தச் சிலையைத் தூய்மைப்படுத்தாமல் வேதியியல் பூச்சுப்பூசிப் பேணிப் பாதுகாக்காமல் அப்படியே கிடப்பில் போட்டுவிட்டனர். அதன் பிறகு ஏறத்தாழ பத்து பதினைந்து ஆண்டுகள் அளவில் திருவள்ளுவர் சிலைக்கான போக்குவரத்து முற்றிலும் இல்லாமலேயே போய் விட்டது. இறுதியாக, திருவள்ளுவர் சிலையைப் போய்ப் பார்ப்பதற்கான கோரிக்கை வலுப்படவே, விவேகானந்தர் மண்டபம் உள்ள பாறைக்கும், திருவள்ளூர் சிலைப் பாறைக்கும் இடையில் கண்ணாடிப் பாலம் ஒன்று கடந்த ஆட்சியில் அமைக்கப்பட்டது. கண்ணாடிப் பாலம் பணிகள் நடந்து கொண்டிருக்கும் பொழுதே திருக்குறள் பேரவையின் ஒருங்கிணைப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட திருக்குறள் அமைப்புகள் இணைந்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தி, கண்ணாடிப் பாலத்தைக் கடற்கரையிலிருந்து நேராகத் திருவள்ளுவர் சிலை நோக்கி அமைக்க வேண்டும் எனும் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

ஆனால் அக்கோரிக்கை ஏற்கப்படாமல், அந்த இரண்டு பாறைகளுக்கும் இடையே கண்ணாடிப் பாலத்தைக் கட்டமைத்து விட்டனர். இந்தக் கண்ணாடிப் பாலத்தைக் கட்டியமைக்கத்

தமிழக அரசு 50 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. ஆனால், ஆர் எஸ் எஸ் சார்பு விவேகானந்தா கேந்ராவுக்குச் சென்ற பிறகுதான் கண்ணாடிப்பாலத்தைக் காணமுடியும் என்ற நிலை இப்பொழுது உருவாகி விட்டது. அதன்பிறகே மக்கள் கண்ணாடிப் பாலம் வழியாகப் போய் திருவள்ளுவர் சிலையைக் காணும் வண்ணம் மாற்றங்கள் செய்யப்பட்டன.

இதற்கிடையில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வந்துவிட்டது. தேர்தல் பரபரப்பில் யாரும் கவனிக்க மாட்டார்கள் என எண்ணி, மிகவும் இரகசியமாகத் திருவள்ளுவர் சிலைக்குச் செல்வதற்கான படகுத் துறை சிதிலமடைந்து விட்டது எனும் காரணத்தைக் காட்டி அதையும் இடித்துத் தள்ளி விட்டனர்.

இத்தகைய நடவடிக்கைகள் தற்செயலானவை அல்ல! திருவள்ளுவர் சிலைக்கு இருக்கும் முக்கியத்துவத்தை முற்றிலும் குறைக்கும் செயலாக இது இருக்கிறது என நம்புவதற்கு முகாந்திரம் உள்ளது.

எனவே முன்பிருந்தபடியே கடற்கரையிலிருந்து நேரடியாகத் திருவள்ளுவர் சிலைக்குப் படகுப் போக்குவரத்து தொடங்கப்பட வேண்டும். திருவள்ளுவர் சிலைக்கு வருபவர்கள் கண்ணாடிப் பாலத்தைக் காண்பதற்கு அது ஏதுவாக இருக்கும். பிறகு விருப்பம் உள்ளவர்கள் விவேகானந்தா கேந்திரா செல்லலாம் திருவள்ளுவர் பாறைக்குப் படகுப் போக்குவரத்து செலுத்துவது சாத்தியமல்ல என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல! அறிவியலும் தொழில்நுட்பமும் உயர்ந்தோங்கி உள்ள இக்காலகட்டத்தில் இந்தச் சிறிய பிரச்சனையை மாற்றி அமைப்பது பெரிய செயலல்ல!

இந்த சமயத்தில் திருவள்ளுவர் சிலையின் அவல நிலையையும் சற்றே எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

விவேகானந்தா கேந்திரம் இரவில் லேசர் ஒளியில் கண்ணைப் பறிக்கும் வகையில் பளபளப்பாக மின்னிக்கொண்டிருக்கும் போது, திருவள்ளுவர் சிலை அனாதையாக இருண்டு கிடக்கும் கேவலமான நிலையைத் தமிழக அரசு மாற்றி அமைக்க வேண்டும்.

அதேபோல், திருவள்ளுவர் சிலையைக் காண வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கும், பிற மாநிலப் பயணிகளுக்கும், பொது மக்களுக்கும் திருவள்ளுவர் குறித்த செய்திகளை விரிவாக அறிந்து கொள்ள இலவசமான கையேடுகளைத் தமிழக அரசு வழங்க வேண்டும்.

மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திருவள்ளுவர் சிலையைக் கடற்காற்று அரித்துச் சேதப்படுத்தாமல் இருக்க அதை முறைப்படி பாதுகாக்க வேண்டும். தற்பொழுது கடந்த நான்கு மாதங்களாக வேதியியல் பூச்சுப் பூசப்படாமல் வள்ளுவர் சிலை கேட்பாரற்றுக் கிடக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு உடனடியாக இரசாயனப் பூச்சைத் தொடங்க வேண்டும்.

இத்தகைய பின்னணிகளைக் கருத்தில் கொண்டு தற்பொழுது புதிதாக ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுள்ள தமிழக வெற்றிக்கழக அரசு, தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், பொது மக்களும் நீண்ட காலம் வலியுறுத்திவரும் மேற்காண் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்துத் திருவள்ளுவரின் முக்கியத்துவத்தை நிலை நிறுத்தும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் மேலோங்கி உள்ளது.

♦♦♦

எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன்

ச. தமிழ்ச்செல்வன்

எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வன் பேட்டி

– கண. குறிஞ்சி –

● **கண. குறிஞ்சி: உங்களது தாய்வழித் தாத்தா மதுரகவி பாஸ்கரதாஸ் மற்றும் உங்கள் தந்தையும் திராவிட இயக்க எழுத்தாளருமான எம்.எஸ். சண்முகம் ஆகியோர் குறித்த உங்களது நினைவுகளைப் பதிவு செய்யவும்.**

☆ **தமிழ்ச்செல்வன்:** தாத்தா மதுரகவி பாஸ்கரதாஸ் அவர்களை நான் பார்த்ததில்லை. நான் பிறந்தது 1954இல். அவர் மறைந்தது 1952இல். அம்மா வீட்டில் சுழன்று கொண்டிருந்த அவரைப்பற்றிய நினைவலைகளின் மூலமாகவும் அவர் பயன்படுத்தி விட்டுச் சென்ற புத்தகங்கள், ரேடியோ அறை, அவர் அணிந்திருந்த விதவிதமான கோட்டுகள், அவர் விட்டுச்சென்ற டைரிகள் இவற்றின் வழியாகவே அவரை நான் உள்வாங்கிக் கொண்டிருந்தேன். பிற்காலத்தின் என் கடைசித்தம்பி **முருகபூபதி** அவருடைய டைரிகளையெல்லாம் தேடித்திரட்டி **“பாஸ்கரதாஸின் நாட்குறிப்புகள்”** என்கிற நூலைத் தொகுத்து வெளியிட்டார். தாத்தவின் படைப்புகள் பலவற்றையும் தேடித்தேடிச் சேகரித்ததும் தம்பிதான். தாத்தாவின் உண்மையான வாரிசு அவன் தான் என்று சொல்ல வேண்டும்.

தாத்தாவின் மூத்த மகளான **எங்கள் அம்மா சரஸ்வதி,** தாத்தாவைப் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்துகொண்டே

இருப்பார். பாஸ்கரதாசின் இணையர், எங்கள் அம்மாச்சி ஒண்டியம்மாள் என் திருமணம் வரைக்கும் எங்களோடு வாழ்ந்தார். அவரும் பகிர்ந்துகொள்வார். ஒரு பெரிய கலை வாழ்வை அவர் வாழ்ந்திருக்கிறார் என்பதை இவற்றின் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது. ஆங்கிலேயரை எதிர்த்துப் பாடல்கள் எழுதி, நாடகம் போட்டு 26 முறை கைதாகியிருக்கிறார். பிச்சைக்காரர்கள் தெருவில் பாடிச்செல்லும் பாடல்களாக அவரது பாடல்கள் புகழ்பெற்றிருந்ததால் “பிச்சைக்கொரு பாஸ்கரதாஸ்” என்கிற அடைமொழி அவருக்கு உண்டு. அவருக்கு இரண்டு மனைவிகள். ஒன்று எங்கள் பாட்டி ஒண்டியம்மாள். இன்னொருவர் முஷ்டக்குறிச்சியில் வாழ்ந்து மறைந்த அமிர்தம் பாட்டி.அவர் வழியிலும் தாத்தாவுக்கு வாரிசுகள் உண்டு. அமிர்தம் பாட்டியின் உடன் பிறந்த சகோதரர்தான் “தினகரன்’ பத்திரிகையை நடத்திய நாராயணசாமி. அவரும் காங்கிரஸ்காரர்தான். அலிப்பூர் சிறையில் நேதாஜியோடு சிறைவாசம் அனுபவித்தவர். முத்துராமலிங்கத்தேவருக்கு எதிராக தொடர்ந்து எழுதி வந்ததால் கொலை செய்யப்பட்டவர்.

தாத்தாவுக்குக் கவிதையில் கடிதங்கள் எழுதி அவர் மனதில் இடம் பிடித்து அவர் மகளைப் பெண்கேட்டவர் எங்கள் அப்பா எம்.எஸ்.சண்முகம். பள்ளிப்பருவத்தில் தூத்துக்குடி கால்டுவெல் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே திராவிட இயக்க இதழ்களில் கதை, கட்டுரைகள் எழுதத்துவங்கியவர். கதை,கவிதை,நாடகம் என இளம்பருவத்தில் எழுத்தில் தீவிரமாக இயங்கிய அப்பா பின்னர் குடும்ப வாழ்வில் நீண்டகாலம் தன்னைத் தொலைத்து விட்டு மீண்டும் 60 வயதுக்குப் பிறகு எழுத ஆரம்பித்தார். இரண்டு நாவல்கள், இரு சிறுகதைத் தொகுப்புகள், சில கவிதைத்தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள் என சுமார் 15 நூல்களைக் கொண்டு வந்துள்ளார். பொருட்படுத்தி வாசிக்கத்தக்க படைப்புகள்தாம் அவை. 96 வயது வரை வாழ்ந்து 2025இல் தான் காலமானார். கடைசி 8 ஆண்டுகளில் ஒவ்வொரு பிறந்த நாளிலும் ஒரு புத்தகம் வெளியிட்டு விடுவார். நாங்கள் பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து நவம்பர் 13 அவரது பிறந்த நாளை நூல் வெளீயீட்டுடன் சிறப்பாகக் கொண்டாடுவோம்.

● மார்க்சியத்தின் மீதான ஈர்ப்பு உங்களுக்கு எப்பொழுது/ எப்படி ஏற்பட்டது?

☆ நான் இராணுவத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது சில நக்சல்பாரி இயக்கத்தோழர்களுடன் பழக்கம் ஏற்பட்டது அதன் காரணமாக மார்க்சியத்தின் மீது பிடிப்பு ஏற்பட்டது. பின்னர் இராணுவத்தைவிட்டு ஊர் திரும்பி அஞ்சல் துறையில் சேர்ந்தபோது தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றியபோது அப்பிடிப்பு என் வாழ்க்கைக்கண்ணோட்டமாக மாறியது.

● இராணுவத்தில் பணியாற்றிய நீங்கள் இடையில் அதிலிருந்து வெளியேறக் காரணம் என்ன?

☆ மார்க்சியக் கருத்துகள் எனக்குள் நுழைந்ததுதான் காரணம். யாருடைய சொத்துகளைப் பாதுகாப்பதற்காக நாம் இந்தப்பனிமலையில் நிற்கிறோம்? நம்முடைய மக்களுக்குத்தான் சொத்தே இல்லியே? அரைப்படி நெல் கூலி உயர்வு கேட்டாலே தீ வைத்துக்கொளுத்துகிறர்களே. யாருடைய சொத்தையோ பாதுகாப்பதற்காக நாம் ஏன் இங்கே கிடந்து சாக வேண்டும் என்கிற கேள்வி மனதில் எழுந்தபோதே மூட்டையைக்கட்ட ஆரம்பித்துவிட்டேன். ஆரம்ப சூரத்தனமாகச் சில சாகச நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பிடிபட்டு இராணுவத்தில் நீடிப்பதும் சிக்கலானபோது ஒரு தமிழ் அதிகாரியின் உதவியால் சேதாரமில்லாமல் இராணுவத்தை விட்டு வெளியேறி வந்துவிட்டேன்.

● "அறிவொளிக் கலாச்சாரம்" என அடிக்கடி பேசுகிறீர்கள். உங்களது பயணத்தையே அறிவொளி இயக்கத்திற்கு முன்/ அறிவொளி இயக்கத்திற்கு பின் என்பதாகப் பிரிக்கலாம் எனவும் குறிப்பிடுகிறீர்கள். எனவே விரிவாக அது பற்றி விளக்கவும். கூடவே அறிவொளி இயக்கம் உங்களிடம் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்தும் பதிவிடுக!

☆ இந்தியப் பெருமுதலாளிகள் பன்னாட்டு நிதி அமைப்புகளிடமிருந்து தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றிட, தங்கள் நாடு வளமிக்க நாடாக இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் தேவை எழுந்தது. வளர்ச்சியின் குறியீடுகளில் ஒன்று கல்வி. ஆகவே மத்திய அரசு தேசிய அளவில்

சாகித்திய அகாதமி விருது பெறுதல்

எழுத்தறிவு இயக்கத்தை அறிவித்தது. ஒரு மாவட்டத்தை அடிப்படை அலகாகக்கொண்டு மாவட்ட அறிவொளி இயக்கம் முதலில் கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தில் துவங்கப்பட்டது. மக்களுக்குக் கல்வி புகட்டுவது ஒரு முக்கியமான அரசியல் நடவடிக்கை என்பதாகப் புரிந்து கொண்டு கேரள மார்க்சிஸ்ட்டுகள் முழுமையாக அந்த அறிவொளிப்பணிகளில் தம்மை ஒப்புக்கொடுத்தார்கள். எர்ணாகுளம் இந்தியாவின் முதல் எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் புதுச்சேரியிலும் தமிழ் நாட்டில் எட்டு மாவட்டங்களிலும் அறிவொளி இயக்கம் தொடங்கப்பட்டது. தமிழக மார்க்சிஸ்ட்டுகள் உடனடியாக அதில் இணைந்து பணியாற்றத் தொடங்கினோம்.

நேரடியாகக் கிராமப்புற எளிய மக்களைத் தொட்டுப் பேசும் இயக்கமாக அது மலர்ந்தது. அதிக பட்சம் தெருமுனைக்கூட்டம் வரை சென்றிருந்த நாங்கள் அறிவொளி இயக்கத்தில்தான் உழைப்பாளி மக்களின் மூச்சுக்காற்று எங்கள் மீது படும் அளவுக்கு நெருக்கத்தில் நின்றோம். குறிப்பாகப் பெண்கள் இலட்சம் இலட்சமாக அறிவொளி வகுப்புகளில் பங்கேற்று எங்களோடு பேசினார்கள். அவர்களின் மொழியை, கண்ணோட்டத்தை, கருத்துகளை நேரடியாகக் கேட்கும் மாபெரும் அனுபவம்

எங்களுக்குக் கிட்டியது. அதுவரை நாங்கள் புரிந்துகொண்டிருந்த இந்தியா இந்தியாவே அல்ல என்கிற தன்னுணர்வு எங்களுக்கு ஏற்பட்டது.

மக்கள் காட்சி ரூபமாகச் சிந்திக்கிறார்கள். முற்போக்கு இயக்கங்கள் எல்லாமே கருத்துரீதியாக மக்களிடம் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகவே நாம் மக்களிடம் போய்ச்சேரவே இல்லை என்பதை மக்கள் கற்றுக்கொடுத்தார்கள். இலக்கியம் பற்றிய என்னுடைய பார்வை மட்டுமல்ல வாழ்க்கை பற்றிய என் அடிப்படைக் கண்ணோட்டமே மாறியது. **மக்களுடன் மாபெரும் உரையாடலைத் தொடங்க வேண்டியுள்ளது. எழுத்தும் கலையும் எல்லாம் அதற்காகவே வேலை செய்ய வேண்டும்** என்ற புரிதல் ஏற்பட்டது.

அறிவொளி இயக்க அனுபவங்களையும் படிப்பினைகளையும் எந்த அரசியல் இயக்கமும் உள்வாங்கிக்கொள்ளவில்லை என்பது வரலாற்றுச்சோகம்.

● உங்களது சிறுகதைகள், இயக்குநர் சசி அவர்களால் "பூ" எனும் பெயரில் திரைப்படமாக உருவானதன் பின்னணியையும், உங்களது திரை அனுபவத்தையும் விளக்கவும்.

☆ என்னுடைய வெயிலோடு போய், அசோக வனங்கள் ஆகிய இரு சிறுகதைகளையும் இணைத்து பூ திரைப்படத்துக்கான திரைக்கதையை இயக்குநர் சசி எழுதினார். அக்கதைகள் மீது அவர் கொண்டிருந்த உளப்பூர்வமான ஈடுபாடு என்னை வியப்பிலாழ்த்தியது. அவர் கேட்டதும் சரி என்று சொன்னேன். கதையைச் சிதைக்காமல்,நான் சொன்ன சில அடிப்படையான மாற்றங்களையும் சேர்த்துப் படமாக எடுத்தார். அது வெற்றிப்படமாகவும் அமைந்ததில் எனக்கு மகிழ்ச்சியே. அப்படத்துக்காக **2008 இல் தமிழக அரசின் சிறந்த கதாசிரியர் விருது எனக்கு அன்றைய முதல்வர் திரு. கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் வழங்கப்பட்டது**. மற்றபடி அப்படத்தில் நான் எந்த வேலையும் செய்யவில்லை ஒரே ஒருநாள் படப்பிடிப்பைப் பார்க்கச் சென்றேன். எல்லாம் சசியின் வேலைதான்.

● வ.உ.சி. அவர்கள் குறித்து இரண்டு நூல்கள் எழுதி உள்ளீர்கள். வ.உசி அவர்களின் தொழிற்சங்க முயற்சிகள் குறித்த உங்களது கண்ணோட்டம் என்ன?

☆ இந்தியத் தொழிற்சங்க இயக்கத்துக்கே முன்னோடி வ.உ.சி.தான்.1908 தூத்துக்குடி கோரல் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் அவர் இல்லாமல் நடந்திருக்க வாய்ப்பே இல்லை. கூலி உயர்வு,வேலை நேரம் உள்ளிட்ட முக்கியமான கோரிக்கைகள் வென்றெடுக்கப்பட்ட வெற்றிகரமான போராட்டம் அது.ஆனால் அந்தப் பலன்களை அத்தொழிலாளிகள் அனுபவிக்கும் முன்பே வ.உ.சி கைதாகியதால் தொழிலாளிகள் மீண்டும் வேலை நிறுத்தம் செய்தார்கள். அது முற்றிலும் அரசியல் வேலை நிறுத்தமாகும். பெற்ற பலன்கள் அத்தனையும் பறிபோனது அந்த அரசியல் வேலை நிறுத்தத்தால்.

தொழிற்சங்கப்போராட்டத்தை தூத்துக்குடி மக்களின் போராட்டமாக மாற்றிய மாபெரும் திருப்புமுனையை வ.உ.சி.தான் ஏற்படுத்தினார். இன்றைக்கும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் அது. அடுத்தகட்டத்

தமிழ்ச்செல்வன், அவரது இணையர் வெள்ளைத்தாய், மகன் சித்தார்த், மருமகள் பிரதீபா என்ற மகாலட்சுமி, பேத்தி தமிழ்மதி, பேரன் மதிமகிழன், தமிழ்ச்செல்வன் தம்பியின் பேரன் தியோ சாக்கியா.

தலைமையை உருவாக்காமல் போனது அவ்வியக்கத்தின் பலவீனம்.

வ.உ.சி போல ஒரு தலைவரை, தியாகசீலரை, தன்னலமற்ற போராளியை இந்திய வரலாற்றில் காண முடியாது. கப்பல், செக்கு என்கிற இரண்டு குறியீடுகளுக்குள் அவரை அடைக்க முடியாது. ஆ.இரா.வேங்கடாசலபதியின் வ.உ.சி குறித்த நூல்களைத் தமிழ்ச்சமூகம் விரிவாக வாசிக்க வேண்டும்.

● தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தில் நீங்கள் இணைந்த தருணம் மற்றும் அதில் உங்களது பணிகளைத் தொகுத்துக் கூற இயலுமா?

☆ இராணுவத்தில் இருந்தபோதே விடியல், செம்மலர் போன்ற இதழ்களைச் சந்தா கட்டி வருவித்து வாசித்துக்கொண்டிருந்தேன். 1978 இல் ஊர் திரும்பி அஞ்சல் துறையில் கோவில்பட்டியில் பணிக்குச் சேர்கையில் அங்கே தொழிற்சங்க இயக்கம் துடிப்பாகத் தடதடத்துக்கொண்டிருந்தது. அதில் என்னை மனப்பூர்வமாகவும் முழுமையாகவும் இணைத்துக்கொண்டேன். அதன் வழியாக மார்க்சிஸ்ட் கட்சியுடன் முதலில் தொடர்பு ஏற்பட்டு அதன் பிறகு கட்சியின் வழிகாட்டலில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்சங்கத்தில் இணைத்துக்கொண்டேன். விரைவில் நான் கோவில்பட்டிக் கிளைச்செயலாளராகவும் பின்னர் ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தின் செயலாளராகவும் பணியாற்றும் வாய்ப்பு அமைந்தது.

நெல்லை மாவட்டத்தில் பல சோதனை முயற்சிகளைச் செய்தோம். அதில் முக்கியமானது உலகத்திரைப்படங்களை தெருக்களில் திரையிடுவது. பெங்களூர் திரைப்பட ஆவணக்காப்பகத்திலிருந்து படப்பெட்டிகளைத் தருவித்து ஊர் ஊராகப் புரொஜெக்டரைத் தூக்கிக்கொண்டு போய் திரையிடுவோம். **தோழர் நாறும்பூநாதன், கிருஷி** போன்றவர்கள் இதில் சிறப்பாகப் பங்களிப்புச் செய்தனர். அப்போது அமெரிக்க சோவியத் மோதல் முற்றி வந்த காலம். அணு ஆயுதங்களுக்கு எதிரான கண்காட்சி ஒன்றை நெல்லை மாவட்டக்குழு சார்பாகத் தயாரித்து மாவட்டம் மாவட்டமாகத் தூக்கிக்கொண்டுபோய் வைத்துக் காட்சிப்படுத்தினோம். நான்கு நாள் திரைப்பட

இரசனை முகாம் நடத்தினோம். **சக்கரவர்த்தி, சிவக்குமார், கல்யாணராமன்** உள்ளிட்ட சென்னை பிலிம் சொசைட்டி தோழர்களைக்கொண்டு திரை வகுப்புகள் நடத்தினோம். வீதி நாடகக்குழுக்களை உருவாக்கி மாவட்டம் முழுதும் நாடகங்கள் போட்டோம்.காந்தி கிராமத்திலிருந்து **நாடகப்பேராசிரியர் எஸ்.பி.சீனிவாசன், அஸ்வகோஷ்** போன்றவர்களை அழைத்து நாடகப்பயிலரங்குகள் நடத்தினோம்.

2005ஆம் ஆண்டு மாநிலப்பொதுச்செயலாளராக என்னை இயக்கம் தேர்வு செய்தது. தமுஎகச ஒரு சனநாயக இயக்கம். கூட்டுத்தலைமையால் வழி நடத்தப்படும் இயக்கம். பொதுச்செயலாளர் என்கிற தனி மனிதருக்கு புதிய திட்டங்களை முன்மொழியும் வாய்ப்பு இருக்கும். எடுத்து நடத்துவது ஒட்டு மொத்த இயக்கம்தான். பொதுச்செயலாளராகச் சிலவற்றை முன் வைக்க முடியும். அப்படி நான் முன் வைத்தவை எனச் சிலவற்றைச் சொல்லிக்கொள்ளலாம்:

(1) ஆறு ஆண்டுகளுக்கு மேல் மாநிலத்தலைவர், பொதுசெயலாளர் பொறுப்பில் யாரும் நீடிக்கக்கூடாது என்கிற அமைப்பு விதி திருத்தம்.

(2) நாட்டுப்புற ஆய்வுகளின் மீது அமைப்பின் கவனத்தைக் குவித்தது

(3) அம்பேத்கரை அறிவோம் என்கிற ஐந்துநாள் பயிலரங்கினை நெல்லையில் நடத்தியது. பெரியார் 125 விழாவை தமிழகமெங்கும் அமைப்பின் சார்பாகக் கொண்டாடியது

(4) திரை இயக்கத்தை விடாப்பிடியாக அமைப்பின் நிகழ்ச்சி நிரலில் கொண்டுவந்தது. அது இன்று திரைப்பள்ளி நடத்தும் இடத்துக்கு மேலும் சென்றுள்ளது.

● புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறித்த உங்களது மதிப்பீட்டை அறிய விழைகிறோம். பொதுவாகப் பாரதியைப் போல், பாரதிதாசனை இடதுசாரிகள் கொண்டாடவில்லை என்றொரு விமர்சனம் உள்ளது. அது குறித்த உங்களது நிலைப்பாடு?

☆ மார்க்சிய இயக்கத்துக்கும் பெரியாருக்கும் இருந்த இடைவெளியிலிருந்து இதைப்புரிந்துகொள்ள வேண்டும் என

நினைக்கிறேன். பெரியார் சாகும்வரை கம்யூனிஸ்ட்டுகளை வன்முறையாளர்கள் என்றுதான் பார்த்தார். வெண்மணி குறித்த பெரியாரின் விடுதலை இதழ்க் கட்டுரை ஒரு எடுத்துக்காட்டு. ஆள்பவர்களின் வன்முறையால் காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வரும் ஓர் இயக்கத்தை வன்முறைப்பாதையில் செல்பவர்கள் என்று பெரியார் பார்த்ததை என்னாலேயே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அன்றைய கம்யூனிஸ்ட்டுகள் எப்படி ஏற்றுக் கொண்டிருப்பார்கள்? பாரதிதாசன் முற்றிலும் பெரியார் வழியில் சென்றவர் என்பதால் ஓர் இடைவெளி ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் 1980 களிலிருந்து எங்கள் பார்வை மாறிவிட்டதே. பாரதி-பாரதிதாசன்-பட்டுக்கோட்டை ஆகிய முப்பெரும் கவிஞர்களை எங்கள் முன்னோடிகள் என்றே எங்கள் பதாகைகளில் பொறிக்க ஆரம்பித்து விட்டோமே? 2021 முதல் அம்மூவரோடு தமிழ் ஒளியையும் பால சரஸ்வதியையும் சேர்த்து ஐம்பெரும் முன்னோடிகள் என்று அறிவித்துக் கொண்டாடி வருகிறோம். இப்போது அந்த விமர்சனத்தை வைக்க முடியாது. பாரதிதாசன் நூற்றாண்டையும் பரவலாகக்கொண்டாடினோம்.

● **கவிஞர் தமிழ் ஒளியைத் தற்பொழுது கொண்டாட வேண்டியதன் தேவையை விவரிக்கவும்.**

☆ இந்துத்துவ அரசியல் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய நாட்களில்தான் தமிழ் ஒளி நமக்கு மிகவும் தேவைப்படுகிறார். பாரதிதாசனிடம் பாடம் கேட்டு வளர்ந்த அவர் பின்னர் பொதுவுடமை இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டவர். இறுதிவரை மார்க்சியப்பார்வையையே பற்றி நின்றவர். அவருடைய கவிதைகளும் கதைகளும் மட்டுமின்றி அவரது ஆய்வு நூல்கள் ஐந்துமே சமகால அரசியல் போராட்டத்தில் நமக்குக் கைவாளாகத் திகழும் சக்தி மிக்கவை.

1948 இல் அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தமிழ்நாடு கிளையின் பொதுச்செயலாளராக இயங்கியவர் என்கிற ஒன்றே போதாதா?

● **"பிற மணிக்கொடி எழுத்துக்காரர்களைப் போல உரத்த குரலைத் தவிர்த்து உள்ளடங்கிய மொழியில் அகத்தின் போக்கைக் கதையாக்கும் லட்சியம் அண்ணாவுக்கு இல்லை" என்பதான ஒரு மதிப்பீடும், "அண்ணாவின் கதைகள்**

மொழிபெயர்க்கப்பட்டு பிற இந்திய மொழிகளுக்குச் சென்றால் மிக முக்கியமான சமூக சீர்திருத்தக் கதைகளாக வரவேற்பு பெறும் எனத் தோன்றுகிறது. தமிழ்ச் சமூக வாழ்வின் கொந்தளிப்பான காலகட்டத்தின் பிரச்சினைகளை எந்தவித மூடாக்கும் இல்லாமல் பேசும் கதைகள் இவை"



என்பதான ஒரு மதிப்பீடும் அண்ணாவைப் பற்றி உங்களது பார்வையில் காணக் கிடக்கிறது. இவற்றை முரணற்ற இரு பார்வைகளாக எடுத்துக் கொள்ளலாமா?

☆ மணிக்கொடிக்காரர்களுக்கு இலட்சியம் கலையும் கலை நேர்த்தியும் கலை அமைதியும் மட்டும்தான் அதற்கு மேல் அவர்களுக்கு ஒரு இலட்சியமும் கிடையாது. ஆனால் அண்ணாவுக்கு சமூகமும் சமூக மாற்றமும் முற்போக்கான திசைவழியும் முக்கியம். அதற்காகவே தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தவர். அப்படிப்பட்ட தலைவர் சிறுகதை எழுத வரும்போது கலை அமைதியை மட்டும் நோக்கமாகக் கொள்ள முடியாது. அது யாரை நோக்கி எப்படிச் சென்று சேர வேண்டும் என்பதே அவருக்கு முக்கியமாக இருந்திருக்கும். அது இயல்பானதே. என் பார்வையில் முரண் இல்லை.

● கொங்கு மண்டலப் படைப்பாளிகளில் அதிகம் பேசப்படுபவரான பெரியசாமித் தூரன் கதைகள் பற்றித் "தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்" நூலில் காணக் கிடைக்கவில்லை. அவரது பங்களிப்பு குறித்த உங்களது கண்ணோட்டம்?

☆ படைப்பாளிகளின் ஒட்டுமொத்தக் கதைகளையும் வாசித்த பிறகுதான் அப்படைப்பாளிகள் பற்றி எழுதுவது என்கிற அடிப்படையை நான் வகுத்துக்கொண்டேன். பெ.தூரன் மட்டுமல்ல இன்னும் பல படைப்பாளிகளின் எல்லாப்படைப்புகளையும் நான்

வாசித்து முடிக்காத நிலையில் அவர்களைப்பற்றி எழுதுவதை அடுத்த தொகுதிக்காகத் தள்ளி வைத்துள்ளேன்.

● "பிரச்சனைகளைப் பேசும்போது அதற்கான தீர்வையும் தேட வேண்டியது, ஒரு எழுத்தாளனுக்கு உள்ள தார்மீகப் பொறுப்பாயிடறதுன்னு நெனச்சேன். அந்த மாதிரியான என் கதைகள்ல அதற்கான தேடல் இருக்கும். வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ தீர்வு அந்தப் படைப்புக்குள்ள இருக்கும். தீர்வைப் பத்திப் பேசும்பொழுது அது பிரச்சாரமாகப் பார்க்கப்படுதுன்னு நெனைக்கறேன். என் கதைகளில் வெளிப்படையான பிரச்சாரத் தன்மை இருந்ததற்குக் காரணம், பிரச்சினைகளையும் அதற்கான தீர்வையும் பற்றிப் பேசியதுதான்" எனப் பா.செயப்பிரகாசம் ஒரு பேட்டியில் குறிப்பிட்டதை அவரைப் பற்றிய உங்களது கட்டுரையில் சுட்டிக் காட்டி உள்ளீர்கள். இதே போல் உங்களது சிறுகதைகளும் பிரச்சாரத் தன்மை கொண்டதாக ஒரு சிலர் விமர்சிக்கின்றனர். இந்தச் சிக்கலை எவ்வாறு எதிர்கொள்வது?

☆ பா.செயப்பிரகாசத்தின் சில கதைகளில் காணப்படும் பிரச்சாரத்தொனி கூட என்னுடைய கதைகளில் கிடையாது.**நான் எழுதி வெளியிட்டதே 32 கதைகள்தாம்.** அதில் எந்தக் கதை பிரச்சாரமாக உள்ளது என யாருமே இன்றுவரை குறிப்பிட்டுப் பேசவில்லை. சுந்தரராமசாமியே என் கதைகள் கலை அமைதி கொண்டவை என்றுதான் காலச்சுவடு இதழில் எழுதினார். என் கதைகளில் இதெல்லாம் பிரச்சாரம் என்று யாரேனும் வந்து சொல்லுங்களேன் என்று பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறேன். **பொதுவாக இடதுசாரிகளின் படைப்புகளைப் பொருட்படுத்தி வாசிக்காமலேயே நாட்டாமைத் தீர்ப்புகளைத் தடாலடியாகச் சொல்வது நவீன இலக்கிய உலகில் க.நா.சு.காலந்தொட்டு தொடர்கின்ற ஒரு பாரம்பரியமாகும். உள்நோக்கம் கொண்ட இத்தகைய அவதூறுகளைப் பொருட்படுத்தத் தேவையில்லை.**

● படைப்புகளில் பின்நவீனத்துவம் பற்றி இன்று அதிகம் பேசப்படுகிறது. அது குறித்த உங்கள் பார்வை என்ன?

☆ பின் நவீனத்துவம் குறித்த உரையாடல்கள் தமிழ் இலக்கியப்பரப்பில் பேசி ஓய்ந்துவிட்டதாகவே நான் கருதுகிறேன்.

90களில் பேசினார்கள். சில சலசலப்புகள் தோன்றி அப்போதே மறைந்தும் விட்டதாக நினைக்கிறேன்.

● **காட்சி ஊடகங்கள் பெரும் செல்வாக்குச் செலுத்தும் இன்றைய காலகட்டத்தில் வணிகநோக்கமற்ற (Middle Magazines) அச்சிதழ்களுக்கான தேவை உள்ளதா?**

☆ **சிற்றிதழ்கள், இடை நிலை இதழ்கள்தாம் இலக்கிய உலகின் மனச்சாட்சியாக இயங்குபவை. தமிழில் அவை ஆற்றியுள்ள பங்கு மகத்தானது.** வெவ்வேறு சிந்தனைப்பள்ளிகளைச் சேர்ந்த இதழ்களுக்கிடையில் கருத்து மோதல்கள் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு இதழுக்கும் ஒரு தேவை நம் சமூகத்தில் எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

● **தலித் அழகியலை நாமே உருவாக்க வேண்டும் எனவும், பச்சாதாபம் கோரும் தொனியைப் புறக்கணித்துத் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும் குரலை (Assertive Voice) படைப்புகளில் வெளிப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடுகிறீர்கள். இதன் தேவையைத் தெளிவு படுத்தவும்.**

☆ நவீன இலக்கியத்தின் விதிகள் மேனாட்டாரால் உருவாக்கப்பட்டவை. அவற்றை தமிழுக்குப் பதிவிறக்கம் செய்தவர்கள் 1920களில் வாசிப்பு வாய்ப்பைப்பெற்ற உயர்சாதியினர். அவர்களுக்கு வாழ்வியல் முக்கியமில்லை. கலையின் சாஸ்திரம் கெட்டுப்போகக்கூடாது என்பதுதான் முக்கியம்.அவர்கள் உருவாக்கிய செவ்வியல் கலைகள். செவ்வியல் இலக்கிய சாஸ்திரங்கள் நம்முடைய கதைகளைச்சொல்ல உதவாது என்பது என் கருத்து. நமக்கான அழகியலை நாம் நமது நாட்டுப்புற இலக்கிய மரபிலிருந்து நாமே உருவாக்க வேண்டும். தலித் படைப்பாளிகளில் சிலரே அதை முயன்றும் பார்த்துள்ளனர். அத்திசையில் conscious ஆக வலுவாகக் காலெடுத்து வைப்போமே என்கிறேன் நான். ஒரு கட்டத்தில் பின் நவீனத்துவமே தலித் படைப்பாளிகளுக்கான பாதை எனத் தோழர் ராஜ்கௌதமன் குறிப்பிட்டதை இத்துடன் இணைத்துப்பார்க்கலாம். யதார்த்தவாதம் தனக்குப் போதுமானதாக இல்லை என அவர் உணர்ந்திருந்தார்.

தலித் மக்கள் எழுச்சி பெற்றுத் தங்களுக்கு உரிய இடத்தை உரிமையுடன் கேட்கின்ற காலம் இது. இலக்கியத்திலும் அது

அத்தகைய அழுத்தமான தொனியில் பதிவாக வேண்டும். கெஞ்சும் காலம் மலையேறிவிட்டது.

● **தலித் எழுத்தாளர் என இன்று ஒரு படைப்பாளியை அடையாளப்படுத்த வேண்டுமா? பூமணி போன்றோர், கரிசல் எழுத்தாளர் என்றோ, தலித் எழுத்தாளர் என்றோ தன்னை அடையாளப் படுத்துவதைத் தான் விரும்பவில்லை எனவும், அதே சமயம் சாதியை மறைப்பதற்கான தேவை தனக்கு இல்லை எனவும் அவர் தெளிவு படுத்துகிறார். எனவே இத்தகைய பின்னணியில்தான் இந்த வினாவை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது?**

☆ அடையாளப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. எல்லோருமே தமிழ் எழுத்தாளர்கள்தான். சாதியை மறைக்க வேண்டியதும் இல்லை. சாதிய சமூகத்தில்தானே பிறந்திருக்கிறோம். சாதி அபிமானமோ சாதித் துவேஷமோ இல்லாமல் இருப்பதுதான் முக்கியம். ஒரு படைப்பாளியை முழுமையாகப் புரிந்துகொள்ள அவர் என்ன சாதிக்காரர் என்பதும் தெரிந்தால் நல்லதுதான் என்று சமீப காலமாக நான் நினைக்க ஆரம்பித்துள்ளேன்.

● **இன்றைய பெண் எழுத்துக்களில், பாலின ஒடுக்கு முறை குறித்துப் பெரிதும் பேசப்படுவதை அறிவோம். அதே அளவு சாதி குறித்துப் பெண் எழுத்தாளர்கள் எழுதுவதில்லை என்பது போன்ற கருத்து குறித்து உங்கள் கணிப்பு என்ன?**

☆ பெண் படைப்பாளிகள் பாலின ஒடுக்குமுறை பற்றி மட்டும்தான் பேசுகிறார்கள் என்பது பழைய விமர்சனம். அதையெல்லாம் பெண்கள் தாண்டி வந்துவிட்டார்கள். **ஜெயராணி, குட்டிரேவதி, அமுதாசெல்வி, கவின்மலர்** என்று பெண் படைப்பாளிகள் முழு உலகத்தையும் கேள்விக்குள்ளாக்க வந்து கொண்டிருக்கிறார்கள்.

● **சிறார் இலக்கியங்கள் குறித்து மிகுந்த கரிசனம் கொண்டவர் நீங்கள் இன்றைய நிலையில் சிறார் இலக்கியங்கள் குறித்த உங்களது மதிப்பீடு என்ன?**

☆ **அழ.வள்ளியப்பா, பெ.தூரன், வாண்டுமாமா** போன்ற முன்னோடிகளின் காலம் மீண்டெழுந்து வந்துகொண்டிருப்பதாக நான் நம்பிக்கையுடன் பார்க்கிறேன். கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகக் கணிசமான எண்ணிக்கையில் சிறார் இலக்கியப்

படைப்பாளிகள் வந்துவிட்டார்கள். பல பரிமாணங்களில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். கொரோனா ஊரடங்கு காலத்தில் நிறைய ஆன்லைன் கதைசொல்லிகளும் வந்துவிட்டார்கள். வெள்ளம் வரும்போது குப்பை கூளமும் வருவதுபோல தரமற்ற எழுத்துகளும் கூட்டத்தோடு கூட்டமாக வந்துகொண்டுதான் இருக்கின்றன. சரியான விமர்சன மரபை உருவாக்கும்போது சிறார் இலக்கியம் இன்னும் புதிய உயரங்களைத் தொடும்.

● கிராம்சி போன்ற மார்க்சிய அறிஞர்கள், மேல் கட்டுமானம் (Super structure) மற்றும் பண்பாட்டு அரசியல் குறித்து உரத்துப் பேசுகின்றனர். சனாதனம் நோக்கிச் சில தமிழ் எழுத்தாளர்கள் சாய்ந்து வரும் சூழலில், ஒரு கலாச்சாரப் புரட்சி இன்றைய காலகட்டத்தில் தேவை என நாம் பாவிக்கலாமா?

☆ ஒரு கலாச்சாரப் புரட்சிக்கான தேவை கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழகத்தில் நிலவிக்கொண்டுதான் இருக்கிறது. சங்க காலத் தமிழர் வாழ்வியல் முன்னெடுத்த முற்போக்குப் பண்பாட்டுக் கூறுகளை நாம் அடையாளம் கண்டு முன்னெடுக்க வேண்டும். தொடர்ந்த சமண, பௌத்த மரபுகள், சித்தர் மரபு, பாரதி, வள்ளலார் போன்றோர் முன்னெடுத்த பண்பாட்டு அம்சங்கள் மதங்களுக்கு உள்ளேயும் மதங்களை மறுத்த எதிர் மரபிலும் என ஊடாடிய அத்தனை பண்பாட்டு அசைவுகளையும் நாம் உள்வாங்க வேண்டும். தமிழர் பண்பாட்டுப் பெருமிதம் குறித்த வெட்டிப்புல்லரிப்புகளைப் பெருக்கித் தள்ளிவிட்டு, அறிவியல்பூர்வமான நமது மொழிக்கே உரிய பெருமிதங்களை அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. **மொழி வழித் தேசிய இனங்களில் ஒன்றான-தமிழ்த்தேசிய இனமாகிய நாம் எப்பக்கமும் சாய்ந்துவிடாமல் நம் பண்பாட்டு வரலாற்றை நிதானமாக உள்வாங்கி இன்றைய காலத்துக்கான பண்பாட்டுப் போர் முழக்கங்களை. உருவாக்க வேண்டும்.**

● தமிழகத்தை உலுக்கிய போராட்டங்களில் குறிப்பிடத்தக்கது இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பதை அனைவரும் அறிவர். ஆனால் தமிழ் இலக்கியத்தில் அது குறித்துப் பெரிதும் பேசப்படவில்லை என்பது பெரும் அவலம். இது பற்றி உங்களது கருத்து என்ன?

☆ **தோழர் பாட்டாளி எழுதிய "தீராக்களம்"** நாவலில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் விரிவாகப் பதிவாகியுள்ளது. மற்றபடி வேறு யாரும் எழுதவில்லைதான். இனியேனும் படைப்பாளிகள் முயற்சிக்க வேண்டும். இந்தி எதிர்ப்புப் போரின் தொடர்ச்சியாக திமுக ஆட்சிக்கட்டிலில் ஏறியது. மக்களின் எதிர்பார்ப்புகளை அது நிறைவேற்றாததால் இந்தி எதிர்ப்புப் போராட்ட நாயகர்களான பா.செயப்பிரகாசம் போன்றோரே அதை விட்டு வெளியேறினர். அவ்வியக்கத்தைப் பற்றி நினைவு கூரவோ இலக்கியத்தில் பகிரவோ அவர்கள் ஆர்வம் கொள்ளவில்லை.

● இன்று அதிகம் சர்ச்சைக்குள்ளாகும் ஜெயமோகனின் படைப்புகள் குறித்த உங்களது கணிப்பைப் பதிவிடுக!

☆ முழுமையாக வாசிக்காமல் ஒரு கணிப்பை முன் வைப்பது சரியல்ல. விரைவில் அதையும் செய்வேன். சில நாவல்கள், சில சிறுகதைகளை வாசித்திருக்கிறேன். சோற்றுக்கணக்கு, நூறு நாற்காலிகள், யானை டாக்டர் போன்றவற்றை முக்கியமான சிறுகதைகள் என்று கருதுகிறேன். அவருடைய எழுத்துகளே மண் மூடிப்போகும் அளவுக்கு அவர் நிறையப் பேசி வைக்கிறார்.அதிரடியான கருத்துகளைக் கொட்டித் தீர்க்கிறார். அவற்றையெல்லாம் விலக்கிவிட்டு அவருடைய படைப்புகளை வாசிக்கப் போராட வேண்டும். பாசிசத்தின் இலக்கிய முகம் என்கிற தோழர்களின் 400 பக்க நூல் வேறு குறுக்கே நிற்கிறது. கூடிய விரைவில் அவர் படைப்புகளைக் காய்தல் உவத்தல் இன்றி வாசிப்பேன். அளவிலும் எக்கச்சக்கமாக எழுதி வைத்திருக்கும் படைப்பாளி அவர்.

● தொடக்க காலத்தில் கவிதைகள் எழுதிவந்தீர்கள். திடுமென அதை நிறுத்த நேர்ந்ததன் காரணம் என்ன? உங்கள் கவிதைப் பயணம் தொடருமா?

☆ கவிதை என்னைக் கைவிட்டு 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. இனி கைவருமா என்று தெரியவில்லை. ஒரு 100 கவிதைக்ள் எழுதியிருப்பேன். அவை கவிதைகளாக இல்லை என்று எனக்கே பட்டதால் அவற்றைத் தொகுக்கக்கூட இல்லை.

● சாதியம் / கார்ப்பரேட்மயம் என்பதாக மாறிவிட்ட இன்றைய வாழ்வில் ஒரு எழுத்தாளனின் கடமை என்னவாக இருக்கும்?

இலக்கியத்தை ஓர் அறிதல் முறையாக நாம் கொள்ள வேண்டும். வாசிப்பு இன்பம் தரும் வஸ்து என்பதற்கு அப்பால் இலக்கியத்துக்கு இன்னும் சில கடமைகள் இருப்பதாக நாம் கொண்டால், சமகால வாசகர்களோடு உரையாட வேண்டிய புள்ளிகளை இலக்கியம் தொட்டுக்காட்ட வேண்டும் எனக்கருதுகிறேன். தமிழ்ச்சமூகத்தின் சிறு பகுதியான நடுத்தர வர்க்கத்தின் புழங்கு பொருளாகத்தான் நவீன இலக்கியம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அந்த வர்க்கத்தின் தூங்கும் மனசாட்சியை உலுக்கி எழுப்ப வேண்டிய கடமை இலக்கியத்துக்கு உண்டு. கார்ப்பொரேட்டியமும் இந்துத்துவமும் நாசகார சக்திகள் என்பதை எழுத்தாளர்கள் கூடி உணர வேண்டும். பாசிசம் வளரும்போது கலைஞர்கள் எழுத்தாளர்களில் ஒரு பகுதியினர் பாசிசத்தின் கால்களில் போய் விழுவார்கள்.ஜெர்மனியிலும் இத்தாலியிலும் அதை பார்த்தோம். அதை தமிழ் இலக்கிய உலகில் இன்றைக்கு அப்பட்டமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். **பாசிசத்தின் நட்டுவாங்கத்துக்கு ஆடுகின்ற எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் பலரை நாம் இன்று பார்த்துக்கொண்டே இருக்கிறோம். இது அபாயகரமான போக்கு. தாக்குப்பிடித்து நிற்பது மனச்சாட்சியுள்ள எழுத்தாளனின் கடமை.**

அறிவொளி இயக்கத்தில் இலக்கியத்தை அடுத்த வர்க்கங்களிடம் எடுத்துச்செல்ல முயன்றோம். உழைக்கும் வர்க்கத்திடம் இலக்கியத்தை எடுத்துச்செல்ல இயக்கங்கள் தேவை. மக்கள் வாசிப்பு இயக்கம் போன்றவை தேவை. அவற்றை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

♦♦♦

தகவல் தொழில்நுட்பத்துறையில் பெண்களின் பங்கு – ஒரு பார்வை

பரிமளா

தகவல் தொழில்நுட்பத் துறையில் பெண்கள் -
வாய்ப்புகள், எதிர்கொள்ளும் சவால்கள்
இந்தியத் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சிப் பாதை

சுதந்திரத்திற்கு பின்னர் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் (STEM) துறைக்குக் கொடுக்கப்பட்ட கவனம் காரணமாக ஐ.ஐ.டி உள்பட அரசால் தொடங்கப்பட்ட கல்லூரிகள் மூலம் உருவான திறன்மிக்க மனிதவளம். கணிப்பொறி இறக்குமதியைத் தாராளமயமாக்கி, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்து, மென்பொருள் ஏற்றுமதிக்கு ஆதரவாக இருந்த 1980களில் உருவாக்கப்பட்ட கணிப்பொறிக்கான கொள்கை. அமைக்கப்பட்ட மென்பொருள் பூங்காக்கள். முன்னோடியாகக் களத்தில் இறங்கிய டிசிஎஸ், விப்ரோ போன்ற நிறுவனங்கள் பங்களிப்பு எனத் தொடங்குகிறது.

Y2K (Year 2000 bug) பிரச்சினையைத் தீர்க்க அதிக எண்ணிக்கையில் மென்பொருள் வல்லுநர்கள் தேவைப்பட்டனர். அது இந்தியாவின் திறன் வாய்ந்த தொழிலாளர்களைக் கண்டுகொண்டது. 1990-க்கு பின்னர் தாராளமய பொருளாதாரக் கொள்கையும் இந்தியா தொழில்நுட்பத்துறையில் வேகமான வளர்ச்சியைக் காண வழி வகுத்தது. அயன்மைப் பணிகளுக்கான

(outsourcing) ஓர் இடமாக இருந்து இன்று இந்திய ஐடி துறை ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் என நகர்ந்து கொண்டு இருக்கிறது.

குறிப்பாக இந்தியாவில் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கொண்ட, திறன்மிக்க மனிதவளத்தைக் கொண்ட தென் இந்திய மாநிலங்கள் இந்தத் துறையின் வளர்ச்சியால் பலன் அடைந்துள்ளன. இந்திய அளவில் அதிக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் குவிந்துள்ள நகரங்களாக **சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், புனே** உள்ளன.

குறிப்பாகத் தமிழ்நாடு இத்தகைய மனித வளத்தில் முன்னணியில் உள்ளது. இதற்குத் தமிழ்நாட்டின் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சூழல், கல்வியைத் தங்களின் வாழ்வின் ஏற்றத்திற்கான ஒரு கருவியாகப் பார்க்கும் சமூகச் சூழல், அதிக எண்ணிக்கையிலான பொறியியல் கல்லூரிகள் ஆகியவை முக்கியக் காரணங்களாகும்.

பொருளாதாரத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையின் பங்கு

2024-25 நிதியாண்டின் முடிவில் இந்தியாவின் தகவல் தொழிநுட்பத்துறையில் நேரிடையாகப் பணிபுரியும் தொழிலாளர் எண்ணிக்கை ஏறக்குறைய 58 லட்சம்! மறைமுகமாக சுமாராக மூன்று மடங்கு வேலை வாய்ப்புகளை இந்தத் துறை உருவாக்குகிறது. இதில் **பெண் ஊழியர்கள் பங்கேற்பு விகிதம் 34% முதல் 36% வரை! அதாவது மூன்றில் ஒரு பங்கு பெண் ஊழியர்கள்! ஏறக்குறைய 20 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பணிபுரியும் ஒரு துறையாக தகவல் தொழிநுட்பத்துறை உள்ளது.** 2025-2026 நிதியாண்டிற்குள் $300 பில்லியன் வருமானத்தையும் உள்நாட்டு உற்பத்தியில் 10% பங்களிப்புச் செலுத்தும் ஒரு துறையாகக் கணிக்கப்படுகின்றது.

ஒட்டுமொத்தத் தொழிலாளர்களில் ஆறில் ஒரு பங்கு (2022 ஆண்டு தகவல்படி) ஏறக்குறைய 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னை, கோவை உள்ளிட்ட நகரங்களில் பணிபுரிகின்றனர். இவர்களில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பெண் பணியாளர்கள்!

தமிழ்நாட்டில் பணிபுரியும் பணியாளர்களில் 80% தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள்!

அமெரிக்காவின் சிலிக்கான் பள்ளத்தாக்கில் உள்ள தொழில்நுட்பத்துறை ஊழியர்களில் மூன்றில் ஒருவர் இந்தியராக உள்ளார். ஆண்டுதோறும் திறன் மிக்க ஊழியர்களுக்கான அமெரிக்க அரசால் வழங்கப்படும் வேலை வாய்ப்பு விசாவான H1B யை 70-74% இந்தியர்கள் பெறுகின்றனர்.

பணி நிலைமைகள் மேம்பட்ட ஒரு துறை

ஒப்பீட்டளவில் மற்ற துறைகளைக்காட்டிலும் அதிக அளவில் உபரி/இலாபம்/ஊதியம் உள்ளிட்ட பிற பணப்பலன்கள் தருகின்ற ஒரு துறையாகத் தகவல் தொழில்நுட்பத் துறை உள்ளது. குறிப்பாக குளிரூட்டப்பட்ட கண்ணாடிக் கட்டிடங்கள், உணவுக்கூடங்கள், ஓய்வு அறைகள், மேலாளர், குழு உறுப்பினர், சக பணியாளர், ஆண், பெண் உறவுகளில் பணி இடங்கள் மேற்கத்திய பண்பாடு செல்வாக்கு செலுத்தும் இடங்களாக உள்ளன. ஒரு நிறுவனத்தின் தலைவர் உள்பட யாரையும் மிஸ்டர் என பெயர் சொல்லி அழைக்கும், அதிகாரமட்டத்தில் யாருடனும் கலந்துரையாடும் வாய்ப்பு என இன்றும் நிலவுடமைப் பண்பாடு செல்வாக்கு செலுத்தும் இந்தியச் சூழலில் இந்தப்பணி யிடப் பண்பாட்டு மாற்றம் ஒரு நேர்மறையான தாக்கமாகும்.

முக்கியமாக நீண்டகால/குறுகியகால/நிரந்தர வெளிநாட்டுப் பணிவாய்ப்புகள் கிடைக்கும் ஒரு துறை. இது இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் சில பத்தாண்டுகளில் கணிசமான எண்ணிக்கையில் நல்ல வாழ்க்கைத்தரத்தைக் கொண்ட ஓர் உயர் நடுத்தர வர்க்கத்தை உருவாக்கியுள்ளது. இதில் கணிசமான எண்ணிக்கையில் பெண்களும் அடங்குவர்.

பெண் ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

ஊதியம் உள்ளிட்ட மேம்பட்ட பணிநிலைமைகள் இருந்தாலும் பொதுவாக ஐடி ஊழியர்கள் சந்திக்கும் பிரச்சினைகளோடு பெண்கள் என்ற வகையில் இந்தத் துறையிலும் பாலினப்பாகுபாடு சார்ந்த பிரச்சினைகளை பெண்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

காரணிகளாக இருப்பவை,

- பெண்களுக்கு எதிரான தந்தை வழிச் சமூகக் கட்டமைப்பு ஏற்படுத்தியுள்ள சிந்தனை முறை, குறிப்பாகப் பெண்களின் கடமைகளாகப் பார்க்கப்படும் குடும்பப் பொறுப்புகள்
- உழைப்பு சக்தி என்ற அளவில் பெண்களுக்கு சம வாய்ப்புகளை வழங்குகின்ற போதிய நிறுவனக் கொள்கைகள் இல்லாதது
- பெண்கள் போராடிப் பெற்ற அரசமைப்புச் சட்ட உரிமைகள் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமை

வேலை-குடும்பப் பொறுப்புகள் என்ற இரட்டைச் சுமை

சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) 2024 ஆண்டு வெளியிட்ட பெண் தொழிலாளர் சமூக உற்பத்தி பங்கேற்பில் குடும்பப் பராமரிப்பு கடமைகள் ஏற்படுத்தும் தாக்கம் (The impact of care responsibilities of women's labour participation) என்ற அறிக்கை இந்தியாவில் பாதிக்கும் மேற்பட்ட அதாவது 53% வேலைக்குச் செல்லாத பெண்கள் இருப்பதாகக் கூறுகிறது.

சராசரியாகப் பெண்கள் 5 மணி நேரமும் ஆண்கள் 1.30 மணி நேரமும் குடும்ப வேலைகளில் ஈடுபடுகின்றனர் என்கிறது இந்தியாவின் தேசியப் புள்ளியில் அறிக்கை (2024). பெண்களின் சம்பளமில்லாத குடும்பப் பராமரிப்பு வேலைகளின் பொருளாதார மதிப்பீடு என்பது தேசிய புள்ளியியல் நிறுவன அறிக்கை (2019) படி இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியில் 15%-17% அதாவது 30-34 இலட்சம் கோடிகள். ஆனால், குழந்தை வளர்ப்பு உள்ளிட்ட குடும்பப் பராமரிப்புக் கடமைகளை நிறைவேற்றும் உள்கட்டமைப்புகளில் இந்திய ஒன்றிய அரசின் பங்களிப்பு என்பது உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 0.18% மட்டுமே.

இது பெண்களின் சிந்தனையிலும் ஊட்டப்பட்டு அவர்கள் குடும்பப் பொறுப்புகளை முதன்மையாகக் கருதும் நிலைக்குத் தயார் செய்யப்படுகிறார்கள்.

இரட்டைச் சுமைக்கான காரணிகள்

- திருமணத்திற்குப் பிறகு இலட்சியத்தை விடக் குடும்பப் பொறுப்புகளைப் பெண்களின் முதன்மையான கடமையாக

வரையறுக்கும் சமூக எதிர்பார்ப்புகள், பொறுப்புகளைப் பகிர்வதில் உள்ள சமநிலையின்மை

- குடும்பப் பராமரிப்புக் கடமைகளை நிறைவேற்றப் போதுமான உதவி அமைப்புகள் இல்லாமை
- பெண்களின் சமூக, பொருளாதார நிலை போன்றவை

பெண் ஊழியர்களின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் தாய்மை நிலை

குழந்தை கருத்தரித்த நாளிலிருந்து முதல் 1000 நாட்களில் குழந்தைக்குக் கொடுக்கப்படும் தாய்ப்பால் உள்ளிட்ட சத்தான உணவே அதன் வாழ்நாள் உடல் ஆரோக்கியம், மூளை வளர்ச்சி,நோய் எதிர்ப்பு சக்தி போன்றவற்றைத் தீர்மானிக்கிறது என மருத்துத்துறை சார்ந்த ஆய்வுகள் கூறுகிறது.

குழந்தைப்பேறு என்பது எதிர்கால உழைப்புச் சக்தியை உருவாக்குவதில் பெண்கள் செலுத்துகின்ற உழைப்பாகும். அந்த அடிப்படையிலேயே சம்பளத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அளிக்கப்படுகிறது. மாநில, ஒன்றிய அரசுத்துறைகளில் பணிபுரியும் பெண்களுக்கு 6 மாதங்கள் முதல் 1 வருடம் வரை மகப்பேறு கால ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்கப்படுகிறது.

தேசிய அறிவியல் அறக்கட்டளை (National Science Foundation (NSF)) என்ற நிறுவனம் இந்தியாவில் 2017 ஆண்டு மகப்பேறு நலச்சட்டத் திருத்தம் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு 26 மாதமாக அதிகரித்த பின்னரான பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்தது. இந்த ஆய்வு குறைந்த இலாபம் ஈட்டும் / சிறு நிறுவனங்கள் பெண்களை வேலைக்கு எடுப்பது 22% குறைந்து விட்டதாகக் கூறுகிறது.

மகப்பேறு விடுமுறைக் காலத்தில் பெண்கள் உற்பத்தியில் ஈடுபடாத காரணத்தால் சிறு/நடுத்தர நிறுவனங்கள் இந்தச் செலவை ஏற்கத் தயங்கிப் பெண்களை வேலைக்கு அமர்த்த விரும்புவதில்லை அல்லது பணி நீக்கம் செய்கின்றன. இதுவே, மகப்பேறு விடுமுறைச் செலவை வரி விதிப்பு/அரசு திட்டங்கள்/ காப்பீடு திட்டங்கள் மூலம் ஏற்கும் நாடுகளில் விடுமுறை அதிகரிப்பு என்பது எதிர்மறைப் பாதிப்பை உருவாக்கவில்லை என்கிறது ஆய்வு.

ஐடி துறை பெண்கள் எதிர்கொள்ளும் சில சவால்கள்

சவாலான பணி நிலைமைகள்

- நீண்ட வேலை நேரம், இரவு நேரப்பணி பணி நிலைமைகள், வெவ்வேறு நாடுகளின் வேலை நேரத்திற்குப் பணிபுரிவது
- 24/7 இணைவழிக் கூட்டங்களில்/அழைப்புகளில் பங்கேற்க வேண்டிய பணிச்சூழல்
- வேறு மாநிலம் /வெளிநாடு செல்ல வேண்டிய பணியின் தேவை
- வேகமாக மாறும் புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுத் தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டிய தேவை

குழந்தைப்பேறு காலத்தில்

- பணிநீக்கம் நடைபெறும் காலகட்டத்தில் மகப்பேறு சட்ட நலன்களைப் பெறக்கூடிய பெண்கள் முதன்மையாகக் குறிவைக்கப்படுவது
- முக்கியத்துவம் வாய்ந்த வேலைகளை ஒதுக்கீடு செய்வதில், உயர்பதவி/ திறன் மேம்பாடு பயிற்சிக்குப் பரிந்துரை செய்வதில் பாகுபாடு
- வெளிப்படைத்தன்மையற்ற, பாரபட்சமான திறன் மதிப்பீடு முறை (Appraisal System) பதவி உயர்வு, ஊதிய உயர்வு, பணி நீக்கத்தில் பெண்களுக்கு எதிராகப் பயன்படுகிறது
- மகப்பேறு சட்ட உரிமைகள் குறித்து விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் சலுகை பெற்ற குற்ற உணர்வுக்கு ஆளாவது
- குழந்தை வளர்ப்பு பெண்ணின் கடமை என்ற சமூக எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாமல் குற்றவுணர்வு கொள்ளும் சூழல்

ஊதிய இடைவெளி

சட்ட உரிமை இருந்தபோதிலும் சம வேலைக்குச் சம ஊதியம் என்ற சட்ட உரிமை இருந்தபோதும் தொழில்நுட்பத் துறையில் ஊதிய இடைவெளி நிலவுகிறது. குறிப்பாக உலகளாவிய திறன் மையங்களில் (Global Capability Centers-

GCC) பெண் ஊழியர்கள் பங்கேற்பை உயர்த்தும் முயற்சிகள் காரணமாக அவர்கள் விகிதம் 38% உயர்ந்துள்ளது. இருப்பினும், பதவி உயர்வு, ஊதியத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு குறிப்பாகத் தொடக்க நிலையில் 4.4%, இடைநிலையில் 6%, உயர் நிலையில் 16.3%, சராசரியாக 19% என ஊதிய இடைவெளி உள்ளது.

வெளிப்படைத்தன்மை இல்லாமை

ஐடி துறையில் பொதுவாகக் குறிப்பிட்ட பதவிக்கு, குறிப்பிட்ட திறன்களுக்கு (Skill Sets) ஊதிய விவரம் வெளிப்படையாக இருப்பதில்லை. இது பெரும்பாலும் ஊழியரின் பேரம் பேசும் திறனைப் பொறுத்து மட்டுமே. பேரம் பேசும் திறனில் சமூகக் காரணிகள் காரணமாக ஆணுக்கும், பெண்ணுக்கும் இயல்பான வேறுபாடு உள்ளது. மற்ற தொழிலாளர் சட்டங்கள் போல ஐடி துறையில் சம ஊதியச் சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இலாப நோக்கம் கொண்ட நிறுவனங்கள் பாலின ஊதிய இடைவெளியில் அக்கறை கொள்ள மாட்டார்கள் என்பது புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றே.

பணியமர்த்தல் செயல்முறை (Hiring Process) மற்றும் பதவி உயர்வு (Promotion)

ஐடி துறையில் பணியமர்த்தல் முறை வெளிப்படைத்தன்மை இல்லாத ஒன்று. சக ஊழியர்களின் பரிந்துரை மூலம் பணியமர்த்தல் என்பதும் ஒரு முறையாக உள்ளது. வேலைக்குப் பரிந்துரை செய்வதில் திருமண நிலை, மகப்பேறு நிலை போன்றவை கணக்கில் கொள்ளப்படுகின்றன.

இந்திய அளவில் உயர்கல்வி முடித்த பெண்கள் 43% இருந்த போதும் பணியிடங்களில் அவர்களின் பங்கு 27% மட்டுமே உள்ளது. குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பத்துறையில் தொடக்க நிலையில் 30-35% அதாவது மூன்றில் ஒருவர் பெண் ஊழியராக இருந்தபோதிலும், உயர் பதவி, அதிகாரத்தின் உயர் அடுக்குகளுக்குச் செல்லச் செல்ல பெண்களின் பங்கு என்பது 8-11% மட்டுமே உள்ளது.

வரைமுறை இல்லாத பணிநேரம், வெளிநாட்டுப் பயணங்கள்/பணி மாறுதல்கள் என அதிக பொறுப்புகள்

நிறைந்த பணிச்சூழல், குடும்ப பொறுப்புகள் காரணமாகப் பெண்களுக்கு பொருத்தமற்றவை. அதாவது அதிகாரத்தின் உயர்மட்டத்தில் நிலவும் அழுத்தம் நிறைந்த பணிச்சூழலை ஆண்களால் மட்டுமே சிறப்பாக எதிர்கொள்ள முடியும் என்ற ஆண் மையச் சிந்தனை.

மேலும் உயர்பதவிகளில் பெரும்பாலும் ஆண்களாக இருக்கும்போது சக ஆண் ஊழியருக்கு கிடைக்கும் நட்பு வட்டம், தகவல் பரிமாற்றம், உயர்பதவி அடைவதற்கான பரிந்துரைக்கும் வாய்ப்பு, புதிய பணி வாய்ப்பு பரிந்துரைகள் போன்றவை ஆண்களை விடப் பெண்களுக்கு மிகவும் குறைவான ஒன்றாக உள்ளது.

பணியிடப் பாலியல் தொல்லை சார்ந்த நிலைமைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமை

பணியிடப் பாலியல் தொல்லைகள் தடுப்புச் சட்டம் ஐடி துறையிலும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. பல நிறுவனங்களில் உள்ளப் புகார் குழுக்கள் அமைக்கப்படவில்லை, இருந்தாலும் திறனோடு செயல்படுவதில்லை. குறிப்பாகப் புகார் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. இது ஊழியர்களிடையே விழிப்புணர்வு அதிகரித்து வருவதைக் காட்டுகிறது. ஆனால், தீர்வு காணப்படாமல் உள்ள புகார்கள் ஐடி துறையில் 21% என சமீபத்திய போர்ப்ஸ் இந்தியா ஆய்வுக் கட்டுரை சொல்கிறது.

விசாரணை அமைப்பு வலிவின்மை

புகார்க் குழுவில் பெயரளவிற்கு உறுப்பினர்கள் நியமிப்பது, போதிய பயிற்சி வழங்கப்படாதது, நிறுவனத்திற்குச் சார்பான நிலை எடுப்பது, புகார்கள் மீதான விரைவான, நேர்மையான விசாரணை மூலம் தீர்வு வழங்காதது, பழிவாங்கப்படுவோம் என்கின்ற பயம், முறையான விசாரணையின்றிப் புகாரை தீர்த்து வைப்பது எனப் பல சிக்கல்களைப் பெண்கள் எதிர்கொள்கின்றனர். இது பணியிடப் பாலியல் தொல்லையில் இருந்து பாதுகாப்பு என்பதைக் கேள்விக்குறியாக்குகிறது.

பெண் ஊழியர் தக்கவைப்பு சார்ந்த நிறுவனக் கொள்கைகள் பாலினச் சார்பான மகப்பேறு கால விடுப்பு

இந்தியாவில் பெண்களுக்கு மட்டுமே 26 மாத கால மகப்பேறு விடுப்புச் சட்டம் உள்ளது. ஆண்களுக்கான விடுமுறை என்பது ஒன்றிய அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு மட்டும் 15 நாள்கள் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசும் 15 நாள்கள் விடுமுறையை அளிக்கிறது. ஆண்களுக்கான இந்த விடுமுறை தனியார் துறையில் நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடுகிறது. இந்தக் கொள்கையே குழந்தை வளர்ப்பு என்பது பெண்ணின் முதன்மை கடமை என்பதை உறுதி செய்வதாக உள்ளது. மாறாக, பாலினச் சார்பற்ற மகப்பேறு விடுமுறை என்பதே பெண்ணின் மீதான இந்தச் சுமையைத் தடுக்கும். எடுத்துக்காட்டாக கோல்டுமேன் சாக்ஸ் (Goldman Sachs India) என்ற நிறுவனம் பாலினச் சார்பற்ற 26 வார காலக் குழந்தைப்பேறு விடுமுறை வழங்குகிறது.

பெண்களைத் தக்கவைக்கும் கொள்கைகள்

மகப்பேறு விடுமுறை காலத்திற்குப் பின் பணியைத் தொடரும் பெண்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து 90% மேல் இருப்பதாகச் சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஆனால், அதே நிறுவனங்களில் நீண்ட காலத்திற்குப் பெண்களைத் தக்கவைக்கும் விகிதம் 60-70% ஆக இருக்கிறது. இது நிச்சயமாக மகப்பேறு விடுமுறைக்குப் பின் பெண்களால் அதே நிறுவனத்தில் நீண்ட காலத்திற்குத் தொடர முடியவில்லை என்பதையே காட்டுகிறது.

இதற்குக் குழந்தைக் காப்பக வசதி, வீட்டில் இருந்து பணிபுரியும் வசதி, நெகிழ்வான வேலை நேரம், பணிச்சுமை சமநிலைப்படுத்துவது, சம்பளமில்லாக் கூடுதல் மகப்பேறு விடுமுறை, பகுதி நேர வேலை வாய்ப்புகள் தொடர்பான நிறுவனக் கொள்கைகள் முழுமையாகச் செயல்படவில்லை அல்லது பெயரளவில் உள்ளதையே காட்டுகிறது.

அரசு மற்றும் ஐடி துறைக்கான பெண் ஊழியர்களின் கோரிக்கைகள்

- ஐடி துறையில் 8 மணிநேரப் பணி உள்ளிட்ட தொழிலாளர் சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தல்
- ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்றவற்றைத் திறன் மதிப்பீடு முறைக்கு மாற்றாக அனுபவ அடிப்படையில்

நடைமுறைப்படுத்தல். அதில் பெண்களின் சமமான பிரதி நிதித்துவம் உறுதி செய்தல்

- பாலினச் சார்பு இல்லாத மகப்பேறு விடுமுறைக் கொள்கை. வரி விதிப்பு உள்ளிட்ட புதிய முயற்சிகளைக்கொண்டு சிறு/நடுத்தர நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும் மகப்பேறு விடுமுறை பெறுவதற்கான அரசு தரப்பிலான கொள்கை முடிவு
- ஊதிய இடைவெளியைத் தொழிலாளர் நலத்துறை மூலம் கண்காணித்தல் மற்றும் சம வேலைக்குச் சம ஊதியச் சட்ட உரிமையை உறுதி செய்தல்
- குழந்தைக் காப்பகங்கள் - சிறு/நடுத்தர நிறுவனங்கள் எனப் பணிபுரியும் அனைத்துப் பெண்களுக்கும் - உள்ளிட்ட மகப்பேறு சட்ட நலன்களைக் கண்காணித்தல் - உறுதி செய்தல்
- பெண்களின் தேவைகளை உள்ளடக்கி இரவுநேரப் பணியை ஒழுங்குபடுத்தும் கொள்கை, சட்டமாக்கல்
- பணியிடப் பாலியல் தொல்லை தடுப்புச் சட்டத்தை முழுமையாக, நியாயமாக, நிறுவனச் சார்பற்று நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்
- மகப்பேறு விடுமுறை காலத்திற்குப் பின்னரான பெண்களின் தக்கவைப்பு விகிதாசாரத்திற்கு (Retention Rate) குறிப்பாக நடுத்தர, பெரு நிறுவனங்களைப் பொறுப்பாக்குதல்
- மாதவிடாய் கால விடுமுறை தொடர்பான சட்டம் கொண்டு வருதல்
- வீட்டில் இருந்து பணிபுரியும் முறைக்கான சட்டம் கொண்டு வருதல். அதில் பெண்களின் மாதவிடாய் காலம், கர்ப்ப காலம், தாய்ப்பாலூட்டும் காலம் போன்றவற்றை உள்ளடக்குதல்.
- ஊழியர்களுக்குத் தொடர்ச்சியான பாலின உணர்திறன் (Gender Sensitisation) குறித்த விழிப்புணர்வுப் பட்டறைகளை நடத்துவது

References

https://timesofindia.indiatimes.com/business/india-business/indian-it-industry-to-grow-5-1-per-cent-in-fy25-expected-to-cross-300-billion-in-fy26-nasscom/articleshow/118528513.cms

https://timesofindia.indiatimes.com/city/chennai/one-million-and-counting-tamil-nadu-tech-workforce-rises/articleshow/92947571.cms

https://indianexpress.com/article/business/indian-women-remain-outside-labour-force-international-labour-organization-report-9650392/

https://static.pib.gov.in/WriteReadData/specificdocs/documents/2024/mar/doc202435319501.pdf?utm_source=chatgpt.com

https://icrier.org/pdf/PB35-Care_Economy.pdf?utm_source=chatgpt.com

https://www.downtoearth.org.in/economy/womens-day-of-unpaid-labour-five-hours-of-domestic-work-employment-of-stress-mental-toll-of-double-burden#google_vignette

https://www.business-standard.com/finance/personal-finance/in-tech-gccs-gender-pay-gap-jumps-from-4-at-entry-to-16-at-senior-level-125043000708_1.html

https://www.forbesindia.com/article/news/rising-backlog-of-sexual-harassm/2987356/1

https://www.business-standard.com/india-news/maternity-penalty-75-mothers-face-career-hurdles-after-leave-report-124081000274_1.html

♦♦♦

கட்டுரையாளர்

எழுத்தாளர் / செயற்பாட்டாளர்

நவீன சிறார் இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு

சரிதா ஜோ

முன்னுரை :

மனித சிந்தனை உணர்ச்சி அனுபவங்களை வெளிப்படுத்தும் கற்பனைப் படைப்பே இலக்கியம்.

இதில் சிறார் இலக்கியம் மொழி நடையிலும் பொருளிலும் நூல் அமைப்பிலும் வளர்ந்தவர்கள் இலக்கியத்திலிருந்து வேறுபட்டது. மனித குலம் தோன்றியதிலிருந்து எண்ணிக்கையில் சரிபாதியாக இருக்கும் பெண்களுக்குப் பல நூற்றாண்டுகளாகச் சம உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தது. ஆனால், எத்தனையோ போராட்டங்களுக்குப் பிறகு இன்று பல துறைகளில் தங்களின் திறமைகளின் மூலமாகத் தங்களை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது ஏராளமான பெண்கள் சிறார் இலக்கியத்தில் தங்களுடைய தடத்தைப் பதித்து வருகிறார்கள். அவர்களின் படைப்புகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம். (விடுபடல் இருக்கலாம்)

உலக பெண்களின் பங்களிப்பு:

உலக அளவில் குழந்தைகளுக்காக குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர்களில் **பீட்டரிக்ஸ் பாட்டர், லூயிசா மே ஆல்காட்** போன்றவர்கள் ஆரம்ப காலத்திலும் அதற்குப்

பிறகு **லூசி ஸ்பாராக் மிட்செல், ஆன் கரோல் மூர், ஜே.கே. ரௌலிங், வெர்லி கிளியரி** போன்ற எழுத்தாளர்கள் தங்களின் பங்களிப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழில் தொடக்க காலகட்டத்தில் பெண்களின் பங்களிப்பு:

தமிழில் சிறார் இலக்கியம் என்பது கவிமணி காலத்தில் இருந்து தொடங்கியது எனலாம்.

அந்தக் காலகட்டத்தில் சிறார்களுக்காக **எம்.சி.ராஜா**வோடு இணைந்து **ரங்கநாயகி அம்மாள்** எழுதி இருக்கிறார். அதன் பிறகு 1950களில் **அழ. வள்ளியப்பா** குழந்தைகளுக்கான கதை, பாடல்கள், கதைப் பாடல்கள் மற்றும் மொழிபெயர்ப்பு என்று தொடர்ந்து எழுதி வந்தார். குழந்தை எழுத்தாளர்கள் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் வழியாக ஏராளமான சிறார் எழுத்தாளர்களை உருவாக்கினார். அந்தக் காலகட்டத்தில் ஆர். பொன்னம்மாள், எஸ். விஜயலட்சுமி, மதிஒளி சரஸ்வதி, சந்தான லட்சுமி, அகிலா சிவராமன், எஸ். லீலா, சரஸ்வதி ராம்நாத், கே ஜெயலட்சுமி, ஜோதிர்லதா கிரிஜா, அம்பை, சிவசங்கரி, விமலாரமணி மற்றும் ராஜம்மாள் தேவதாஸ் ஆகிய பெண்களும் சிறார் இலக்கியத்தில் பங்களித்துக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக ஆர். பொன்னம்மாள் கதைகள் மற்றும் பாடல்கள் என்று தொடர்ந்து ஏராளமான படைப்புகளை கொடுத்து வந்துள்ளார். அம்பை அவர்கள் தன்னுடைய 16 வயதில் (1960 ஆண்டு) கண்ணன் இதழ் நடத்திய போட்டியில் 'நந்தி மலைச் சாரலிலே' என்ற சிறார் நூலுக்காக முதல் பரிசு பெற்றார். அதன் பிறகு இளையோருக்காக இவர் எழுதிய தன் வரலாறு 'நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்' குறுநாவலாக 2013 ஆம் ஆண்டு வெளிவந்தது.

1950களில் வீரியமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த சிறார் இலக்கியம் இடையில், ஒரு தொய்வு ஏற்பட்டு 2000க்குப் பிறகு நவீன சிறார் இலக்கியமாக மீண்டெழுந்தது. **2021ல் சிறார் எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் எழுத்தாளர் உதயசங்கர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது**.

சமகாலத்தில் பெண்களின் பங்களிப்பு:

தமிழ்நாட்டில் 1990களில் ஏராளமான பெண்கள் எழுத வந்தார்கள். பெண்ணியக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு

அதில் உள்ள கருத்துக்களை இலக்கியத்தில் கொண்டுவர எண்ணினார்கள். கவிதை, சிறுகதை, நாவல் மற்றும் கட்டுரை என்று எழுத ஆரம்பித்தார்கள். இந்தக் காலகட்டத்தில் பெண்களின் சிறார் இலக்கியப் பங்களிப்பு மிகவும் குறைவு.

2000ஆம் ஆண்டுக்குப் பிறகு குழந்தைகளுக்கான இலக்கியம் குறித்த விவாதம், பார்வை மற்றும் அக்கறை என்பதும் பொதுச் சமூகத்தில் தொடங்கினர். மெல்ல மெல்ல உருவாகும்போது பெண்களும் சிறார் இலக்கியத்திற்குள் எழுத வரத் தொடங்கினர். அதுவும் குறிப்பாக கொரோனா காலகட்டத்தில் பெண்கள் சிறார் இலக்கியத்தில் இயங்குவது அதிகமானது. பெண்கள் மட்டுமல்லாமல் குழந்தைகளும் கதை சொல்லிகளாகவும் எழுத்தாளர்களாகவும் பரிமளித்தார்கள்.

தங்கள் வாழ்நாளின் பெரும் பகுதியைக் குழந்தைகளோடு செலவழிக்கும் பெண்கள் குழந்தைகளுக்காக எழுதிய படைப்புகள் குழந்தைகளின் மன ஓட்டத்தை அறிந்து எழுதப்பட்டதாக இருக்கிறது. சூழலியல், பருவநிலை மாற்றம், ஐவகை நிலப்பரப்புகள், கல்வியின் அவசியம், பாலியல் சீண்டல், பாலின சமத்துவம், மூன்றாம் பாலினம், சமூகப் பிரச்சினை, சாதி ஏற்றத்தாழ்வு, உருவக்கேலி, நிறம் பற்றிய தாழ்வு மனப்பான்மை உடைத்தல், உளவியல், அறிவியல், மூடநம்பிக்கை பற்றிய விழிப்புணர்வு, வாழ்க்கை வரலாறு, மாயாஜாலம், வீரதீரச் செயல்கள், பகுத்தறிவு, நகைச்சுவை, உணவு உடற்பயிற்சி செல்போன் சார்ந்த விழிப்புணர்வு, சமத்துவம், சமூக நீதி, மனிதம், தன்னம்பிக்கை மற்றும் சாகசம் உள்ளிட்ட வகைகளில் கதைகளை எழுதியுள்ளார்கள்.

சமகாலப் பிரச்சனைகளை மையப்படுத்தியும் எழுதி வருகிறார்கள்.

பெரும்பான்மையான கதைகளில் பெண் கதாபாத்திரங்களை மையக் கதாபாத்திரமாக வைத்து எழுதிக் கொண்டிருப்பதோடு பெண் கதாபாத்திரங்களுக்கும் 'ர்'விகுதியைப் பயன்படுத்தியிருப்பது பெண்களின் படைப்புகளில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

கதைகள், பாடல்கள், சிறார் திரைப்படங்கள், கதைப் பாடல்கள், நாடகம், வகுப்பறை அனுபவங்கள், வாழ்கை வரலாறு, கல்வி சார்ந்து, சித்திரக் கதைகள், கட்டுரைகள், தொகுப்புகள், மொழிபெயர்ப்பு, வாழ்க்கை அனுபவங்கள்,

சமகாலப் பிரச்சனைகள், பதின் பருவப் பிரச்சனைகள், மற்றும் உளவியல் சிக்கல்கள் உள்ளிட்ட வகைமைகளில் தங்களுடைய படைப்புகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொடர் பங்களிப்பு கொடுத்து வரும் படைப்பாளிகள்:

தேவி நாச்சியப்பன்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் இளைய மகளான இவர், குழந்தை இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். 40 ஆண்டுகளுக்கும் மேலாக குழந்தைகளுக்காக எழுதி வருகிறார். கவிமணி குழந்தைகள் சங்கத்தையும் வள்ளியப்பா இலக்கிய வட்டத்தையும் முன்னெடுத்து வருகிறார். 30 நூல்கள் எழுதியுள்ளார். பால சாகித்ய புரஸ்கார் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

சாலை செல்வம்

பெண்ணிய செயல்பாட்டாளர், கல்வியாளர், எழுத்தாளர் எனப் பல துறைகளில் இயங்கி வருபவர். 30 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுவாழ்வில் செயல்பட்டு வருகிறார். தமிழ்நாடு சிறார் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச்செயலாளராக உள்ளார். 40 க்கும் மேற்பட்ட குழந்தைகள் நூல்கள் எழுதியுள்ளார். பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

பிரியசகி

ஆசிரியர், மனநல ஆலோசகர், என்.எல்.பி. பயிற்றுநர், தன்னம்பிக்கைப் பேச்சாளர் மற்றும் பொம்மலாட்டக் கலைஞர். குழந்தைகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கான உளவியல் சார்ந்த நூல்களை எழுதி வருகிறார். சிறப்புக் குழந்தைகள் மற்றும் பதின்பருவ வளர்ச்சி குறித்து குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார். பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

ஞா. கலையரசி

காரைக்காலைச் சேர்ந்த இவர் தற்போது புதுச்சேரியில் வசித்து வருகிறார். ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் பணி ஓய்வு பெற்றவர். சுட்டி உலகம் மற்றும் பூஞ்சிட்டு மின்னிதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். சிறார் இலக்கியத்தில் பல்வேறு பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

பூங்கொடி பாலமுருகன்

பொறியாளரான இவர் கதை சொல்லி, எழுத்தாளர் மற்றும் பேச்சாளர். குழந்தைகள் பாதுகாப்பு, உளவியல், சமூகநீதி மற்றும் சூழலியல் சார்ந்த கருத்துகளை மையமாகக் கொண்டு எழுதுகிறார். 8 நூல்கள் எழுதியுள்ளார். பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

சரிதா ஜோ

ஈரோட்டைச் சேர்ந்த கதை சொல்லி, சிறார் எழுத்தாளர் மற்றும் மேடைப் பேச்சாளர். குழந்தைகளுக்கான சமூக விழிப்புணர்வு, சூழலியல், பகுத்தறிவு மற்றும் சமத்துவக் கருத்துகளை மையமாகக் கொண்டு எழுதுகிறார். 25க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். எஸ்.ஆர்.எம். தமிழ்ப் பேராய விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

ஈரோடு சர்மிளா

பேராசிரியர், கதை சொல்லி, பேச்சாளர் மற்றும் எழுத்தாளரான இவர், சிறார் இலக்கியத்தில் சமூக விழிப்புணர்வு மற்றும் முற்போக்குச் சிந்தனைகளை முன்னிறுத்தி எழுதி வருகிறார். பல்வேறு இலக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

தேவகி ராமலிங்கம்

எழுத்தாளர் மற்றும் பதிப்பாளர். நிவேதிதா பதிப்பகத்தின் உரிமையாளராக இருந்து ஆண்டுதோறும் ஏராளமான சிறார் நூல்களை வெளியிட்டு வருகிறார். சிறார் இலக்கிய வளர்ச்சிக்காகத் தொடர்ந்து பணியாற்றி வருபவர். சிறந்த பதிப்பாளருக்கான பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

ஸ்ரீ ஜோதி விஜேந்திரன்

இன்போசிஸ் நிறுவனத்தில் பணியாற்றிய இவர் தற்போது மென் திறன் பயிற்சியாளராக உள்ளார். குழந்தைகளுக்கான நகைச்சுவை, அறிவியல், சாகசம் மற்றும் வாழ்வியல் கதைகளை எழுதி வருகிறார். பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

புவனா சந்திரசேகரன்

மதுரையைச் சேர்ந்த இவர் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றவர். பூஞ்சிட்டு குழந்தைகள் இதழின் ஆசிரியர்களில் ஒருவராக உள்ளார். சிறுகதை, நாவல் மற்றும் சிறார் இலக்கியத் துறைகளில் தொடர்ந்து எழுதி வருகிறார். பல்வேறு இலக்கியப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றுள்ளார்.

இவர்களைத் தவிர கீழ்க்காணும் பலரும் தங்கள் காத்திரமான பங்களிப்பை நல்கி வருகின்றனர். பவள சங்கரி, ஜெயந்தி சங்கர், ஜீ. மீனாட்சி, லைலா தேவி, சோ. மோகனா, அமுதா செல்வி, ரமாதேவி ரத்தினசாமி, சாந்த சீலா, உதய லட்சுமி, ராஜலட்சுமி நாராயணசாமி, ராஜேஸ்வரி கோதண்டம், அஞ்சலி, நிவேதா லூயிஸ், அகிலாண்ட பாரதி, ராஜலட்சுமி, கார்த்திகா கவின்குமார், ராஜிலா ரிஸ்வான், முத்துக்குமாரி, வித்யா செல்வம், லட்சுமி பாலகிருஷ்ணன், நான்சி கோமகன், வனிதாமணி, வித்யா இளங்கோ, கார்த்திகா முகுந்த், நசீமா ரசாக், ஜீவா ரகுநாத், ஞா.குமுதம், மேகலா சித்திரவேல், அன்னபூரணி தண்டபாணி, அன்புச் செல்வி சுப்புராஜ், இந்துமதி கணேஷ், தேவி பிரபா, விஜயலட்சுமி, அன்பு வாகினி, ஹேமப்பிரபா, நாராயணி சுப்பிரமணியன், தமிழ்மொழி இளங்கோ,அமுதா பொற்கொடி, ராணிகுணசீலி, சூர்யா, தீபா சிந்தன், கிருபானந்தினி, வாண்டு மாமி (தேவி மயில்), ராஜேஸ்வரி ஸ்ரீதர், நேஷா எல்லப்பன், மீனா நரேஷ், தாமரை செல்வி, கீதா மதிவாணன், டாக்டர் ஒசூர் மணிமேகலை, காரை. இரா. மேகலா, பிச்சிப்பூ (எ) சங்கீதா பிரபு, கமலா முரளி, டாக்டர் சிவகாமசுந்தரி, நாகமணி, நெல்லை அன்புடன் ஆனந்தி, திவ்யா பிரபு, விஜயலட்சுமி, துளசி, சண்முகவள்ளி, ஸ்ரீனிவாசன், மணி அர்ஜுனன்,ஏ. எஸ். பத்மாவதி, கிருஷ்ணபிரியா நாராயணன், யாமினி, கோகிலா, மோனிஷா,அர்ஷா ராஜலட்சுமி ராமராஜ், வெண்பா, பாரதி திலகர், ஆபேரி, ஆலிஸ், சித்ரா ரங்கராஜன், எம். கே வனிதா, பானுலட்சுமி, பத்மாசினி மாதவன், ரம்யா, ஜெயா சிங்காரவேலு, ப்ரீத்தி வசந்த், ஜெயசுதா, தாரணி ஆகியோருடன் ஏராளமான பெண் குழந்தைகளும் தொடர்ந்து எழுதி வருகிறார்கள்.

முடிவுரை:

சிறார் இலக்கியம் என்ற வகைமை தோன்றிய காலத்திலிருந்தே பெண்கள் தொடர்ந்து தங்கள் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இன்று 80க்கும் மேற்பட்ட பெண்களும், 30க்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளும் சிறார் இலக்கியத்தில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்கள் தங்கள் படைப்புகளின் வழியாகச் சமகாலப் பிரச்சனைகள், பருவநிலை மாற்றம், உளவியல், சமத்துவம் போன்ற பல தளங்களில் ஆழமாகப் பதிவு செய்து வருகின்றனர். சுவாரசியம், கற்பனை, பேண்டசி ஆகியவற்றோடு எளிமையான மொழியிலும், முற்போக்கு மற்றும் பகுத்தறிவுச் சிந்தனைகளுடனும் படைப்புகளை வழங்கி வருகிறார்கள். யதார்த்தப் படைப்புகளும் அதீதப் புனைவுகளும் சம அளவில் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

இது மகிழ்ச்சிக்குரிய வளர்ச்சியாக இருந்தாலும், இன்னும் பல துறைகளைச் சேர்ந்த பெண்கள் எழுத வர வேண்டிய தேவை உள்ளது. இந்தப் படைப்புகள் குழந்தைகளை மட்டுமல்லாமல் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பொதுவாசகர்களிடமும் சென்றடைய வேண்டும். மேற்கண்ட படைப்பாளிகளின் பல நூல்கள் தமிழ்நாடு அரசின் வாசிப்பு இயக்கம் மற்றும் இளந்தளிர் திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளி நூலகங்களில் இடம்பெற்றுள்ளன. இவர்களின் பத்துக்கும் மேற்பட்ட நூல்கள் 25க்கும் மேற்பட்ட முக்கியமான விருதுகளைப் பெற்றுள்ளன.

இன்னும் செல்ல வேண்டிய தூரம் அதிகம் இருக்கிறது. தற்காலக் குழந்தைகளின் உலகிற்கு ஏற்ற புதிய வடிவங்களிலும் புதிய சிந்தனைகளுடனும் படைப்புகள் உருவாக வேண்டும். உலகின் சரிபாதியாக இருக்கும் பெண்கள் தங்கள் பார்வையிலிருந்து உலகத்தைப் பதிவு செய்யும்போது சிறார் இலக்கியம் மேலும் முழுமை பெறும்.

♦♦♦

கட்டுரையாளர்
சிறார் எழுத்தாளர்

பண்பாட்டு மேலாதிக்கமும் இந்திய அரசியலும் :

கிராம்சியின் கண்ணோட்டத்தில் ஓர் ஆய்வு

இரா.முரளி

அந்தோனியோ கிராம்சி (1891–1937) இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான மார்க்சியச் சிந்தனையாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். இத்தாலியின் சார்டீனியா தீவில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அவர், சிறு வயதிலிருந்தே சமூக ஏற்றத்தாழ்வுகளையும், பிராந்திய ஒடுக்கு முறைகளையும் நேரடியாக அனுபவித்தார். இத்தாலியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான கிராம்சி, முசோலினியின் பாசிச ஆட்சியால் 1926ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். அரசு தரப்பு வழக்குரைஞர், நீதியரசரிடம் “இந்த மனிதரின் மூளை குறைந்தது இருபது ஆண்டுகளுக்கு இயங்காத அளவிற்கு இவருக்குத் தண்டனை தரவேண்டும்’ என வேண்டினாராம். ஆனால் அதற்கு மாறாகச் சிறையில் கழித்த ஆண்டுகளிலேயே அவர் எழுதிய ‘சிறைக் குறிப்பேடுகள்’ (Prison Notebooks) அரசியல் மற்றும் சமூகக் கோட்பாட்டின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. சிறை அதிகாரிகளுக்குத் தெரியாமல் கொண்டு வரப்பட்ட நோட்டுப் புத்தகங்களில் அவர் எழுதிய 33 நோட்டுப் புத்தகங்கள் அவரது அண்ணியால் இரகசியமாக வேளியே கொண்டுவரப்பட்டது. சிறையில் மிகவும் நோய்வாய்ப்பட்டார் கிராம்சி. பின்னர் விடுதலை என்று அறிவித்தனர். ஆனாலும் சிறை மருத்துவமனையிலேயே 46வது வயதில் மரணமடைந்தார்.

மேலாதிக்கத்தின் மறைந்த இயங்கியல்

அந்தோனியோ கிராம்சி பொருளாதாரக் கட்டமைப்பை மட்டும் வைத்து சமூகத்தைப் புரிந்துகொள்வதை மறுத்து, பண்பாடு, கருத்தியல், கல்வி, மதம், மொழி போன்ற தளங்களில் அதிகாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை முன்னிறுத்தினார். சமூக மாற்றம், பண்பாட்டுப் போராட்டம், மற்றும் ஒடுக்கப்பட்டோரின் அரசியல் தன்னுணர்வு ஆகியவற்றை விவாதிக்கும்போது இன்று கிராம்சி தவிர்க்க முடியாத பெயராகிறார்.

அந்தோனியோ கிராம்சியின் மிக முக்கியமான கோட்பாட்டுப் பங்களிப்புகளில் ஒன்று **பண்பாட்டு மேலாதிக்கம் (Cultural Hegemony)** என்பதாகும். வெறும் பொருளாதாரச் சுரண்டலோ, இராணுவ வன்முறையோ மட்டும் ஓர் ஆளும் வர்க்கத்தை நிலைநிறுத்தப் போதுமானதாக இருப்பதில்லை என்று கிராம்சி வாதிட்டார். மாறாக, மக்களின் அன்றாட வாழ்வு, எண்ணங்கள், மதிப்பீடுகள், கனவுகள், மற்றும் உலகைப் பார்க்கும் பார்வை ஆகியவற்றை ஆக்கிரமித்து, அதன் மூலம் ஒடுக்குமுறைக்கு 'ஒப்புதல்' பெறும் மென்மையான அதிகாரம் தேவைப் படும் அதுவே பண்பாட்டு மேலாதிக்கம் என்றார். ஆளும் வர்க்க நலன்களுக்கான சமூக ஒப்புதலை மதம் எப்படிப் பெற்று தந்தது என்பதையும் அவர் ஆராய்ந்தார். இத்தாலியில் கிறித்துவ சமய நிறுவனம் மறைமுகமாக மக்களிடம் இயங்கி அவர்களின் சமூக ஒப்புதலை பாசிச வளர்ச்சிக்கு எப்படிப் பெற்றுத் தந்தது என்பதை விளக்கினார்.

இக்கட்டுரை, கிராம்சியின் பண்பாட்டு மேலாதிக்கக் கருத்தை விரிவாக விளக்குவதோடு, இந்தியப் பண்பாட்டு அரசியலில், குறிப்பாக சாதிய, மத, மொழி, மற்றும் கல்வி ஆகிய களங்களில், அது எவ்வாறு இயங்குகிறது என்பதையும் ஆராய்கின்றது.

கிராம்சி விளக்கிய பண்பாட்டு மேலாதிக்கம்

கிராம்சி தனது 'சிறைக் குறிப்பேடுகளில்' (Prison Notebooks, 1929–1935) அரசியல் சமூகம் (Political Society) என்பதை அரசு, நீதிமன்றங்கள், காவல், இராணுவம் ஆகியவற்றைக்

கொண்டதாகவும், **குடிமைச் சமூகம்** (Civil Society) என்பதைப் பள்ளிகள், மத நிறுவனங்கள், ஊடகங்கள், குடும்பம், தொழிற்சங்கங்கள், கலை இலக்கிய அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும் பிரித்தார்.

ஹெகல், மார்க்ஸ் ஆகியோரைப் போலவே கிராம்சியும் குடிமைச் சமுதாயம், புவியியல் சமுதாயம், அரசியல் சமுதாயம் (அரசு) என்று பாகுபாட்டைச் செய்தார். ஆனால் இந்தப் பாகுபாடு, விசயங்களைப் பகுத்தாய்ந்து புரிந்துகொள்வதற்காக மட்டுமே கிராம்சியால் பயன்படுத்தப்பட்டது. அரசியல் சமுதாயம், குடிமைச்சமுதாயம் இரண்டும் ஒன்றிணைந்த முழுமையே என்பது கிராம்சியின் கருத்தாகும். 'அரசு என்பது மட்டுமே அரசாங்க இயந்திரமாக ஆகிவிடாது. மேலாதிக்கத்தை நிலைநிறுத்துகின்ற அரசுக் கட்டுப்பாட்டில் இல்லாத அனைத்து இயந்திரங்களையும் கூட அரசு என்றே அழைக்க முடியும்'' என்றார் அவர். அதாவது, சமூகத்தில் ஓர் அதிகார வர்க்கம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள அரசியல் சமூகத்தின் வழியாக அழுத்தம் (Coercion) கொடுக்கும். மறுபுறம் குடிமைச் சமூகத்தின் வழியாக ஒப்புதலைப் (Consent) பெற முயலும். இவை இரண்டும் தேவை. ஆனால் நீண்டகால மேலாதிக்கத்திற்குச் சமூக ஒப்புதல்தான் மிக முக்கியமானது. கிராம்சியின் பார்வையில் அரசு என்பதை அதன் முழு அர்த்தத்தில் பார்த்தால் அரசின் கட்டுப்பாட்டில் அல்லாது தனித்தியங்கும் மத நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள், தொழிற்சங்கங்கள், செய்தி நிறுவனங்கள் ஆகியவையும் கூட அரசு என்பதில் இயங்குபவையே எனலாம்.

மேலாதிக்கம் (Hegemony)

மேலாதிக்கம் என்பதைக் குறிக்கும் 'Hegemony' என்ற கிரேக்கச் சொல்லை கிராம்சி சமூக, கலாச்சார, மற்றும் கருத்தியல் தளங்களுக்குப் பயன்படுத்தினார். ஒரு சமூகத்தில் ஆளும் வர்க்கம், தனது சொந்த நலன்களை 'அனைவரின் பொதுநலன்' போலவும், தனது மதிப்பீடுகளை 'இயற்கையான', 'உலகளாவிய', 'சர்வ சாதாரண' மதிப்பீடுகளாகவும் முன்னிறுத்தும்போது, அது மேலாதிக்கம் அடைகிறது என்றார் கிராம்சி.

எடுத்துக்காட்டு:

• முதலாளித்துவச் சமூகத்தில் ‘கடின உழைப்பு’, ‘தனிமுயற்சி’, ‘சொத்து நிர்வாகம்’ போன்ற மதிப்பீடுகள் அனைவருக்கும் நல்லவை என்று கற்பிக்கப்படுகின்றன.

• மார்க்கெட்டிங், விளம்பரம், திரைப்படங்கள், பாடநூல்கள், செய்திகள் – அனைத்தும் இந்தக் கருத்தியலைப் பிரதிபலிக்கின்றன.

"ஒரு சமூகத்தின் மேலாதிக்கம் பெற, குழுக்கள் தம் மேலாதிக்கத்தை நியாயப்படுத்தவும் தம் நலன்களைப் பேணுவதற்கும் கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் உருவாக்கிக் கொள்கின்றன. இதனையே கருத்தியல் என்கிறோம்." என்றார் அவர்.

‘அரசு என்பதன் முழு அர்த்தமே என்னால் மறுபரிசீலனைச் செய்யப்பட வேண்டியதாக ஆயிற்று. இதுவரை அரசு என்பதை ஒரு சர்வாதிகாரக் கருவியாகவே நான் எண்ணியிருந்தேன். ஆனால் உண்மையில் அரசு என்பது சமுதாயத்தின் ஒரு பகுதியினர் முழுச்சமுதாயத்தின் மீதும் செலுத்திவரும் மேலாதிக்கம் என்றே அர்த்தப்படுத்தப்பட வேண்டும். இந்த மேலாதிக்கமானது மத நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவை மூலம் செயல்படுத்தப் படுகிறது’ என்று அவர் கூறினார். சிறைக் குறிப்பேடுகளில் பல இடங்களில் கிராம்சி குடிமைச் சமுதாயம் என்பது அறவியல், ஒழுக்கவியல் சமுதாயம் என்று கூறுகிறார். ஏனெனில், குடிமைச் சமுதாயத்தில்தான் ஆதிக்க வர்க்கம், அறவியல், கருத்துநிலைப் போராட்டங்களின் மூலம் தனது மேலாண்மையைக் கட்டியெழுப்புகின்றது. **“படைகளின் மூலம் ஒரு நாட்டை வெல்லுதலைவிட, பண்பாட்டு வழியாக ஒரு நாட்டை வெல்லுவது வலுவான வெற்றி”** என்கின்றார் அவர். இந்த நிலையில் மேலாதிக்கத்தை உடைக்கத் தேவை அந்தந்த மண்ணின் அறங்களை தம்முள் வரித்துக் கொண்ட அறிவு ஜீவிகளின் செயல்பாடு என்று விளக்கினார்.

மண்ணின் இயைபுடைய அறிவுஜீவிகள் (Organic Intellectuals)

கிராம்சியின் "மண்ணின் இயைபுடைய அறிவு ஜீவிகள்" (Organic Intellectuals) என்ற கருத்தாக்கம், ஒவ்வொரு சமூக வர்க்கமும் தனது சொந்த நலன்களுக்காகவும், வளர்ச்சிக்காகவும் இயல்பாகவே உருவாக்கிக் கொள்ளும் சிந்தனையாளர்களைக் குறிக்கும். இவர்கள் மேல்தட்டு வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட "மேல்தட்டு புத்தி ஜீவிகள்" (traditional intellectuals) போல் அல்லாமல், தொழிலாளர்கள், விவசாயிகள், கிராம மக்கள் போன்ற சாதாரண மக்களிடமிருந்தே எழுபவர்கள் ஆவார்கள். இவர்கள் மக்களின் வாழ்க்கை அனுபவங்கள், போராட்டங்கள், தேவைகளை மொழியாக்கம் செய்து, அந்த வர்க்கத்தின் அரசியல், கலாசார, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகாட்டுகிறார்கள். எனவே **உழைக்கும் வர்க்கம், ஒடுக்கப்பட்ட இனம், தங்களுக்கான அறிவு ஜீவிகளை உருவாக்குவது அவசியமாகின்றது**.

ஒரு தொழிற்சங்கத் தலைவர், நிலமின்றி உழைக்கும் விவசாயிகளின் குரலாகச் செயல்படும் ஆர்வலர், அல்லது மக்கள் இயக்கங்களை முன்னெடுக்கும் உள்ளூர் அறிவுஜீவிகள், கல்வியாளர்கள் என இவர்கள் அனைவருமே "மண்ணின் இயைபுடைய அறிவு ஜீவிகள்" ஆவார்கள். கிராம்சியின் கருத்தின் படி, ஓர் எதிர்நிலைப் பண்பாட்டு மேலாதிக்கத்தை (hegemony) உருவாக்க இத்தகைய புத்தி ஜீவிகள் இன்றியமையாதவர்கள். இவர்களின் பணி, பொதுத் தத்துவத்தை (philosophy) நடைமுறைத் தத்துவமாக (philosophy of praxis) மாற்றும். அதாவது விடுதலைச் சிந்தனைகளை மக்களின் அன்றாடப் போராட்டத்தின் கருவியாக மாற்றுவதாகும். **ஓர் ஒடுக்கப்பட்ட வர்க்கம் தன் மீதான மேலாதிக்கத்தை உடைக்க, முதலில் கருத்தியல் தளத்தில் போராட வேண்டும்**. புதிய மதிப்பீடுகள், புதிய உலகக் கண்ணோட்டம், புதிய கலை, புதிய இலக்கியம், புதிய கல்வி முறை – இவற்றை உருவாக்கி, மக்களிடம் மேலாதிக்கம் பற்றிய புரிதலையும் ஓர் எதிப்புணர்வையும் உருவாக்க வேண்டும் என்பதே கிராம்சியின் நிலைப்பாடு. அதைச் செய்வதற்குத் தேவை அந்த மண்ணின் அறிவு ஜீவிகள். இவர்கள் வெறும் கருத்தாளர்களாக இருப்பதில்லை, களத்திலும் போரிடுபவர்களாவார்கள்.

கிராம்சி அறிவுஜீவிகளை இரண்டாகப் பிரித்தார்:

மரபு அறிவுஜீவிகள் [Traditional Intellectuals]	மண்ணின் இயைபுடைய அறிவுஜீவிகள் [Organic Intellectuals]
ஆளும் வர்க்கத்துடன் இணைந்து, தற்போதைய அதிகார அமைப்பை நியாயப்படுத்துபவர்கள் (எ.கா: பூசாரிகள், மதகுருமார்கள், பாரம்பரியக் கலைஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்)	தங்கள் சொந்த சமூகக் குழுவிலிருந்து எழுந்து, அந்தக் குழுவின் உண்மையான நலன்களுக்காகப் போராடுபவர்கள் (எ.கா: தொழிலாளர் வர்க்கத்திலிருந்து வந்த அறிவுஜீவி, தலித் படைப்பாளி)

அந்தோனியா கிராம்சியும் இந்தியச் சூழலும்

அந்தோனியா கிராம்சியின் கருத்தாக்கங்களை இந்தியச் சூழலில் பொருத்திக் காண்பது அவசியமானது மட்டுமல்லாமல் வரலாற்றுத் தேவையுமாகவும் உள்ளது. இந்திய வரலாறும் இத்தாலிய வரலாறும் பரஸ்பரம் ஒத்திருப்பது ஏதேச்சையான உண்மையென மார்க்ஸ் கருத்துரைத்துள்ளார். இத்தாலியச் சிந்தனையாளரும் மாபெரும் புரட்சியாளருமான அந்தோனியா கிராம்சியின் சிந்தனைகளை இந்தியா போன்ற நாடுகளில் பரவலாக முன்னெடுக்க வேண்டும் என்பதும், புரட்சிகர மாற்றத்திற்குரிய மூலங்களாகக் கிராம்சியச் சிந்தனைகள் விளங்குகின்றன என்பதும் இன்றைய அறிஞர் மட்டத்தில் பேசப்படுகின்ற ஒன்றாகவும் இருக்கின்றது. கிராம்சியின் கருத்தாக்கங்களின் இந்தியத் தேவையை **எஸ்.வி. ராஜதுரை மற்றும் வ.கீதா தம்முடைய ‘கிராம்சி-புரட்சியின் இலக்கணம்’** எனும் நூலில் கீழ்க்கண்டவாறு அடையாளப்படுத்தியுள்ளனர்:

“இந்தியப் பார்ப்பனியத்துடன் ஒப்பிடக்கூடிய இத்தாலியத் தத்துவங்களைப் பற்றிய அவரது விமர்சனம், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கருத்துநிலை மேலாண்மை, பாட்டாளி வர்க்கம் நடத்த வேண்டிய பண்பாட்டுப் புரட்சி ஆகியன குறித்த அவரது விளக்கங்கள் முதலியன, இந்தியாவில் புரட்சிகர மாற்றத்திற்காகப் போராடுகிறவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியனவாகும்”

கிராம்சியின் சமூகவியல் பார்வை புரட்சிகரச் சமூக மாற்றத்தை எதிர்நோக்கும் இயங்கியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் அமைந்திருந்தது. சமூகத்திலுள்ள பிறப்புரிமைகளும் வேறுபாடுகளும் இயற்கையால் உருவாக்கப்பட்டவையல்ல, மாறாக, சமூகத்தால் உருவாக்கப்பட்டவை அதன் காரணமாகவே அவற்றைக் கடந்து வரவும் முடியும் எனக் கிராம்சி கூறினார். இது அவருடைய நுட்பமான வரலாற்று இயங்கியல் பொருள்முதல்வாதப் பார்வையைக் காட்டுவதாக உள்ளது.

இந்தியப் பண்பாட்டு அரசியலில் பண்பாட்டு மேலாதிக்கம்

இந்தியச் சூழலில், கிராம்சியின் பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு மிகத் துல்லியமான உதாரணம் பார்ப்பனிய (Brahminical) மேலாதிக்கம் ஆகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, பார்ப்பனியம் வெறும் படை பலத்தால் அல்ல, மாறாக:

- வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் (இராமாயணம், மகாபாரதம்)
- ‘வர்ணாசிரம தர்மம்’ – சாதி ஒரு தெய்வீக ஏற்பாடு, இயற்கையான வேறுபாடு என்ற கருத்தியல்
- ‘மனு ஸ்மிருதி’ போன்ற சட்ட நூல்கள்
- பூசாரிகளின் படிநிலைக் கட்டுப்பாடு
- தீண்டாமை, அசுத்தம், புனிதம் என்ற இரட்டைக் கருத்துகள் போன்றவற்றின் மூலமாகச் சமூகத்தில் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தியது.

அதன் கருத்தியல்கள், வரலாற்றுக்குப் புறம்பான புராணிக தொன்ம எடுத்துரைப்புகள் மூலமாகவும், மத ஐதீகக் கதைகள் மூலமாகவும் கட்டமைக்கப்பட்டது எனலாம். கிராம்சியின் குடிமைச் சமூகக் கட்டமைப்புகள் இந்தியாவில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கீழே காணலாம்:

கல்வி நிறுவனங்கள்: சமஸ்கிருத மொழி, வேதாந்தம், ‘பெருமைமிகு இந்தியப் பாரம்பரியம்’ என்ற பாடத்திட்டங்கள்; இதிகாசங்களை இலக்கியமாகக் கற்பித்தல்; சாதி வரலாற்றை

மறைத்தல்; தலித், பௌத்த, சமண, ஆதிவாசி அறிவு மரபுகளை ஒதுக்குதல்.

மத நிறுவனங்கள்: கோயில் நிர்வாகத்தில் பார்ப்பன ஆதிக்கம்; சாதிப் படிநிலைகளை மதத்தின் மூலம் புனிதப்படுத்துதல்; 'அவரது அடிமை' எனும் வழிபாட்டு மொழி; தலித் பூசாரிகள் மறுப்பு; சமயச் சடங்குகள் வழியாகச் சாதிப் பாகுபாட்டை மறுஉற்பத்தி செய்தல்.

ஊடகங்கள்: பல செய்தி ஊடகங்களில் உயர் சாதியினரின் குரல்கள் மட்டுமே முதன்மை; தலித், முஸ்லிம், ஆதிவாசி மக்களின் பிரச்சினைகள் விளிம்புநிலைப்படுத்தப்படுதல்; 'தேசிய கலாச்சாரம்' எனச் சொல்லப்படுவதில் பெரும்பாலும் உயர்சாதிக் கூறுகளே முன்னிறுத்தப்படுதல்.

கலை, இலக்கியம், திரைப்படம்: 'பாரதீயம்', 'ஆரியம்', 'இந்தியத் தன்மை' எனப் பேசப்படுவதில் சமஸ்கிருதம், வட இந்தியக் கலைகள், பெரும்பாலான செவ்வியல் கலை-இலக்கியத் தளங்களில் உயர் சாதியின் கட்டுப்பாடு; தலித் மற்றும் பிற ஒடுக்கப்பட்டோரின் கலைவடிவங்கள் (வில்லுப்பாட்டு, குரவை, கூத்து) 'சிறுகலை' அல்லது 'நாட்டுப்புறத்தார் கலை' என வகைப்படுத்தி மதிப்புக் குறைத்தல்.

குடும்பம், சமூக உறவுகள்: உணவுப் பழக்கவழக்கங்கள், திருமண முறைகள், தெய்வ வழிபாடு, பேச்சு வழக்கில் கூட சாதிக் குறியீடுகள் உட்பொதிந்து கிடக்கின்றன. சிறுவயதிலேயே 'நீ எந்தச் சாதி?' என்ற கேள்வி மூலம் வர்ண அடையாளம் உள்வாங்கப்படுகிறது.

பொய் உணர்வு (False Consciousness) மற்றும் 'நல்லுணர்வு' (Common Sense)

கிராம்சியின் கூற்றுப்படி, ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கம் இவ்வளவு ஆழமாகச் செயல்படும்போது, ஒடுக்கப்பட்டோர் கூட தங்கள் ஒடுக்குமுறையை இயற்கையானதாக, தவிர்க்க முடியாததாக, அல்லது விதியின் பயனாக ஏற்றுக்கொள்ளத் தொடங்குகிறார்கள்.

இதற்கு இந்தியச் சூழலில் 'கரும வினை', 'பிறவிக் கடன்', 'அவனவன் பாடு அவனவனுக்கு' போன்ற நம்பிக்கைகள்

எடுத்துக்காட்டுகளாகும். ஒரு தலித் நபர் ‘நான் இந்தச் சாதியில் பிறந்தது விதியால்’, ‘இந்தப் பிறவியில் துன்பப்பட்டால் அடுத்த பிறவியில் நன்றாக இருக்கும்’ என்று நம்பும்போது, அந்த நம்பிக்கை அவர் ஒடுக்கப்படுவதற்கு சம்மதிப்பதாக ஆகிறது. இதைத்தான் கிராம்சி **‘முரண்பாடுகள் நிறைந்த பொதுப்புத்தி’** (Contradictory Common Sense) என்கிறார். ஒருபுறம் மக்கள் தங்கள் ஒடுக்குமுறையை உணர்கிறார்கள், மறுபுறம் அதற்கான ஒரு பண்பாட்டு விளக்கம் (மதம், விதி, மரபு) அவர்களை ஆற்றுப்படுத்துகிறது.

இந்திய மார்க்சியம் மற்றும் சாதிப் பிரச்சினை

கிராம்சியை இந்திய இடதுசாரிகள் பலரும் படித்திருந்தாலும், சாதிப் பிரச்சினைக்குப் பண்பாட்டு மேலாதிக்கக் கண்ணோட்டத்தைப் பயன்படுத்துவதில் பெரும்பாலும் தோல்வியடைந்தனர். இந்திய மார்க்சிஸ்டுகள் பெரும்பாலும் வர்க்கத்தையே முதன்மை முரண்பாடாகக் கண்டனர். ஆனால் அம்பேத்கர் சுட்டிக்காட்டியது போல்:

"இந்தியக் கம்யூனிஸ்ட்கள் சாதியத்தை அதன் மேலாதிக்கத்தை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை"

சாதி என்பது பொருளாதாரச் சுரண்டல் மட்டுமல்ல; அது ஒரு முழுமையான பண்பாட்டு-கருத்தியல் அமைப்பு ஆகும். ஒரு தலித் நபர் நகரத்தில் பணக்காரர் ஆனாலும், அவர் தனது சாதி அடையாளத்தை முழுவதுமாகக் களைந்துவிட முடிவதில்லை, ஏனெனில் பெயர், ஊர், வீடு, திருமணம், கோயில், கல்லறை, உணவகம், வாடகை வீடு எல்லாவற்றிலும் சாதிக் குறியீடுகள் வேலை செய்கின்றன. இதைத்தான் கிராம்சி **‘கருத்துநிலைப் பின்னணி’ (Ideological Terrain)** என்று அழைக்கிறார். இந்தப் பின்னணியில் வெற்றிபெறாமல், வெறும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் மூலம் நிரந்தர மாற்றம் வருவதற்கு வாய்ப்பில்லை.

அம்பேத்கரும் எதிர்-மேலாதிக்கப் போராட்டமும்

கிராம்சி மற்றும் அம்பேத்கர் ஆகிய இருவரையும் இணைத்துப் படிப்பது என்பது சமகால இந்திய அரசியலைப் புரிந்துகொள்ள

மிகவும் இன்றியமையாத அறிவியல் முயற்சியாகும். இது வெறும் ஒப்பீட்டு ஆர்வத்தின் விளைவு அல்ல; இந்தியச் சமூகத்தின் ஆழ்மன அமைப்பை ஆராய வேண்டிய வரலாற்று அவசியம். இந்தியாவில் அரசியல், மதம், சாதி, மொழி, கலாச்சாரம், கல்வி, ஜனநாயகம் ஆகியவை ஒன்றுக்கொன்று வெளியில் இருக்கும் தனித்துறைகள் அல்ல. அவை ஒன்றையொன்று கட்டமைத்து, ஒன்றையொன்று பலப்படுத்தி, அதிகாரத்தின் நிலைத்தன்மையை உருவாக்குகின்றன. இந்த அதிகார அமைப்பு வெறும் அரசின் வன்முறையால் மட்டும் இயங்குவதில்லை; மக்களின் மன உலகத்துக்குள்ளே புகுந்து அவர்களின் ஒப்புதலையே பெற்றுக்கொண்டு இயங்குகிறது. இதை மிகத் தெளிவாக விளக்கியவர் கிராம்சி. இந்தியச் சூழலில் அதற்கான உயிருள்ள எடுத்துக்காட்டை வெளிப்படுத்தியவர் அம்பேத்கர். அம்பேத்கர் கிராம்சிய சிந்தனையின் இந்திய வடிவமாகத் தோன்றினாலும் அவர் வெறும் கிராம்சியின் பிரதிபலிப்பு அல்ல. இந்திய சமூகத்தின் தனித்துவமான சிக்கல்களை உலக அரசியல் சிந்தனையின் மொழிக்குள் கொண்டு வந்த சுயாதீன தத்துவவாதி. இந்தியாவில் வர்க்கத்தை விட சாதி அடிப்படையான அதிகார வடிவம் என்பதை மிகத் தெளிவாக உணர்ந்தவர். அதனால் தான் அவர் **"சாதி என்பது வெறுமனே உழைப்பின் பிரிவினை அல்ல; அது உழைப்பாளர்களின் பிரிவினையாகும்" (Caste is not merely a division of labour; it is a division of labourers)** என்று கூறினார். இது ஒரு பொருளாதார விமர்சனம் மட்டுமல்ல; மனிதத் தன்மையின் அரசியல் குறித்த கூர்மையான விளக்கம்.

கிராம்சியின் மண்ணின் இயைபுடைய அறிவுஜீவிகளின் பண்புகளை அம்பேத்கர் கீழ்க்கண்ட வகைகளில் கொண்டுள்ளார் எனலாம்:

(1) சாதிய ஒடுக்கப்பட்ட பின்னணியில் இருந்து வந்தவர்.

(2) தனது சமூகத்தின் (தலித்துகள்) உண்மையான நலன்களைப் புரிந்து, அதற்காக வாழ்நாள் முழுவதும் போராடினார்.

(3) மரபான அறிவுக் கட்டமைப்புகளை (வேதாகமம், மனுதர்மம், சாதி தர்மம்) முற்றாக விமர்சித்தார்.

(4) புதிய பண்பாட்டு அடித்தளத்தை – பௌத்த நவயானத்தை – முன்வைத்தார்.

அல்தூசர் கூறும் கருத்தியல் கருவிகள் (Ideological State Apparatuses) என்ற கருத்து இங்கு நினைவுகூரத்தக்கது. பள்ளி, மதம், குடும்பம், ஊடகம் போன்றவை ஆட்சியின் கருத்தியல் கருவிகள் என்று அல்தூசர் கூறுகிறார். ஆனால் கிராம்சி இதை இன்னும் உயிருள்ள சமூக இயக்கமாகப் புரிந்துகொண்டார். இந்தியாவில் இந்தக் கருத்தியல் அமைப்புகள் சாதியை இயல்பானதாக மாற்றுகின்றன. இதனால்தான் சாதி வெறும் சட்ட மாற்றத்தால் உடையவில்லை. அம்பேத்கர் இதை ஆழமாகப் புரிந்திருந்தார். அதனால் அவர் அரசியல் சுதந்திரத்தை விட சமூக ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தினார். **"அரசியல் ஜனநாயகத்தின் அடித்தளத்தில் சமூக ஜனநாயகம் இல்லாவிட்டால், அரசியல் ஜனநாயகம் நீடித்து நிலைக்க முடியாது."** (Political democracy cannot last unless there lies at the base of it social democracy) என்ற அவரது கூற்று இந்திய அரசியலின் மிக முக்கியமான எச்சரிக்கை. வாக்குரிமை இருந்தாலும் மனித மரியாதை இல்லாத சமூகம் உண்மையான ஜனநாயகமல்ல என்றார். இந்திய அரசியலமைப்பை உருவாக்கியபோதும் அவர் எச்சரித்தார்: **"ஒரு மனிதன் ஒரு வாக்கு" என்ற அரசியல் சமத்துவம், "ஒரு மனிதன் ஒரு மதிப்பு" என்ற சமூக சமத்துவமாக மாறாவிட்டால் ஜனநாயகம் உடைந்து போகும்.**

இந்தக் கருத்து இன்றைய இந்திய அரசியல் சூழலில் மிகுந்த பொருத்தமுடையது. தேர்தல் ஜனநாயகம் இருப்பினும் சமூக ஜனநாயகம் பல இடங்களில் இல்லை. சாதி வன்முறைகள், மத வெறுப்பு, மொழி ஆதிக்கம், பெண்கள் மீதான கட்டுப்பாடு, சிறுபான்மையினரின் அச்சம் ஆகியவை தொடர்ந்து நிலவுகின்றன. இது கிராம்சி கூறிய "passive revolution" (மேலிருந்து நிகழ்த்தப்படும் புரட்சி) என்ற கருத்தை நினைவுபடுத்துகிறது. அதாவது மாற்றம் நிகழ்வது போலத் தோன்றினாலும், ஆதிக்க அமைப்பு தனது மையத்தை இழக்காமல் புதிய வடிவங்களில் தன்னைத் தக்கவைத்துக் கொள்கிறது.

இந்திய முதலாளித்துவமும் சாதிய அமைப்பும் இணைந்து இயங்குகின்றன என்பதை அம்பேத்கர் முன்னரே உணர்ந்திருந்தார். நவீன தொழில்மயமாக்கல் சாதியை உடைத்துவிடும் என்ற நம்பிக்கையை அவர் ஏற்கவில்லை. இன்று தகவல் தொழில்நுட்பம், நகர்ப்புறம், கல்வி வளர்ச்சி ஆகியவை

இருந்தபோதும் சாதி வலுவாகத் தொடர்கிறது. இதை கேபால் குரு போன்ற சிந்தனையாளர்கள் ‘‘அனுபவமும் கோட்பாடும்’’ (experience and theory) என்ற விவாதங்களில் சுட்டிக்காட்டுகின்றனர். தலித் அனுபவம் வெறும் தரவாக மாற்றப்பட்டு மேல்தட்டுக் கல்வியியல் மொழிக்குள் உட்கொள்ளப்படுகிறது; ஆனால் அதன் வாழ்வியல் வேதனை அரசியல் மாற்றமாக மாறவில்லை என்ற விமர்சனம் முக்கியமானது.

மதம் குறித்த அம்பேத்கரின் பார்வையும் கிராம்சிய வாசிப்புக்கு உரியது. மதம் என்பது வெறும் ஆன்மீக அமைப்பு அல்ல; அது சமூக ஒழுங்கை நியாயப்படுத்தும் கருத்தியல் கருவி. இதனால்தான் அவர் இந்து மதத்தைக் கடுமையாக விமர்சித்தார். ஆனால் மதத்தை முழுமையாக நிராகரிக்கவில்லை. மாறாக மாற்று ஒழுக்கவியல் அமைப்பாகப் பௌத்தத்தை முன்வைத்தார். இது மிகவும் முக்கியமான அரசியல் நகர்வு. ஏனெனில் கிராம்சியின் பார்வையில் பழைய மேலாண்மையை உடைக்க புதிய ஒழுக்கவியல் மற்றும் புதிய பண்பாடு அவசியம். அம்பேத்கரின் நவயான பௌத்தம் இதையே செய்கிறது.

இந்திய சமூக மாற்றம் மேற்கத்திய கோட்பாடுகளை இறக்குமதி செய்வதாலேயே மட்டும் சாத்தியமில்லை; இந்திய வரலாற்றுக்குள்ளேயே உள்ள எதிர் மரபுகளை மீட்டெடுக்க வேண்டும் என்ற வழியை அம்பேத்கர் தேர்ந்தெடுத்திருந்தார்.அம்பேத்கர் இந்து மதத்திற்கு மாற்றாக முழு பௌத்தத்தை முன்வைத்தார். ஆனால் அது ஒரு ‘மற்றொரு மதம்’ மட்டுமல்ல; அது ஒரு புதிய பண்பாட்டு உலகக் கண்ணோட்டம் ஆகும். சாதி மறுப்பு, அகிம்சை, கருணை, பகுத்தறிவு, வன்முறையற்ற கம்யூனிசம் ஆகியவற்றை அவற்றின் அடிப்படைக் கூறுகளாக முன் வைத்தார்.

இவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இந்திய மரபு ரீதியான பௌத்தர்கள் அம்பேத்கரின் பௌத்தத்தை ‘அரசியல்படுத்தப்பட்டது’ என்று ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் கிராம்சியின் பார்வையில், ஒவ்வொரு நடைமுறைத் தத்துவமும் (philosophy of praxis) அரசியல்தான். ஒரு தத்துவம் மக்களின் விடுதலைக்குப் பயன்படும்போது, அது ‘மாசுபடவில்லை’; மாறாக, அது ‘நடைமுறைச் சாத்தியம்’

பெறுகிறது. மேலாதிக்கத்தை உடைக்க முழுமையான பண்பாட்டுப் புரட்சி வேண்டுமென்றார். ஒரு சிறு சீர்திருத்தம் போதாது; அடித்தளத்தையே மாற்ற வேண்டும் என்பதே அவர் நிலைப்பாடு.இந்த வகையில், அம்பேத்கர் இந்தியாவின் மிகப் பெரும் கிராம்சியக் கோட்பாட்டாளர் எனலாம். ஏனெனில் வெறும் அரசியல் அதிகாரத்தை இலக்காகக் கொள்ளாமல், பண்பாடு, மதம், கல்வி, மொழி, கலை, நியாயம் – அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு புதிய மானுட மைய அமைப்பை உருவாக்க விரும்பினார்.

கல்வி பற்றிய கிராம்சி மற்றும் அம்பேத்கரின் பார்வைகள் மிகவும் முக்கியமானவை. கிராம்சி பள்ளிகளை வெறும் அறிவு வழங்கும் இடங்களாகப் பார்க்கவில்லை. அவை ஒழுக்கம் மற்றும் சமூக ஒப்புதலைஉருவாக்கும் இடங்களாகக் கண்டார். அதேவேளை அவை மாற்று சிந்தனைகளுக்கான தளமாகவும் மாறலாம். அம்பேத்கரின் “கற்பி, ஒருங்கிணை, போராடு” (Educate, Agitate, Organize) என்ற முழக்கம் வெறும் கல்விக்கான கோரிக்கை அல்ல; அறிவின் ஜனநாயகமயமாக்கலுக்கான அழைப்பு. கல்வி என்பது வேலைக்கான தகுதி அல்ல; மனித மரியாதைக்கான ஆயுதம் என்ற புரிதல் அதற்குள் உள்ளது.

இந்தியச் சூழலில் பண்பாட்டு மேலாதிக்கம், ‘இந்தியா – பாரதம்’ என்ற இரட்டைக் கட்டுமானம், தேசியக் கல்விக் கொள்கை, திரைப்படங்கள், ஊடகங்கள் மற்றும் மொழிக் கொள்கைகள் வழியாகத் தொடர்ந்து மறுஉற்பத்தி செய்யப்படுகிறது. நவீன, பன்முக இந்தியாவிற்கு எதிராகப் பாரம்பரிய இந்துப் பண்பாட்டை ‘உண்மையான தேசிய அடையாளம்’ என முன்வைப்பதும், கல்வியில் வேதாந்தம், யோகா, சமஸ்கிருதம் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி தலித், ஆதிவாசி, பௌத்த, சமண அறிவு மரபுகளை விளிம்புநிலைப்படுத்துவதும், திரைப்படங்கள் மற்றும் வெகுஜன ஊடகங்களில் இந்துத்துவா மையப்படுத்தப்பட்ட கதையாடல்களை உருவாக்குவதும், மொழிக் கொள்கைகளின் மூலம் சில மொழிகளுக்கு உயர்ந்த அந்தஸ்தையும் மற்றவற்றுக்குத் தாழ்ந்த மதிப்பையும் வழங்குவதும் கிராம்சி கூறிய மேலாதிக்கத்தின் சமகால வடிவங்களாகும். இதற்கு எதிராகத் தலித் இலக்கியம், கிராமிய மற்றும் ஆதிவாசிக் கலைகளின் மறுஉருவாக்கம், சமூக ஊடகங்களில் உருவாகும்

மாற்றுக் கதையாடல்கள், தலித், பழங்குடி, பெண்ணிய, அம்பேத்கரிய, மார்க்சிய சிந்தனைகளைக் கல்வி மற்றும் பாடத்திட்டங்களில் இணைக்கும் முயற்சிகள் போன்றவை எதிர் மேலாதிக்கப் போராட்டங்களாக உருவெடுத்து, குடிமைச் சமூகத்தின் பண்பாட்டு மற்றும் அறிவார்ந்த தளங்களில் புதிய ஜனநாயக இடங்களை உருவாக்க முயல்கின்றன.

எதிர் மேலாதிக்க இயக்கங்கள் - இன்றைய தேவை

எதிர் மேலாதிக்க அரசியலின் இன்றைய வடிவங்கள் தலித் இலக்கியம், கிராமிய மற்றும் பழங்குடிக் கலைகளின் மறுஉருவாக்கம், சமூக ஊடக எதிர்-சொற்பொழிவுகள் மற்றும் கல்விப் பாடத்திட்ட மாற்றங்கள் ஆகியவற்றின் வழியாக வெளிப்படுகின்றன. மொழி, இலக்கியம், கவிதை, தன்னிலை வரலாறு போன்றவற்றின் மூலம் சாதிய மேலாதிக்கத்தைச் சவாலுக்கு உட்படுத்தும் தலித் எழுத்தாளர்களும், முன்பு விளிம்புநிலைப்படுத்தப்பட்ட கூத்து, வில்லுப் பாட்டு, தப்பாட்டம், சிலம்பாட்டம் போன்ற கலைவடிவங்களை எதிர்ப்பின் கருவிகளாக மாற்றும் கலைஞர்களும் கிராம்சி குறிப்பிட்ட இயைபுடைய அறிவுஜீவிகளின் (Organic Intellectuals) பணியை முன்னெடுக்கின்றனர். அதேபோல், சமூக ஊடகங்கள் ஒடுக்கப்பட்ட குரல்களைப் பொதுவெளிக்குக் கொண்டு வந்தாலும், அவை பெருநிறுவனக் கட்டுப்பாட்டில் இருப்பதால் அதன் விடுதலைச் சாத்தியங்கள் வரம்புக்குட்பட்டவையாக உள்ளன. மேலும், தலித், பழங்குடி, பெண்ணிய, பௌத்த, மார்க்சிய, அம்பேத்கரிய மற்றும் கிராம்சிய சிந்தனைகளைக் கல்வியில் இணைக்கும் முயற்சிகள் பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு எதிரான முக்கியமான அறிவார்ந்த போராட்டங்களாக இருந்தாலும், அவை இன்னும் நிறுவன ரீதியான எதிர்ப்புகளையும் தணிக்கைகளையும் எதிர்கொள்கின்றன.

முடிவுரை

இந்தியச் சூழலில் கிராம்சியைப் புரிந்துகொள்வது அம்பேத்கரின் சாதி, மதம் மற்றும் சமூகநீதி குறித்த சிந்தனைகளின் வழியாகவே முழுமையடைகிறது. இன்றைய இந்தியாவில் சமூகநீதி, சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தை ஆழப்படுத்த வேண்டுமெனில், கிராம்சியின் பண்பாட்டு

மேலாதிக்கப் பகுப்பாய்வையும் அம்பேத்கரின் சாதி ஒழிப்பு மற்றும் மனித விடுதலைத் திட்டத்தையும் இணைத்துப் படிப்பதும் நடைமுறைப்படுத்துவதும் தவிர்க்க முடியாத அறிவார்ந்த மற்றும் அரசியல் தேவையாகும். இது வெறும் ஆட்சிமாற்றத்திற்கான அழைப்பு அல்ல; மாறாக மனித மரியாதை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூகப் பொது அறிவை உருவாக்குவதற்கான அழைப்பாகும்.

உதவிய நூல்கள்:

(1) Gramsci, A. (1971). Selections from the Prison Notebooks. International Publishers. (தமிழில்: கிராம்சி புரட்சியின் இலக்கணம், எஸ்.வி. ராஜதுரை, வ. கீதா)

(2) Ambedkar, B.R. (1936). Annihilation of Caste.

(3) The Oxford Handbook of Antonio Gramsci. Oxford: Oxford University Press, 2018.

(4) Ambedkar: Towards an Enlightened India. New Delhi: Penguin Random House India, 2004.

(5) Rajadurai, S. V., and V. Geetha. அந்தோனியோ கிராம்சி: வாழ்வும் சிந்தனையும். கோவை: விடியல் பதிப்பகம், 1992.

(6) Geetha, V. சுயமரியாதையும் சமதர்மமும்: அந்தோனியோ கிராம்சியின் வாழ்வும் சிந்தனையும். கோவை: விடியல் பதிப்பகம், 1994.

♦♦♦

அந்தோனியோ கிராம்சி

கட்டுரையார்
எழுத்தாளர்/
சமூகச் செயற்பாட்டாளர்

வாடிகனின் பாவமன்னிப்பும்
எதிர்காலம் பற்றிய எச்சரிக்கையும்!

எம். பாண்டியராஜன்

"ஆண்டவரால் எல்லையற்ற அன்பு காட்டப்படும் மனிதர்களின் அளப்பரிய கண்ணியத்திற்கு முற்றிலும் மாறாக, அவர்கள் அனுபவித்த அளவற்ற துயரங்களையும் அவமானங்களையும் நினைத்துப் பார்க்கும்போது ஆழ்ந்த வேதனையை உணராமல் இருக்க முடியாது. இதற்காக, திருச்சபையின் பெயரால் (சார்பில்), நான் மனப்பூர்வமாக மன்னிப்புக் கோருகிறேன்."

பல நூற்றாண்டுகளாக அடிமை முறையை நியாயப்படுத்தியதில் வாடிகனின் பங்கிற்காகவும், அடிமை முறையைக் கண்டிக்கத் தவறியதற்காகவும், வாடிகன் மாநகரில், ஆப்பிரிக்க நாளான மே 25 ஆம் நாளில், வரலாற்றுச் சிறப்புமிக்க மேற்கண்ட பகிரங்க மன்னிப்பைக் கோரியவர், உலகெங்குமுள்ள ரோமன் கத்தோலிக்கக் கிறித்துவர்களின் தலைமைப் பீடத்தின் அதிஉயர் தலைவரான திருத்தந்தை (போப் ஆண்டவர்) 14ஆம் லியோ.

திருத்தந்தையின் இந்த மன்னிப்புக் கோரல் சாதாரணமான ஒன்றல்ல; உலகளாவிய சமுதாய மற்றும் அரசியல் தளங்களில் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், வாடிகனில் ஏற்கெனவே இருந்த திருத்தந்தைகளில் சிலர், அட்லாண்டிக் கடலைத் தாண்டி மேற்கொள்ளப்பட்ட அடிமை வர்த்தகத்தில்

கிறித்துவர்களின் பங்களிப்பிற்காக, தனிப்பட்டவர்களின் தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்டிருக்கின்றனர். ஆனால், "நம்பிக்கையற்றவர்களை" – ‘கிறித்துவர்கள் அல்லாதவர்களை – மாற்று மதத்தினரை’ அடக்கி ஆளவும், அடிமைப்படுத்தவும் ஐரோப்பிய ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்தை வழங்கியதில் கடந்த காலத் திருத்தந்தைகளின் பங்கை எந்தவொரு திருத்தந்தையும் இதுவரை பகிரங்கமாக ஒப்புக்கொண்டதும் இல்லை; அதற்காக மன்னிப்புக் கேட்டதும் இல்லை.

ஆனால், **இப்போது முதல் முறையாக, அடிமை முறையை அங்கீகரித்து சட்டப்பூர்வமானதாக வைத்திருந்ததற்காக, வாடிகனே, அதன் அதிஉயர் தலைவரே மன்னிப்புக் கேட்டிருக்கிறார்.** அட்லாண்டிக் கடல் கடந்த அடிமை வணிகத்தை மனித குலத்துக்கு எதிரான மிகக் கொடிய குற்றமென ஐக்கிய நாடுகள் அவை அறிவித்த சில மாதங்களில் இந்த மன்னிப்புக் கோரப்பட்டிருக்கிறது. இதை உலகில் காலங்காலமாகப் பாதிக்கப்பட்டு வந்துள்ள ஆப்பிரிக்க மற்றும் பூர்வகுடி மக்களின் சந்ததியினருக்குக் கிடைத்த தார்மிக வெற்றி அல்லது ஆறுதல் எனக் கொள்ளலாம்.

மகத்தான மனிதநேயம் (மாக்னிஃபிகா ஹியூமானிட்டாஸ் - Magnifica Humanitas) என்ற பெயரில் திருத்தந்தை 14 ஆம் லியோ வெளியிட்ட இந்த அதிகாரப்பூர்வ சுற்றறிக்கையில் (Encyclical Letter) அறிவித்தலில், உலகமே செய்யறிவை நோக்கி வேகமாக நகர்ந்துகொண்டிருக்கும் வேளையில் மனித நேயத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டதுடன், எண்மப் (டிஜிட்டல்) புரட்சியானது, புதுப்புது வடிவங்களில், கடந்த காலமாகிவிட்ட, வழக்கொழிந்த அடிமை முறைக்கும் காலனித்துவத்திற்கும் மீண்டும் வழிவகுத்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். புதிய அடிமைத்தனத்தைப் பேச வரும்போதுதான், அதனுடன் ஒப்பிட்டுப் பழைய அடிமை வர்த்தகத்துக்காகவும் மன்னிப்புக் கேட்டார் அவர்.

கடவுளின் குழந்தைகளாக அனைத்து மனிதர்களின் கண்ணியத்தையும் எப்போதும் நிலைநிறுத்தி வருவதாகக் கத்தோலிக்கத் திருச்சபை வாதிட்டுவந்தாலும், வரலாற்றில், 15ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ச்சியாக வாடிகனில்

இருந்து பிறப்பிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ ஆணைகள் (Papal Bulls) அல்லது அறிவுறுத்தல்கள் எப்போதும், ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்காவின் நிலப் பகுதிகளைக் கைப்பற்றவும், அங்கிருந்த பூர்வகுடி மக்களை, ஆப்பிரிக்கர்களை, கிறித்துவர் அல்லாதவர்களை அடிமைப்படுத்தவும் போர்த்துகேய (மற்றும் ஐரோப்பிய) ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் அளித்து வந்திருக்கின்றன.

கி.பி. 1452இல் வாடிகனிலிருந்த திருத்தந்தை 5 ஆம் நிக்கோலஸ் வெளியிட்ட ஆணையில் (டம் டைவெர்சஸ் - Dum Diversas), போர்த்துகேய மன்னருக்கும் அவருடைய வாரிசுகளுக்கும் உலகில் எங்கே வேண்டுமானாலும், ‘நம்பிக்கையற்றவர்கள், கிறித்துவின் பெயருக்கு எதிரானவர்களின்’ நிலம் போன்ற அனைத்து உடைமைகளையும் ஆக்கிரமிக்கவும், கைப்பற்றவும், போரிடவும், அடக்கியாளவும் உரிமையை வழங்கியது.

இந்த ஆணையும், அதன்பின் மூன்று ஆண்டுகள் கழித்து வெளியிடப்பட்ட மற்றோர் ஆணையும் (Romanus Pontifex), ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் காலனித்துவ கால நில ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தின. இந்த அனுமதிகள், 1456இல் திருத்தந்தை 3 ஆம் கலிஸ்டஸாலும், 1481இல் திருத்தந்தை 4 ஆம் சிக்ஸ்டஸாலும், 1514 இல் திருத்தந்தை 10 ஆம் லியோவாலும் உறுதிப்படுத்தப்பட்டன அல்லது புதுப்பிக்கப்பட்டன.

இதேபோல, அமெரிக்க கண்டத்திலுள்ள நிலங்களுக்கான உரிமைகளை ஸ்பானிய மன்னர்கள் பெற்றனர்.

2023ஆம் ஆண்டில், இந்தக் கோட்பாட்டை அதிகாரப்பூர்வமாக வாடிகன் நிராகரித்தாலும், அந்த ஆணைகளை ஒருபோதும் அதிகாரப்பூர்வமாக இரத்து செய்யவோ, இரத்து செய்வதாக அறிவிக்கவோ இல்லை (1537இல் வெளியிடப்பட்ட பிந்தைய ஆணை (Sublimis Deus), பூர்விகக் குடிகளின் சுதந்திரத்தையோ அல்லது அவர்களின் சொத்துகளையோ பறிக்கக் கூடாது; அவர்களை அடிமைப்படுத்தக் கூடாது என்றும் உறுதிப்படுத்தியதாக வாடிகன் கூறுகிறது).

அடிமை முறையைப் பல நாடுகள் ஒழித்து, நீண்ட காலத்திற்குப் பிறகுதான், 1888 ஆம் ஆண்டில், வெளிப்படையாக அடிமை முறையைத் திருச்சபை கண்டித்தது; முதன்முதலாக

அடிமை முறையைக் கண்டித்த திருத்தந்தையின் பெயரும் லியோதான் திருத்தந்தை 13ஆம் லியோ. இதையும்கூட தன்னுடைய அறிவித்தலில் நினைவு கூர்ந்திருக்கிறார் தற்போதைய திருத்தந்தை 14 ஆம் லியோ [அதுவரை பழங்காலத்திலும் இடைக்காலத்திலும் திருச்சபை நிறுவனங்களிலும் கிரேட் கிரிகோரி போன்ற திருத்தந்தைகள்கூட அடிமைகளைக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது].

'மகத்தான மனிதநேய' சுற்றறிக்கையில் 15 ஆம் நூற்றாண்டுத் திருத்தந்தையின் ஆணைகளை ஒப்புக்கொண்ட லியோ, "ஆரம்பகால நவீன காலத்திலேயே, ஆட்சியாளர்களின் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, அடிமைப்படுத்துதலின் வடிவங்களை ஒழுங்குபடுத்தவும் நியாயப்படுத்தவும் வாடிகன் பல முறை தலையிட்டிருக்கிறது, மேலும் சில சந்தர்ப்பங்களில், 'நம்பிக்கையற்றவர்களை' அடிமைப்படுத்துவதும் இதில் அடங்கும் என்றும், கூடவே, இன்றைய சூழ்நிலைமையுடன் பொருத்திப் பார்த்துக் கடந்த கால முடிவுகளை மதிப்பிட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"இருந்தபோதிலும், அடிமை முறையின் கொடுமையைக் கண்டிப்பதில் இந்த சமுதாயமும் திருச்சபையும் காட்டிய தாமதத்தை நம்மால் மறுக்கவோ அல்லது குறைத்து மதிப்பிடவோ முடியாது."

"இது கிறித்துவ நினைவுத்தடத்தில் ஒரு காயமாக விளங்குகிறது. இதிலிருந்து நாம் ஒருபோதும் நம்மை விலக்கிக்கொண்டுவிட முடியாது."

"நமது விசுவாசத்திற்குத் தேவையான மனித விழுமியங்களை மதிக்கத் தவறியதற்காக **எதிர்காலத்தில் நாம் மீண்டும் மன்னிப்புக் கேட்கும் நிலை ஏற்படுவதைத் தவிர்க்க விரும்பினால், எண்ம (டிஜிட்டல்) தொழில்நுட்ப புரட்சி ஞ் செய்யறிவு தொடர்பான அனைத்து வகையிலான நவீன அடிமைத்தனங்களையும் திருச்சபை உறுதியாகக் கண்டிக்க வேண்டும்**" என்று அழைப்பு விடுத்துள்ளார்.

தொழில்நுட்பத் துறை உள்பட அனைத்துத் துறைகளிலும் செய்யறிவின் தாக்கம் தீவிரமடைந்து வரும் இந்த காலகட்டத்தில், நவீன அடிமைத்தனத்தைப் பற்றிப் பேச வந்த திருத்தந்தை

லியோ, தற்போதைய சிக்கல்களைப் பற்றி நம்பகத்தன்மையுடன் அணுகுவதற்குத் தோதாக வரலாற்றின் அடிமைத்தனத்தில் திருச்சபையின் பங்களிப்பை ஒப்புக்கொண்டிருக்கிறார் எனலாம்.

செய்யறிவுக் காலத்தில் மனித மாண்பைக் காப்பது பற்றிப் பேசும் திருத்தந்தையின் இந்த வரலாற்று ஆவணம் 'Magnifica Humanitas' "மகத்தான மனிதநேயம்" என்ற இலத்தீன் சொற்கள், எந்தவோர் அதிநவீனமும் மனிதனின் உன்னதத்தை மாற்றிவிட முடியாது என்பதைச் சுட்டுவதாகக் கருதப்படுகிறது.

தவிர, விவிலியத்தில் அன்னை மரியாள் பாடிய 'மேக்னிஃபிகாட்' என்ற பாடலையும் நினைவுபடுத்துவதுடன், வரலாற்றின் இருண்ட காலங்களிலும் நம்பிக்கையை நெய்யும் "நம்பிக்கைக்கான நெசவாளர்களாக" (Weavers of Hope) மனிதர்கள் மாற வேண்டும் என்ற அழைப்பும் விடுக்கப்படுகிறது.

1891 ஆம் ஆண்டு மே 15ல் திருத்தந்தை பதிமூன்றாம் லியோவும் தொழில்துறை புரட்சியின்போது தொழிலாளர்களின் உரிமைகளுக்கான 'ரெரும் நோவாரம்' (Rerum Novarum) என்ற புகழ்பெற்ற சமூக நீதி ஆவணத்தை வெளியிட்டார். அதே வழியில், அதே நாளில் இப்போது செய்யறிவுப் புரட்சிக்காக மகத்தான மனிதநேயம் என்ற ஆவணத்தில் தற்போதைய திருத்தந்தை 14 ஆம் லியோ கையெழுத்திட்டிருக்கிறார்.

மகத்தான மனிதநேயத்தில் செய்யறிவுத் தொழில்நுட்பத்தை மனிதநேயத்தோடு அணுகுவதற்கான வழிகளைச் சுட்டிக்காட்டுகிறார் திருத்தந்தை 14 ஆம் லியோ:

செயல்திறனைவிட மனித மாண்பே முக்கியம்

செயல்திறன் (Efficiency) மட்டுமே ஒரு மனிதனின் மதிப்பைத் தீர்மானிக்கும் அளவுகோலாக மாறும்போது, மனிதர்கள் தங்களை உறவுகளாகப் பார்ப்பதற்குப் பதிலாக, மேலும் மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய (Optimized) ஒரு வெற்றுப் பொருளாகப் பார்க்கும் ஆபத்து ஏற்படுகிறது.

மனிதனைவிட வேகமாக செய்யறிவு வேலை செய்யலாம், ஆனால் மனிதனுக்கு இருக்கும் ஆன்மா, மனசாட்சி மற்றும் நன்மைகளையும் தீமைகளையும் ஆய்ந்தறியும் பக்குவம் வராது.

மனிதக் குறைபாடுகளும் அழகும்

செய்யறிவு உலகம் மனிதனைப் பிழையற்ற ஒரு 'சூப்பர் ஹியூமனாக' (Enhanced Human Being) மாற்ற முயல்கிறது. ஆனால், மனிதர்களின் பலவீனம், நோய், முதுமை, மற்றும் துயரங்கள் ஆகியவை எல்லாம் நீக்கப்பட வேண்டிய "குறைபாடுகள்" அல்ல; மாறாக, இவற்றுக்கு இடையேதான் மனிதநேயமும், ஒருவருக்கொருவர் உதவும் அன்பும் வளர்கிறது.

எண்ம உலகில் சமூக நீதி

செய்யறிவு தொழில்நுட்பத்தால் ஏற்படக் கூடிய ஆபத்துகள்:

ரோபோக்கள் மற்றும் செய்யறிவு காரணமாக எளிய மக்களின் வாழ்வாதாரமும் வேலைவாய்ப்புகளும் பறிபோகும் சூழல் ஏற்படும்.

தவறான தகவல்கள் மற்றும் தனியுரிமை மீறல்கள் மூலம் மக்களின் சிந்தனையைத் திசை திருப்பும் ஆபத்து.

தொழில்நுட்ப ஆதிக்கம் மூலம் ஏழை நாடுகளையும் எளிய மக்களையும் புதிய வடிவில் சுரண்டுவது.

தானியங்கி ஆயுதங்களுக்கு எதிர்ப்பு

போர்க்களங்களில் மனிதர்களின் தலையீடின்றி, தாமாகவே இலக்குகளைத் தாக்கி அழிக்கும் 'தானியங்கி ஆயுத முறைகள்' ஆபத்தானவை. உயிர் மற்றும் மரணம் பற்றி முடிவெடுப்பதில் தார்மிகப் பொறுப்பும், அறமும் அவசியம்; அதை ஒரு கணினியிடம் ஒப்படைக்கக் கூடாது.

விவிலியத்திலிருந்து வினா

இந்தச் சுற்றறிக்கையில் 14 ஆம் லியோ, இரு முக்கிய விவிலியப் பின்னணிகளைக் குறிப்பிடுகிறார் மனிதன் இறைவனை விடத் தானே பெரியவன் என்று தொழில்நுட்ப வலிமையால் தலைக்கனம் கொண்டு அழிந்ததைக் குறிக்கும் பாபெல் கோபுரம் மற்றும் அனைவரும் இணைந்து, பொறுப்புணர்வுடன் சமூகத்தைக் கட்டியெழுப்புவதைக் குறிக்கும் ஜெரூசலேம் மதில்களைக் கட்டுதல். இரண்டையும் சுட்டிக்காட்டி, நாம் பாபெல் கோபுரத்தைக் கட்டப் போகிறோமா அல்லது மனிதநேயம் மிக்க

ஒரு புனித நகரத்தைக் கட்டப் போகிறோமா? என்ற கேள்வியை உலகின் முன் வைக்கிறார்.

அதிகாரத்தின் கலாசாரமா? அன்பின் நாகரிகமா?

தொழில்நுட்ப முன்னேற்றத்தைக் கத்தோலிக்க திருச்சபை எதிர்க்கவில்லை; மாறாக, **தொழில்நுட்பம் என்பது மனிதனுக்குச் சேவை செய்யும் ஒரு "கருவி" மட்டுமே தவிர, அதுவே மனிதனை ஆளும் "அதிகாரமாக" மாறிவிடக் கூடாது** என்பதுதான் இந்த அழைப்பின் சுருக்கம். உலகளாவிய பேராசை மற்றும் அதிகார கலாசாரத்திற்கு (Culture of Power) மாற்றாக, நீதி, உரையாடல், மற்றும் பொறுப்புணர்வுள்ள "அன்பின் நாகரிகத்தை" (Civilization of Love) உருவாக்க விடுக்கப்பட்டிருப்பதே இந்த அழைப்பு.

காலனிய காலத்தில் மனிதர்களை அடிமைகளாக்கவும் விற்கவும் வாங்கவும் வெளிப்படையாகப் பல ஐரோப்பிய அரசுகளுக்கு அனுமதி வழங்கியதற்காகவும் ஆதரித்து நின்றதற்காகவும் வாடிகன் மன்னிப்புக் கோர வேண்டும் என்று வரலாற்றில் நீண்ட காலமாகவே, கருப்பின அமெரிக்க கத்தோலிக்கர்களும் ஆர்வலர்களும் அறிஞர்களும் வலியுறுத்தி வந்திருக்கின்றனர்.

1985 ஆம் ஆண்டு கேமரூன் சென்றிருந்தபோது, புனித இரண்டாம் ஜான் பால், அடிமை வர்த்தகத்தில் பங்கேற்ற கிறித்துவர்களின் சார்பாக, தனிப்பட்டவர்களின் பாவங்களுக்காக, ஆப்பிரிக்கர்களிடம் மன்னிப்பு கேட்டார், ஆனால் திருத்தந்தைகளின் சார்பாக அல்ல. வாடிகன் அமைப்பின் பங்களிப்பு பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

1992இல் மேற்கு ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய அடிமை வர்த்தக மையமாக இருந்த செனகலின் கோரி தீவுக்குச் சென்றிருந்தபோது, அவர் அடிமை முறையின் அநீதியைக் கண்டித்து, ஒரு நாகரிகத்தின் பேரழிவு என்று குறிப்பிட்டார்.

2015ல் பொலிவியாவில் அமெரிக்க காலனியத்தின்போது, பூர்வகுடி மக்களுக்கு எதிராகத் திருச்சபையின் பெயரால் நிகழ்த்தப்பட்ட குற்றங்களுக்காகத் திருத்தந்தை பிரான்சிஸ் மன்னிப்புக் கேட்டிருக்கிறார்.

திருத்தந்தையின் தற்போதைய இந்த அறிவித்தலை, உண்மையை ஒப்புக்கொண்டு இவ்வாறு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று உலகிலுள்ள ஏராளமான கத்தோலிக்கர்கள் பிரார்த்தனை செய்து காத்திருந்தனர் என்று குறிப்பிட்டு வரவேற்றிருக்கிறார் டேட்டன் பல்கலை. வரலாற்றாசிரியரும், அமெரிக்கக் கத்தோலிக்கக் கறுப்பினக் கன்னியாஸ்திரிகளின் வரலாறு பற்றிய நூலை எழுதியவருமான ஷானன் டி வில்லியம்ஸ்.

வெள்ளை இன மேலாதிக்கத்தின் வரலாற்றில் கத்தோலிக்க திருச்சபை ஒருபோதும் ‘ஒன்றுமறியா பார்வையாளராக’ இருந்ததில்லை என்ற வரலாற்றுப் பின்னணியில், கடல் கடந்த அடிமை வணிகம், மனிதர்களைத் தனிநபர் உடைமைகளாகக் கருதுவதில் திருச்சபையின் பெரும் பங்கு பற்றியும், அதன் நீட்சியாக இன்றும் உலகில் நிலவும் கருப்பினத்தவருக்கு எதிரான இனவெறி அமைப்புகளைப் பற்றியும் வாடிகன் நேர்மையாகப் பேச வேண்டும் என்று கருப்பின கத்தோலிக்கர்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்தனர் என்றும் வில்லியம்ஸ் தெரிவித்திருக்கிறார்.

சுற்றறிக்கை வெளியீட்டு நிகழ்வில் உலகின் முன்னணி செய்யறிவு நிறுவனமான ஆந்த்ரோபிக் (Anthropic)-ன் இணை நிறுவனர் கிறிஸ் ஓலா பங்கேற்றதும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

வாடிகனின் பாரம்பரிய வழக்கப்படி, திருத்தந்தையின் சுற்றறிக்கைகளை கத்தோலிக்க கர்தினால்களும் இறை யியலாளர்களும் மட்டுமே உலகிற்கு அறிமுகப்படுத்துவார்கள். ஆனால், இப்போது 33 வயதேயான, கடவுள் நம்பிக்கை இல்லாத, ஒரு சிலிக்கான் வேலி தொழில்நுட்ப விஞ்ஞானியைத் தனக்கு அருகில் அமரவைத்து இந்த ஆவணத்தைத் திருத்தந்தை வெளியிட்டிருக்கிறார்.

செய்யறிவை உருவாக்கும் முன்னணி ஆய்வகங்களுக்கும், உலகளாவிய தார்மிக அமைப்பான கத்தோலிக்கத் திருச்சபைக்கும் இடையே ஒரு கூட்டு உத்தியை உருவாக்க இந்தச் சந்திப்பு வழிவகுத்துள்ளது எனலாம். செய்யறிவுத் தொழில்நுட்பம் என்பது வெறும் கணினியியலாளர்களால்

மட்டுமே தீர்க்கப்பட வேண்டிய ஒன்றல்ல; இது தத்துவம், மதம், மனிதநேயம் சார்ந்தது என்ற திருத்தந்தையின் கருத்தை கிறிஸ் ஓலாவின் வருகை உறுதிப்படுத்தியுள்ளது.

கூட்டத்தில் பேசிய கிறிஸ் ஓலாவும்கூட, ஆந்த்ரோபிக் உள்ளிட்ட அனைத்து முன்னணி செய்யறிவு நிறுவனங்களும் கடுமையான வணிகப் போட்டி, புவிசார் அரசியல் அழுத்தங்கள் மற்றும் பெருமிதங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இயங்குவதாக வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, வணிக இலாப நோக்கங்களுக்கு அப்பாற்பட்டவராகவே பேசினார்.

இலாப நோக்கமில்லாத, இந்த அழுத்தங்களுக்கு எல்லாம் உள்படாத திருச்சபை போன்ற அமைப்புகள் வெளியிலிருந்து எங்களைக் கூர்ந்து கவனித்து, நாங்கள் தவறு செய்யும்போது சுட்டிக்காட்டும் நேர்மையான விமர்சகராகச் செயல்பட வேண்டும். பண பலத்தால் வளைக்க முடியாத அறத்தின் தார்மிகக் குரல்கள் இந்தத் துறைக்குத் தேவை.

தற்போது செய்யறிவுத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் அதன் பொருளாதார பலன்கள் அனைத்தும் ஒருசில பணக்கார நாடுகளின் கைகளிலேயே குவிந்துள்ளன. இது உலகளாவிய சமமின்மையை அதிகரிக்கும் என்றும், எதிர்காலத்தில் கோடிக்கணக்கான எளிய மக்களின் வேலைவாய்ப்பைப் பறிக்கும் என்றும் கவலை தெரிவித்த கிறிஸ் ஓலா, இந்த இலாப விநியோகப் பிரச்சினைக்குத் தொழில்நுட்ப உலகில் தீர்வு இல்லை என்றும், ஏழை எளிய மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் வரலாற்றுப் பின்னணி கொண்ட திருச்சபையால் மட்டுமே உலக நாடுகள் இவற்றில் கவனம் கொள்ளச் செய்ய முடியும் என்றும் கூறினார்.

ஒரு விஞ்ஞானியாகத் தான் செய்யறிவு மாதிரிகளின் உள் கட்டமைப்பை ஆராய்வதாகக் குறிப்பிட்ட ஓலா, அவற்றை உருவாக்குபவர்களுக்கே சில நேரங்களில் அது மர்மமாகவும், அச்சமூட்டுவதாகவும் இருக்கிறது. சுற்றறிக்கையில் திருத்தந்தை குறிப்பிட்டிருப்பது போல, **செய்யறிவு என்பது மனித மூளையைப் போன்ற கட்டமைப்பில் மனித சொற்களைக் கொண்டு வளர்க்கப்படுகிறது. எனவே, அதன் போக்கை நல்வழிப்படுத்த ஆன்மிக மற்றும் தார்மிக வழிகாட்டுதல் அவசியம்.**

ஆந்த்ரோபிக் நிறுவனம், தற்போது அமெரிக்காவின் டிரம்ப் நிர்வாகத்தோடு செய்யறிவுத் தொழில்நுட்பத்தின் தார்மிகக் கட்டுப்பாடுகள் மற்றும் இராணுவப் பயன்பாடு குறித்துப் பெரிய சட்டப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. இத்தகைய சூழலில், தானியங்கி ஆயுதங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் திருத்தந்தையுடன் கிறிஸ் ஓலா கைகோத்திருப்பது செய்யறிவு பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விவாதத்தை வலுப்படுத்தியுள்ளது.

இதைத் தொழில்நுட்ப உலகமும் ஆன்மிக உலகமும் தனித்தனி பாதைகளில் செல்லாமல், மனிதகுலத்தின் எதிர்கால நன்மையைக் கருதி இணைந்து செல்ல வேண்டியதன் தேவையைக் குறிக்கிற ஒரு தொடக்கமெனலாம்.

இதுவரையிலான கத்தோலிக்க திருச்சபையின் முந்தைய அதிஉயர் தலைவர்களிடமிருந்து தற்போதைய திருத்தந்தை 14 ஆம் லியோ பல்வேறு வகையிலும் வேறுபடுகிறார்.

இதுவரை இருந்தவர்கள் பெரும்பாலும் ஐரோப்பிய அல்லது லத்தீன் அமெரிக்க மரபுகளைச் சேர்ந்தவர்களாகவும், ஆன்மிக, பாரம்பரியக் கோட்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவும் இருந்தனர். ஆனால், இவரோ கத்தோலிக்க வரலாற்றில் ஒரு புதிய அலையை உருவாக்கியுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் அமெரிக்காவைப் பூர்விகமாகக் கொண்ட, ஆப்பிரிக்க மற்றும் பூர்வகுடி வம்சாவளியை – கருப்பினத்தைச் சேர்ந்த முதல் திருத்தந்தை இவர்.

காலனித்துவம், அடிமை முறை மற்றும் இனவெறியின் வடுக்களைத் தன் குடும்பப் பின்னணி வழி நேரடியாக உணர்ந்தவர். இதன் காரணமாகவே, வாடிகனின் முந்தைய காலனித்துவ காலப் பிழைகளை மற்றவர்களைவிட இவரால் மிகவும் துணிச்சலாகவும் ஆழமாகவும் ஒப்புக்கொள்ள முடிந்தது.



முந்தைய போப்களான இரண்டாம் ஜான் பால் அல்லது போப் பிரான்சிஸ் ஆகியோர் திருச்சபையின் கடந்த காலத் தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்டுள்ளனர். ஆனால், அவர்கள் பெரும்பாலும் "திருச்சபையைச் சேர்ந்த தனிப்பட்ட நபர்களின் பாவங்களுக்காகவே" மன்னிப்பு கோரினர்.

ஆனால், இவர் தனி நபர்களைக் குற்றம் சாட்டாமல், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாடிகன் தலைமைப் பீடம் வெளி யிட்ட அதிகாரப்பூர்வ ஆணைகளே அடிமை முறைக்கு ஆன்மிக அங்கீகாரத்தை வழங்கின என்ற கசப்பான உண்மையை நேரடியாக ஒப்புக்கொண்டிருக்கிறார். நிறுவனத்தின் கட்டமைப்பில் இருந்த தவறை ஏற்றுக்கொண்டதே இவரது முதன்மையான வேறுபாடு.

பொதுவாக வறுமை, போர், காலநிலை மாற்றம் போன்ற பாரம்பரியச் சமூகப் பிரச்சினைகளில் மட்டுமே இதுவரை யிலானவர்கள் கவனம் செலுத்தினர். ஆனால் இவர், தொழில்நுட்ப யுகத்திற்கு ஏற்பச் சிந்திக்கிறார்; செயல்படுகிறார்.

இந்தச் செய்யறிவு யுகத்தில் தனது முதல் சுற்றறிக்கையில் முழுமையாகச் செய்யறிவு மற்றும் மனிதநேயம் பற்றியே எழுதியிருக்கிறார்.

வாடிகன் வரலாற்றில் முதன்முறையாக, கடவுள் நம்பிக்கை இல்லாத மற்றும் சிலிக்கான் வேலியின் முன்னணி செய்யறிவு நிறுவனமான ஆந்த்ரோபிக் (Anthropic)கின் இணை நிறுவனர் கிறிஸ் ஒலாவை வாடிகனுக்கு அழைத்து, தனக்கு இணையாக அமர வைத்து தனது கொள்கை விளக்க ஆவணத்தை வெளி யிட்டதன் மூலம் ஆன்மிகத்தையும் அதிநவீன தொழில்நுட்ப அறிவியலையும் இணைத்திருக்கிறார்.

முந்தையவர்கள் கடந்த கால வரலாற்றுச் சம்பவங்களை ஆன்மிகக் கண்ணோட்டத்தில் மட்டுமே அணுகினர். ஆனால், இவரோ கடந்த காலத்தைக் கழுவித் தூரப் போட்டுவிட்டு, வரலாற்றை நிகழ்காலத்தோடும் எதிர்காலத்தோடும் இணைக்கிறார்.

கடந்த கால அட்லாண்டிக் அடிமை வணிகத்திற்காக மன்னிப்புக் கேட்டபோதே, இன்றைய எண்ம உலகில் பெருநிறுவனங்கள் தரவுத் திருட்டு மற்றும் தொழில்நுட்ப ஆதிக்கம் மூலம் ஏழை நாடுகளைச் சுரண்டுவதை எண்ம அடிமைமுறை என்றும் எச்சரிக்கிறார்.

பொதுவாகச் சொன்னால், பாரம்பரிய வாடிகன் சடங்குகள் மற்றும் ஆடம்பரங்களை விடுத்து, எளிய மக்களின் திருத்தந்தையாக, கத்தோலிக்கர்கள் அல்லாத பிற மதத்தினரையும், ஏன் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களையும்கூட மனிதநேயத்தின் அடிப்படையில் ஒன்றிணைக்கும் உலகளாவிய தலைவராகச் செயல்பட முனைகிறார்.

நடந்து முடிந்தவற்றை, கடந்த காலத்தின் வரலாற்றை இனி யாராலும் மாற்றி எழுதிவிட முடியாது. ஆனால், வரலாற்றுத் தவறுகளை நேர்மையுடன், அதுவும் அதிஉயர் பொறுப்புகளில் இருப்போர் ஒப்புக்கொள்வதும் அவற்றிலிருந்து கற்றுக்கொண்டு சமுதாயச் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதும் நாளைய உலக சமுதாயத்தை ஆன்ம சுத்தியுடன் மாற்றியமைப்பதில் பெரும் பங்காற்றும்.

அமெரிக்காவில் பிறந்த இவர், ஆப்பிரிக்க மற்றும் பூர்வகுடி மக்களின் காயங்களை, வலிகளை, வடுக்களை நன்குணர்ந்தவர். எனவேதான், கடந்த காலத் தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொண்டதுடன் மன்னிப்பும் கோரியிருக்கிறார்.

அதன் பின்னரே, அதன் தொடர்ச்சியாகவே விஸ்வரூபமெடுத்துக் கொண்டிருக்கும் இன்றைய செய்யறிவுக் காலத்தில் நவீன அடிமைத்தனத்தைப் பற்றி எச்சரிக்கிறார். எதிர்வரும் காலத்தில் இவ்வாறாக மன்னிப்புக் கேட்கும் நிலை வந்துவிடக் கூடாது என்று விழிப்பூட்டுகிறார். அதுவும் செய்யறிவுத் துறையின் உயர்நிலையிலுள்ள ஒருவரையும் அழைத்து வைத்துக்கொண்டு, வாடிகனிலிருந்து திருத்தந்தை 14 ஆம் லியோ விடுத்திருப்பது உள்ளபடியே மகத்தான மனித நேயத்துக்கான அழைப்புதான். காலம் வழி நடத்தட்டும்.

♦♦♦

கட்டுரையாளர்
எழுத்தாளர் / பத்திரிகையாளர்

தோழர் தியாகு



நன்றி: ஓவியர் சுந்தரன். எம்

தோழர் தியாகு பேட்டி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

– கண. குறிஞ்சி –

● **கண.குறிஞ்சி: சிறையில் இருந்த பொழுதே நீங்கள் மார்க்சியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இணைந்தீர்கள். அச்சமயத்தில் அக்கட்சியில் உங்களோடு பயணித்தவர்கள் குறித்துத் தெரிவிக்க முடியுமா?**

☆ **தோழர். தியாகு:** கல்லூரிப் படிப்பின் இறுதிக் காலத்தில் (1969) காங்கிரசை விட்டு வெளியேறுவது என்ற முடிவுக்கு வந்து விட்டேன். எனக்கு முன் இரண்டு வாய்ப்புகளே இருந்தன: ஒன்று, சிபிஎம், அக்கட்சியைச் சேர்ந்த தோழர்கள் நடராஜன், ஸ்டாலின் போன்றவர்களுடன் நெருக்கமாக இருந்தேன். மற்றொன்று, சிபிஐ(எம்-எல்), அக்கட்சியோடு நேரடித் தொடர்பு இல்லையென்றாலும் **பேராசிரியர் இராதாகிருஷ்ணன்** (இப்போதும் நான் என் ஆசானாக மதிக்கின்ற **மருதமுத்து**) அதன் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். இந்தியச் சமூகப் பகுப்பாய்வு, இந்திய அரசின் வகுப்பியல்பு (வர்க்கத் தன்மை), சோவியத்-சீன வேறுபாடுகள், மா சே-துங் சிந்தனைகள் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் குறித்தும் அவர் சிபிஎம் தோழர்களோடு விவாதம் செய்வார். குடந்தை காந்தி பூங்காவில் அவர்களுக்குள் நடக்கும் விவாதங்களை நானும் இன்னும்

சில ஆர்வங்கொண்ட நண்பர்களும் அருகிலமர்ந்து கவனித்து வருவோம். அவர் வழியாக நான் மா சே-துங் சிந்தனைகளோடு அறிமுகம் பெற்றேன். சிறிய சிவப்புப் புத்தகத்தை எப்போதும் புரட்டிக் கொண்டே இருப்போம். இலங்கையிலிருந்து தோழர் சண்முகதாசன் சீனம் சென்று தலைவரைப் பார்த்து விட்டு வந்து “மாஓ சிந்தனைகள்” சிறுநூலைத் தமிழில் வெளியிட்டுச் சென்றார்.

இராதா ஆங்கிலப் பேராசிரியர் என்பதால் அவருக்கும் என் கல்லூரிப் படிப்புக்கும் தொடர்பில்லை. அவர் எங்கள் கல்லூரிக்கு வரும் போது என் ஆங்கிலப் பாடமெல்லாம் முடிந்திருந்தது. முதன்மைப் பாடம் பூதியல் (இயற்பியல்) மட்டும்தான் எனக்கு எஞ்சியிருந்தது. அதில் எனக்கு ஆர்வம் துளியும் இல்லை. அதிலும் 1969 ஜூன் கல்லூரித் திறப்பிலிருந்து செப்டெம்பர் தேர்வு வரை வருகைப் பதிவு மட்டும்தான். இளம் அறிவியல் நான்காம் ஆண்டு! என் நேரம் முழுவதும் இராதாவுடன் செலவிட்டேன். அவர் வீட்டிலேயே பெரும்பாலும் தங்கி விடுவேன். நாங்கள் சேர்ந்து படிப்போம். நவம்பர் புரட்சி நாள் போன்ற முதன்மையான நாட்களில் சுவரொட்டி, துண்டறிக்கை வெளியிடுவோம். மாவோ எழுதிய ஹூனான் அறிக்கையைப் படித்து ஆர்வமுற்றோம். அதனைத் தமிழாக்கம் செய்யத் தீர்மானித்தோம். நான் செய்த முதல் அரசியல் மொழியாக்கம் அதுவே. எனக்கு மொழிபெயர்ப்பு நன்றாக வருவதாய்ச் சொல்லி இராதா எனக்கு ஊக்கம் கொடுத்தார்.

எம்-எல் கட்சியிடம் எனக்கிருந்த கூடுதல் ஈர்ப்புக்குக் காரணம் உடனே ஆய்தப் போராட்டம் என்ற அரசியல் வழி. கோட்பாட்டு விவாதங்கள் ஒருபுறமிருக்க, வங்காளத்திலும், ஆந்திரத்தில், குறிப்பாகச் சிறிகாகுளத்திலும் ஆய்தப் போராட்டம் நடந்து கொண்டிருப்பதாக நம்பினோம். ஆங்கிலத்தில் **லிபரேஷன்** தவிர கோவையிலிருந்து **புதிய தலைமுறை** வந்து கொண்டிருந்தது. நாங்களும் புதிய உலகம் என்ற திங்களேடு தொடங்குவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்தோம். அசுரன் வழியாகக் கட்சித் தொடர்பு கிடைத்து **தோழர் ஏ எம் கோதண்டராமன்** எங்களைப் பார்க்க வந்தார். என்னை உடனே இயக்கப் பணிக்குச் செல்லப் பணித்தார். அவர் சொன்னபடி நான் பெரும்பண்ணையூர் சேரிக்குப் போய் விட்டேன்.

அப்போதே ஒரு மார்க்சிஸ்டுக் கட்சித் தலைவரோடு எனக்கு அறிமுகம் இருந்தது. அவர் அப்போது தமிழ் மாநிலக் குழுவின் செயலாளராக இருந்த **தோழர் ஏ. பாலசுப்ரமணியம்,** சுருக்கமாக ஏபி. தஞ்சையிலிருந்து சென்னை சென்று கொண்டிருந்த விரைவுப் பேருந்து கடலூரில் சிறிது நேரம் நின்ற போது தஞ்சை அ. இராமமூர்த்தி அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். சென்னை சென்றடையும் வரை அவரோடு பேசிக் கொண்டே பயணம் செய்தேன். மாணவர் காங்கிரசில் இருந்து கொண்டு இந்தியப் புரட்சியின் பாதை பற்றிய ஐயப்பாடுகளை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அவரும் பொறுமையாக விடையிறுத்தார். உருசியாவில் கட்சி படை அமைத்தது. சீனத்தில் படைதான் கட்சி அமைத்தது. இரண்டுமே நமக்கு முழுக்கப் பொருந்தாது என்று விளக்கினார். [அவரோடு அந்த முதல் சந்திப்பில் நடந்த கருத்தியல் உரையாடலைப் பிற்காலத்தில் **தீக்கதிர் ஏபி நினைவுமலரில் 'சந்திப்புகள் நான்குதான்' கட்டுரையில் பதிவு செய்துள்ளேன்.]**

அதன் பிறகு சிறை செல்லும் காலம் வரை எனக்கு ஏபியுடன் தொடர்பில்லை. மா-லெ இயக்கத்தில் பொதுவாக சிபிஎம் தலைவர்களையெல்லாம் மோசமாகக் காட்டுவார்கள். நானும் அதை அப்படியே நம்பிக் கொண்டிருந்தேன். 1969-70இல் கிட்டத்தட்ட ஓராண்டுக் காலம் பெரும்பண்ணையூர் சேரியில் நான் வாழ்ந்த போது **ஐ. மாயாண்டிபாரதி** பற்றி மட்டும் நல்லவிதமாகப் பேசுவார்கள். கூட்டத்துக்கு வந்தால் அப்படியே போய் விடாமல் ஒரு நாளாவது தங்கி அனைவரோடும் உண்டு உறவாடி குழந்தைகளுக்குக் கதை சொல்லி அவர்களோடு விளையாடிக் களித்து விட்டுச் செல்வாராம். தோழர் பாலு சொல்வார்.

அப்போதே **தோழர் ஏஜிகே (கஸ்தூரி ரெங்கன்)** பற்றி நல்ல செய்திகள் வந்து கொண்டிருந்தன. அவர் வழக்கமான சிபிஎம் அல்ல என்றும், அவரோடு தொடர்பு கொண்டு நம் இயக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் பேசிக் கொண்டார்கள். அந்தணப்பேட்டை முக்கொலை வழக்கில் அவரைத் தேடிக் கொண்டிருந்தனர். அவரைப் பிடிக்கச் சென்ற காவல்துறையினர் கூத்தப்பார் போன்ற சில இடங்களில் சேரி மக்களை அடித்துத் துன்புறுத்தியதும்,

மக்கள் திருப்பியடித்ததுமான செய்திகள் வந்த போது நாங்கள் மகிழ்ந்து போனோம். அவர்களைக் கைது செய்து திருவாரூர் நீதிமன்றத்துக்கு கொண்டுவந்த போது நாங்கள் இரவோடிரவாகக் கையால் எழுதிய வாழ்த்துச் சுவரொட்டிகள் ஒட்டினோம்.

நாங்களும் தஞ்சாவூர் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி மத்திய சிறையின் மரணதண்டனைக் கூடத்தில் அடைக்கப்பட்ட போதுதான் ஏஜிகேயுடன் நேர் அறிமுகம் பெற்றோம். அவரைப் பற்றி ஏற்கெனவே நிறையக் கேள்விப்பட்டிருந்ததால் எளிதில் நெருங்கி விட்டோம். அழித்தொழிப்பு என்ற ஒரே போராட்ட வடிவம் (annihilation only form) மீது எனக்கிருந்த நம்பிக்கையை அவர் எப்படிப் பொறுமையாக உடைத்தார் என்பதை சுவருக்குள் சித்திரங்களில் விளக்கியுள்ளேன். இலெனின் தேர்வு நூல்களைப் படிக்கும் ஆர்வத்தை ஏஜிகேயிடமிருந்துதான் பெற்றுக் கொண்டேன். அவர் தூக்குக் கைதிகள் உட்பட ஏனைய கைதிகளுக்கு நீதிமன்ற மேல்முறையீடுகள் உட்பட விண்ணப்பங்கள் எழுதிக் கொடுப்பார். அந்தக் கலையை அவரிடமிருந்து கற்றுக் கொண்டு நானும் செய்யலானேன்.

அந்த நேரம் தோழர் ஏஜிகே சிபிஎம் கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருந்ததாக அறிந்தோம். ஆனால் **தோழர் அனந்த நம்பியார்** அவ்வப்போது நேர்காணலுக்கு வந்து போவார் – தூக்குத் தண்டனை குறைப்பு முயற்சி தொடர்பான செய்திகளைச் சொல்லிச் செல்வார். தோழர் ஏபி அடிக்கடி அஞ்சலட்டை எழுதுவார். நாங்கள் சேர்ந்திருப்பதை அறிந்து நலம் வினவி எழுதுவார்.

1970 அக்டோபரில் **தோழர் எல். அப்பு**வைத் தமிழ்நாடு காவல்துறை க்யூ பிரிவு பிடித்துப் போய் காணாமலடித்து விட்ட செய்தி அறிந்து தோழர் ஏஜிகே பெரிதும் வருந்தினார். இந்தச் செய்தியை அம்பலமாக்க நாங்கள் கூட்டாகத் திட்டமிட்டோம். அடுத்து எங்கள் வழக்கு மீளுசாவலுக்காக (Retrial) நாகை நீதிமன்றத்தில் எங்களைக் கூண்டில் நிறுத்த இருந்தனர். அந்தக் கூண்டில் நின்றபடி அப்புவைப் பற்றிப் பாடுவது, கண்டனக் கூட்டம் நடத்துவது என்றெல்லாம் திட்டமிட்டோம். சட்டப்படி அப்புவை நீதிமன்றத்தில் நிறுத்தியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை ஒரு தொடர் நாடகமாக நடத்தத்

திட்டமிட்டுக் காட்சிகளை ஏஜிகே எழுதித்தர ஒப்புக்கொண்டார். (கட்டுரை, கதை, நாடகம், பாட்டு என்று எந்த வடிவத்திலும் எழுதும் அவரது ஆற்றல் கண்டு வியந்தோம்.)

எங்களில் தோழர் இலெனின் நீதிபதியாகவும், குருமூர்த்தி வழக்குரைஞராகவும் நடிக்க வேண்டும். அடியேன் அப்பு! பிரதமர் பிரியதரிசினி, முதல்வர் முத்துவீரப்பண்டாரம், ஐஜி சுருள்... இந்த சாட்சிகள் சொல்லும் சாட்சியங்களின் மீது நீதிமன்றத்தில் நடக்கும் விவாதம்தான் நாடகம். இந்த வரிசையில் சிபிஎம் தலைவர் இராமமூர்த்தியையும் சாமமூர்த்தி என்ற பெயரில் சாட்சியாகக் குறித்து வைத்திருந்தேன். ஏஜிகே அதை மட்டும் எழுத மாட்டேன் என்று சொல்லி விட்டார். எனக்குத் தெரிந்த வரை நானே எழுதிக் கொண்டேன்.

பிற்காலத்தில் எம்-எல் தோழர்களிடையே கருத்தியல் வேறுபாடுகள் மூண்டு சிறைக்குள் உட்கட்சிப் போராட்டம் வெடித்த போது ஐயந்தெளிய ஏஜிகே பேருதவியாகத் திகழ்ந்தார். நான் எழுதிய கட்டுரைகளை அனுப்பினால் திருத்தங்கள் சொல்வார். நாங்கள் எம்-எல் கட்சித் திட்டம் மீது அறவே நம்பிக்கை இழப்பதற்கும், சிபிஎம் குறித்துப் பரிவான பார்வை கொள்வதற்கும் முதன்மைச் செயலூக்கியாகத் தோழர் ஏஜிகே அவர்களைத்தான் சொல்வேன். இது வெறும் கருத்துசார்ந்த உரையாடலாக இல்லாமல் சிறைப்படுத்தப்பட்டோர் இயக்கத்தில் செயல் சார்ந்த ஓர்மையாகவும் அமைந்ததையே எங்கள் உறவின் உயிர்த்துடிப்பாகக் கருதுகிறேன். சிறைக்குள் இயக்கம் கட்டுவது, இரகசியக் கையேடு நடத்துவது எல்லாம் அவரிடம் கற்றவையே!

சிறைப் போராட்டங்களின் விளைவாகத் தோழர் ஏஜிகே பாளையங்கோட்டைக்கு மாற்றப்பட்டு விட்டார். நாங்கள் – ஐந்து தோழர்கள் மட்டும் - இப்போது **சோசலிச ஐக்கியக் கல்விக் குழு** என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு எங்கள் அரசியல் கல்வியைத் தொடர்ந்தோம். மற்றக் கைதிகளிடையே அரசியல்-கருத்தியல் கல்வி பரவச் செய்வதற்காகப் பாட்டாளித் தத்துவம் என்ற இரகசியக் கையேட்டை நடத்தத் தொடங்கினோம். சிறைப்படுத்தப்பட்டோர் நலவுரிமைச் சங்கப் பணிகளைத் தொடர்வதற்காகத் தோழர் ஏஜிகே நடத்திய உரிமைக் குரலின் இடத்தில் தோழர் இலெனினை ஆசிரியராகக் கொண்டு சுதந்திர தாகம் என்ற இரகசியக் கையேட்டையும் நடத்தினோம்.

எம்-எல் கட்சியின் போராட்ட உத்திகள் மட்டுமல்ல, அதன் அடிப்படைத் திட்டமே பிழையானது ("அடித்தளம் இல்லாமல் கட்டிய அழகு மாளிகை") என்ற முடிவுக்கு வந்த பின் சிபிஎம் கட்சித் திட்டமே அடிப்படையில் சரியானது என்ற முடிவுக்கு வந்தோம். இந்த முடிவுக்கு வர நெருக்கடிநிலைக் காலம் என்ற பகைப்புலம் முக்கியப் பங்கு வகித்தது. நாடு ஒரு கட்சிச் சர்வாதிகாரம் நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக சிபிஎம் 1972 பேராயம் கூறியது எங்களைப் பெரிதும் ஈர்த்தது.

சிபிஎம்மில் சேரும் முடிவை நான் தோழர் ஏபிக்கு எழுதினேன். அவர் மகிழ்ந்து வரவேற்று எழுதியதோடு நேரிலும் பார்க்க வந்து விட்டார். நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பிறகும் தமிழ்நாட்டில் 1976 ஜனவரி கடைசியில் திமுக ஆட்சி கலைக்கப்படும் வரை அவ்வளவாகக் கெடுபிடி இல்லை. அந்த நேரம் ஏபியும் அனந்த நம்பியாரும் நேர்காண வந்திருந்தனர். நானும் தோழர் இலெனினும் சிறையில் தனியாக வைக்கப்பட்டிருந்த பழைய கண்டத்துக்கே அவர்களை அழைத்து வந்தனர். அப்போது மூலதனம் தமிழாக்கப் பணியைத் தொடங்கியிருந்தேன். நான் சொல்லச் சொல்ல இலெனின் எழுதுவது வழக்கம். எழுதுவதற்கான வசதிகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளும்படி ஏபி எங்களுக்கு அறிவுரை வழங்கினார்.

1977 செப்டெம்பரில் ஒரு சிறைப் போராட்டத்துக்குப் பின் என்னை மதுரைச் சிறைக்கு மாற்றினர். உடனே தோழர் ஏபி நேர்காண வந்து தோழர் சுந்தரையாவின் தெலங்கானா பற்றிய நூலைக் கொடுத்துச் சென்றார். என்னையும் தோழர் இலெனினையும் தோழர் ஏஜிகே-யையும் தனித்தனியாக வெவ்வேறு சிறைகளுக்கு மாற்றிக் கொண்டிருந்தனர். எங்களோடு தோழர் ஏபியும் அவர் சார்பில் தோழர் அப்துல் வகாப் அவர்களும் தொடர்பு வைத்திருந்தனர். தேர்தல் போராட்டம் தொடர்பாகக் கோவைச் சிறைக்குள்ளிருந்து சமரன் ஆசிரியர் தோழர் ஏ எம் கோதண்டராமன் அவர்களுக்கும், மாஸ்லைன் ஆசிரியருக்கும் நான் எழுதிய கடிதங்களைக் கட்சியின் பார்வைக்கு அனுப்பி வைத்தேன். அவற்றைத் தொகுத்து நக்சலைட்டுகளுக்கு ஒரு சிறைப் பறவையின் வேண்டுகோள் என்ற தலைப்பில் ஒரு சிறு வெளியீடாகக் கொண்டுவருவது என்று முடிவு செய்து, தோழர் ஏபி அதைச் சொல்வதற்காகச் சென்னைச் சிறையில் என்னை நேர்கண்டார். அப்போது தோழர் தமிழரசன் உள்ளிட்ட

தோழர்களும் என்னோடு இருந்தனர். அவர்களைப் பற்றி அக்கறையோடு விசாரித்தறிந்தவர், அசாம் போராட்டம் பற்றி அனைவரின் பார்வையும் எப்படி என்றும் தெரிந்து கொள்ள விரும்பினார். தோழர் ஏபி 1981 செப்டெம்பரில் மறைந்தார்.

ஏபி மறைவுக்குப் பிறகு எங்களுடன் சிபிஎம் சார்பில் தொடர்பில் இருந்தவர்கள் **தோழர் உமாநாத், பாப்பா உமாநாத், டிகே ரங்கராஜன், கே வரதராஜன்** இன்னும் பலர். சிறைப் போராட்டங்களில் இயக்கம் எங்களுக்குத் துணை நின்றது. தோழர் ஏபிக்குப் பிறகு அரசியல்-கருத்தியல் உரையாடல் நிகழ்த்தக் கூடியவராக வாய்த்தவர் **தோழர் ஏ நல்லசிவன்** (ஏஎன்). ஈழச் சிக்கல், மொழிச் சிக்கல், தேசிய இனச் சிக்கல் ஒவ்வொன்றிலும் சிபிஎம் நிலைப்பாடுகளோடு நான் கடுமையாக முரண்பட்டு நின்ற போது, என்னோடு பொறுமையாக விவாதித்து, விருப்பு வெறுப்பின்றிக் கட்சிக்குள் ஜனநாயகம் காத்தவர் தோழர் ஏஎன். மாற்றுக் கருத்துடையவர்களைப் போட்டிக் குழுக்களாகக் கருதி ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி அவர்களை ஒதுக்கித் தனிமைப்படுத்தும் போக்கை எந்நிலையிலும் நான் அவரிடம் கண்டதில்லை.

ஏபி, ஏஎன் போல் தமிழ்நாடு சிபிஎம் கட்சியில் இப்போது யாராவது இருக்கிறார்களா? யானறியேன். ஒருசில தோழர்கள் (தலைவர்கள்) இப்போதும் என்னுடன் நட்பாக இருக்கின்றார்கள். ஆனால் யாருடனும் அரசியல்-கருத்தியல் உரையாடல் என்பதில்லை. ஒருகையால் ஓசை எழுப்ப முடியாதல்லவா?

ஈழம், இ டபிள்யூ எஸ் என்று ஒவ்வோர் உயிர்ச் சிக்கலிலும் சிபிஎம் எடுத்த நிலைப்பாடுகள் ஏற்கத்தக்கதல்ல என்பதே என் பார்வை.

● தமிழ் ஈழச்சிக்கல் குறித்துக் கருத்து வேறுபாடு கொண்டு, மார்க்சியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து நீங்கள் வெளிவந்த பிறகு, உங்களது "திலீபன் மன்றம் " குறித்த செயல்பாடுகள் யாவை? அம்முயற்சி எப்படி முடிவுற்றது.?

☆ தமிழ் ஈழச் சிக்கல் தொடர்பான வேறுபாடு நான் சிறையில் இருந்த போதே தொடங்கி விட்டது. 1983 ஜூலைப் படுகொலையைக் கண்டித்து மதுரைச் சிறையில் தோழர்கள் சிங்கள ஜெயவர்த்தனா கொடும்பாவி எரித்தார்கள். திருச்சிராப்பள்ளியில்

நாங்கள் அமைதி ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தினோம். இறுதியில் தமிழீழப் போராட்டம் குறித்து நான் பேசினேன். தோழர் இலெனினும் நானும் தலைமையேற்றுத் தமிழ்நாடு தழுவிய சிறைப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுக் கொண்டிருந்தோம். அதில் முதல் கோரிக்கை ஈழத்துக்கு உதவும் தமிழ்நாட்டின் உரிமை தொடர்பானது. இதைக் கட்சி அவ்வளவாக விரும்பவில்லை.

1985 கடைசியில் விடுதலையானோம். ஆவடி அம்பத்தூர் பகுதிக் குழுவில் உறுப்பினனாகப் பணியாற்றினேன். 1987இல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்துக் கட்சிக்குள் மிகத் தீவிரமாகப் போராடினேன். சென்னையில் **சந்துரு, அரி பரந்தாமன், விஜயகுமார்** உள்ளிட்ட வழக்கறிஞர் கிளையும் போராடியது. கட்சியின் மாவட்ட மாநாட்டில் நானும் விஜயகுமாரும் கலந்து கொண்டு இந்திய அமைதிப் படைக்கு எதிராகப் பேசினோம். உமாநாத்தும் மீனாட்சிசுந்தரமும் எனக்கு விரிவாக மறுப்புச் சொன்னார்கள். நான் திமுக போல் பேசுவதாக அவர்கள் சொன்ன போது ”நீங்கள் சோ, சுப்பிரமணியசாமி போல் பேசுகின்றீர்கள்” என்று விடையிறுத்தேன்.

1988-89இல் கட்சியில் பகுதிக் குழு உறுப்பினனாக இருக்க மறுத்து ஒரு கிளையில் எளிய உறுப்பினனாக மட்டும் இருந்தேன். ஆவடி அம்பத்தூர் பகுதியில் மட்டும் கூட்டங்கள் பேசுவேன். அம்பத்தூரில் பிஆர், விபிசி போன்ற தலைவர்கள் பேச வந்தால் என்னை முதலில் பேசச் சொல்லி விட்டுப் பிறகு பேசுவார்கள்.

தோழர் ரா. கிருஷ்ணையாவுடன் என்சிபிஎச் தலைமையகத்தில் அமர்ந்து மூலதனம் தமிழாக்கத்தைச் சீர் செய்வதில் ஈடுபட்டிருந்தேன். அத்துடன் வீரத் தெலங்கானா தமிழாக்கத்தை ராசகிளி அச்சகத்தில் அச்சேற்றி சாளரம் சார்பில் வெளியிடுவதிலும் முனைப்புடன் ஈடுபட்டிருந்தேன். தோழர் வைகறைவாணன் எடுத்த அந்த முயற்சியில் ஈரோஸ் சார்பில் தோழர் பாலகுமாரன் எங்களுக்கு உதவியாக இருந்தார். நானும் வைகறையும் விஜயவாடா சென்று சிபிஎம் அலுவலகத்திலிருந்து படங்கள் சேகரித்து வந்தோம்.

வீரத் தெலங்கானா வெளிவந்த பின் மதுரையில் அதற்கான அறிமுகக் கூட்டத்தில் பேசச் சென்றேன். அந்தக் கூட்டத்திற்கு

இயக்கத் தோழர்கள் போகக் கூடாது என்று கடைசி நேரத்தில் தலைமையிலிருந்து சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

சிபிஎம் கட்சியோடு அவசர முரண்பாடு ஈழச் சிக்கல் தொடர்பாகவே என்பதாலும், அப்போது இந்திய அமளிப்படை ஈழ மக்கள் மீது போர் தொடுத்து நின்றதாலும், ஈழப் போராட்டத்தின் ஈகச் சின்னமாகக் கொண்டு திலீபன் பெயரில் மன்றம் அமைக்கத் தீர்மானித்தேன். 1990 செப்டெம்பர் 15ஆம் நாள் தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் அறிமுகக் கூட்டம் நடத்தினோம். ஈழத் தமிழர் துயர் துடைக்க இயன்றதைச் செய்வோம் வாருங்கள் என்பது செயல்முழக்கம். தமிழீழ விடுதலை வரலாற்றுத் தேவை! ராஜீவ் ஜெயவர்த்தனா உடன்படிக்கை ஈழத் தமிழர் நலனுக்குப் பகை! தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளை ஆதரிப்போம்! என்பவை மூன்று நிலைப்பாடுகள். தமிழ்நாட்டில் முதன்மையான ஈழ ஆதரவாளர்கள் திரண்டிருந்த அந்தக் கூட்டத்தில் இரண்டு மணிநேரம் பேசினேன்.

உடனே நான் சிபிஎம் கட்சியிலிருந்து நீக்கப்பட்டேன். தீக்கதிரில் கட்டம் கட்டிச் செய்தி வெளியிட்டார்கள். செப்டெம்பர் 26ஆம் நாள் பொட்டி சிறிராமுலு அரங்கில் திலீபன் மன்றம் தொடங்கப்பட்டது. திலீபன் மன்றம் தனித்தும் ஏனைய ஈழ ஆதரவு அமைப்புகளோடு சேர்ந்தும் பல நிகழ்ச்சிகள் முன்னெடுத்தது. குறிப்பாகப் **பேராசிரியர் சரசுவதி தலைமையிலான அன்னையர் முன்னணி**யுடன் சேர்ந்து யாழ் கோட்டை வெற்றி விழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்திப் படங்களும் வெளியிட்டோம்.

திலீபன் மன்றத்தின் சார்பில் நான் முன்மொழிந்த அடிப்படையில்தான் **திரு. பழ. நெடுமாறனை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு** அமைக்கப்பட்டது. 1991க்குப் பிறகு கிட்டத்தட்ட 20 ஆண்டுக் காலம் கடுமையான நெருக்கடிக்கு நடுவில் வேலை செய்ய நேரிட்ட போது இந்த ஒருங்கிணைப்புக் குழுதான் தொடர்ந்து உறுதியாக வழிகாட்டி வந்தது.

இராஜிவ் கொலைக்குப் பிறகு வந்த திலீபன் நினைவுநாள் நிகழ்ச்சி நடத்தக் காவல்துறை அனுமதி மறுத்த போது திலீபன்

மன்றம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வெற்றி கண்டோம். இந்த வழக்கை வழக்கறிஞர் தோழர் சந்துரு நடத்தி வெற்றி தேடித் தந்தார். **நீதியர் இராமலிங்கம்** வழங்கிய கருத்துரிமைக்கு ஆதரவான தீர்ப்பை ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தகமாக வெளியிட்டோம். இந்தத் தீர்ப்புக்குப் பிறகும் கூட்டத்துக்கு அனுமதி மறுக்க மாநகரக் காவல்துறை செய்த முயற்சியை முறியடித்தோம்.

மீண்டும் பகத்சிங் நாள் நடத்தக் காவல்துறை அனுமதி மறுத்த போது **மூத்த வழக்கறிஞர் என்ஜிஆர் பிரசாத்** வழக்காடி வெற்றி தேடித் தந்தார். ஆனால் காவல்துறை என்னைத் தவிர வேறு யாருக்கும் பேச அனுமதியில்லை என்று சொல்லி விட்டதால் நான் மட்டுமே அம்பத்தூர் அம்பேத்கர் சிலை அருகே ஒரு டயர் வண்டியை மேடையாக்கி நான்கு மணிநேரம் உரை நிகழ்த்தினேன்.

ஈழத்தமிழர் துயர் தணிக்க என்று திலீபன் மன்றம் வரம்பிட்டு நின்றாலும், ஏனைய தமிழ்த் தேசிய அமைப்புகளோடு பொதுச் சிக்கல்களில் இணைந்து நிற்பது தவிர்க்கவியலாததாயிற்று. அந்த வகையில் அடக்குமுறைச் சட்ட எதிர்ப்புக் கூட்டியக்கத்தில் பாமக, இந்திய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, விடுதலைக் குயில்கள் போன்ற அமைப்புகளோடு சேர்ந்து நின்றோம். சென்னையில் பாமக முன்முயற்சியில் கூடிய தமிழக வாழ்வுரிமை மாநாட்டில் திலீபன் மன்றம் சார்பில் நான் கலந்து கொண்டு பேசினேன்.

சென்னைக்கு வெளியே கோவை, மதுரை, நெல்லை, திருத்துறைப்பூண்டி போன்ற வேறு சில ஊர்களிலும் மன்றக் கிளைகள் அமைக்கப்பட்டன. இருப்பினும் நாம் வாழும் சமுதாயத்துக்கென்று திட்டம் இல்லாமல் ஈழத்துக்காக மட்டும் இயக்கம் நடத்துவது எளிதன்று எனக் கற்றுக் கொண்டோம். ஒரு கட்டத்தில் பழ. நெடுமாறன் தலைமையிலான தமிழர் தேசிய இயக்கம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, திலீபன் மன்றம் ஆகிய அமைப்புகள் சேர்ந்து தமிழ்த் தேசத் தன்னுரிமை முன்னணி அமைத்தோம். **தோழர் சுப. வீரபாண்டியன்** தலைமையிலான விடுதலைக் குயில்கள் இந்த முன்னணியில் சேராமலே ஆதரவு தெரிவித்தது. சேரவில்லை என்பதற்குச் சொன்ன காரணம் மற்ற அமைப்புகளில் பார்ப்பனர் உறுப்பினர்

ஆகத் தடையில்லை என்பதே. தமிழ்த் தேசத் தன்னுரிமை முன்னணி சார்பில் தஞ்சாவூரில் காவிரி உரிமைக்கான மறியல் போராட்டம் செய்தோம். அதனை **திக தலைவர் மானமிகு கி. வீரமணி** தொடங்கி வைத்தார். தமிழ்நாடெங்கும் பல ஊர்களில் தன்னுரிமை முன்னணி சார்பில் நடைபெற்ற கூட்டங்களில் நெடுமாறன், மணியரசன் ஆகியோருடன் நானும் கலந்து கொண்டேன்.

1993-94இல் வைகோ திமுகவிலிருந்து வெளியேற்றப்பட்டு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கினார். 1984ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் திருச்சிராப்பள்ளி மத்தியச் சிறையில் சந்தித்த நாள் முதல் அவருக்கும் எனக்கும் நெருக்கமான நட்பு இருந்தது. ஈழ ஆதரவு நிலைப்பாட்டுக்கும் இதில் முக்கியப் பங்கிருந்தது. திமுக தலைமை அவருக்குக் கடும் நெருக்கடி கொடுத்துக் கொண்டிருந்தது. வைகோவின் தம்பி வை. இரவிச்சந்திரன் பத்மநாபா கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவருக்குச் சட்ட உதவி கிடைக்கச் செய்வதில் வைகோவுக்கு உதவியாக இருந்தேன். அதே போது திமுகவின் அதே அரசியலை அடியொற்றி நடப்பதன் மூலம் மறுமலர்ச்சி திமுக மற்றுமொரு திமுக ஆவதாகக் குறை கூறினேன்.

● சுப.வீ. அவர்களுடன் இணைந்து தமிழ் தமிழர் இயக்கத்தை உருவாக்கிச் செயல்பட்டீர்கள். அந்த முயற்சியின் இறுதி விளைவு என்ன?

☆ சுபவீ தலைமையிலான விடுதலைக் குயில்களுடன் திலீபன் மன்றத்துக்கு நல்ல நெருக்கம் இருந்தது. அடிப்படையான கொள்கை வேறுபாடு எதுவுமில்லை. ஒரே அமைப்பாக இணைந்து செயல்படலாம் என்ற எண்ணம் முகிழ்த்தது. வைகோ திமுகவிலிருந்து வெளியேறிய பின் சுபவீயுடன் இருந்த முக்கியத் **தோழர்கள் அறிவுமதி, விஜயகுமார், விடுதலை, திருமாவேலன்** உள்ளிட்ட தோழர்களும், நெய்வேலித் தோழர்களும் வைகோவுடன் சேர்ந்து விட விரும்பினார்கள். ஆனால் சுபவீக்கு அதில் உடன்பாடில்லை. “எனக்கு நல்ல திமுக இருந்தால் போதும், ஆனால் வைகோவின் கட்சியை நல்ல திமுகவாக என்னால் ஏற்க முடியவில்லை” என்றார். பார்ப்பனர்களை உறுப்பினராகச்

சேர்த்துக் கொள்ளலாமா? என்பது ஒன்றுதான் அப்போதைக்கு அவருக்குப் பெரிய சிக்கலாகப் பட்டது. சுபவீயுடன் இருந்த தோழர்கள் பெரும்பாலும் நாங்கள் இணைந்து செயல்படுவதை விரும்பினார்கள். கோவை விஜயகுமார் உள்ளிட்ட ஒருசில தோழர்களுக்கு மட்டும் அவ்வளவாக விருப்பமில்லை. ஆனால் தேவேந்திரன் இணைப்பில் உறுதியாக இருந்தார். ஈரோட்டில் வேலிறையனும் தெளிவாக நின்றார். போத்தனூர் தோழர்களும் அவ்வாறே. இப்படித்தான் 1993 ஜனவரி முதல் நாள் தமிழ்தமிழர் இயக்கம் பிறந்தது. ஆனால் வைகோ பக்கம் செல்ல விரும்பிய முக்கியத் தோழர்கள் போய் விட்டார்கள். இனி குழு அப்படியே போர்வாள் குழு ஆயிற்று.

தொடர்ந்து சில ஆண்டுகள் தமிழ்தமிழர் இயக்கம் முனைப்புடன் இயங்கியது. இடைக்காலத்தில் ''தன்னுரிமையா தேசிய விடுதலையா?'' என்ற விவாதத்தை நான் தொடங்கி வைத்தேன். தமிழ்த் தேசம் இதழில் தொடர்ந்து எழுதினேன். சுபவீ ஆதரித்தோ எதிர்த்தோ எழுதவில்லை. எனக்குத் தொடர்ந்து தமிழர் கண்ணோட்டத்தில் மறுப்புக் கட்டுரைகள் எழுதியவர் **ததேபொக தோழர் கி. வெங்கட்ராமன்**. இந்த விவாதத்தைத் தோழர்கள் ஆர்வத்துடன் படித்துக் கற்றார்கள்.

இந்த விவாதத்தில் முடிவெடுப்பதற்காக அம்பத்தூர் பொதுப்பேரவையில் வாக்கெடுப்பு நடத்தினோம். ஒரு வாக்கு வேறுபாட்டில் தன்னுரிமை வென்று தேசிய விடுதலை தோற்றது. நான் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தேன். சுபவீ நந்தன் ஆசிரியர் பொறுப்புக்காக இயக்கத் தலைமையிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். தமிழ்த் தேசத்தில் தொடர்ந்து விவாதக் கட்டுரைகள் எழுதுவேன் என்ற நிபந்தனையோடு நான் பொதுச் செயலாளர் பொறுப்பில் நீடிக்க ஒப்புக் கொண்டேன். மதுரைத் தோழர் வேலுச்சாமி தலைவராகவும் தோழர் தேவேந்திரன் பொருளாளராகவும் பொறுப்பு எற்றனர்.

இதற்கிடையில் ''தன்னுரிமையா? தேசிய விடுதலையா?'' விவாதத்தின் தொடர்ச்சியாக தமிழ்த் தேசிய அமைப்புகளை ஒன்றிணைப்பது என்ற முன்முயற்சியை ததேபொக மேற்கொண்டது. **தமிழர் தேசிய இயக்கம் சார்பில் பழ.நெடுமாறன், ததேபொக சார்பில் மணியரசன், வெங்கட்ராமன், இராசேந்திர சோழன்,**

தமிழ்தமிழர் இயக்கம் சார்பில் நான், சுபவீ, வேலிறையன், கருப்பையா அனைவரும் கோயம்பேட்டில் திரு சௌந்தர்ராசன் இடத்தில் இரண்டு நாள் பேச்சுவார்த்தை நடத்தினோம். நெடுமாறன் தலைமையில் அனைவரும் ஒரே அமைப்பாக இணைவது சுபவீயின் முன்மொழிவு. மற்ற விவாதங்களில் அவருக்கு அக்கறை இல்லை. நெடுமாறன் ''யார் வேண்டுமானாலும் தலைமை ஏற்கட்டும், ஆனால் வெளியிலிருக்கும் ஏராளமான அமைப்புகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும்'' என்று சொல்லி விட்டார். என்ன கொள்கை? என்ன குறிக்கோள்? என்ன தேர்தல் நிலைப்பாடு? என்ன வேலைத்திட்டம்? இந்த விவாதம் எங்களுக்கும் மணியரசன் மற்றத் தோழர்களுக்கும் நடுவில்தான்! தன்னுரிமைக் குறிக்கோளைக் கைவிட்டு, தமிழ்த் தேச இறைமை என்ற குறிக்கோளை வரித்துக் கொள்ள அவர்கள் உடன்பட்டார்கள். எங்களுக்குள் நடந்த இந்த விவாதம்தான் பிற்காலத்தில் தமிழ்த் தேசிய முன்னணி அமைப்பதற்கு உதவியது. முன்னணியின் கொள்கை அறிக்கையை நானும் வெங்கட்ராமனும்தான் வரைந்தோம்.

அப்போதைக்குக் கோயம்பேடு கூடுகை எந்த முடிவும் எடுக்காமல் கலைந்து விட்டது. அடுத்த சிறிது காலத்திற்குள் தமிழ்தமிழர் இயக்கத்தின் பொதுக் குழு திருச்சிராப்பள்ளியில் கூடி தன்னுரிமை (எதிர்) - தேசிய விடுதலைத் தீர்மானம் குறித்து மீண்டும் வாக்கெடுப்பு நடத்தினோம். ஒரு வாக்கு வேறுபாட்டில் தேசிய விடுதலை வென்றது. அடுத்த சில நாளில் சுபவீ தமிழ் தமிழர் இயக்கத்திலிருந்து வெளியேறினார். விரைவில் நெடுமாறன் தலைமையிலான அமைப்பில் இணைந்தார். சிறிது காலம் கழித்து - அனைவருக்கும் தெரிந்ததே – **திராவிட இயக்கத் தமிழர் பேரவை** கண்டார், இன்றளவும் அதன் பொதுச் செயலாளராக விளங்கி வருகின்றார். திராவிடம், தமிழ்த் தேசியம் குறித்து எங்களுக்கிடையே நடைபெற்ற விவாதங்கள் அக்கறையுள்ள அனைவர் கவனத்தையும் ஈர்த்திருக்கும்.

எங்கள் அடுத்த பேராயம் பொள்ளாச்சியில் கூடிய போது தமிழ்தமிழர் இயக்கம் என்ற பெயரைத் **தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்** என்று மாற்றிக் கொண்டோம்.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழர் தன்மானப் பேரவை, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தமிழ்த்

தேசிய விடுதலை இயக்கம் ஆகிய அமைப்புகள் சேர்ந்து தமிழ்த் தேசிய முன்னணி அமைத்தோம். அதன் அமைப்பு மாநாட்டை மதுரையில் முன்னின்று நடத்தும் பொறுப்பை நான் ஏற்றுச் செய்தேன். முன்னணி அமைப்பாளராகத் தோழர் மணியரசனும், அமைப்புக் குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் வெங்கட்ராமன், இராசோ, ஏஜிகே, காமராஜ், தியாகு, கருப்பையா, பொழிலன், பாவேந்தன் ஆகியோரும் செயல்பட்டோம்.

தமிழ்த் தேசிய முன்னணி சார்பில் காவிரிச் சிக்கல் மீது கல்லணை முதல் நெய்வேலி வரை நடைப் பயணமாகச் சென்று அனல் மின் நிலையத்தை முற்றுகையிட்டுப் போராடினோம். தமிழ்நாட்டில் மார்வாரி-குசராத்தி சேட்டு சுரண்டல்-ஆதிக்கத்தை எதிர்த்து சற்றொப்ப 50 கூட்டங்கள் நடத்தினோம். முன்னணி தொடர்ந்து செயல்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அமைப்புகளுக்கிடையிலும் ஒவ்வோர் அமைப்புக்குள்ளும் தலையெடுத்த குறுங்குழுவியப் போக்குகள் ஒருபக்கமும், தாராளியப் போக்குகள் மறுபக்கமும் சேர்ந்து கொள்ள முன்னணி வாடி உதிர்ந்து விட்டது – நல்ல புத்திக் கொள்முதல்!

● உங்களது நீண்ட அரசியல் பயணத்திற்குப் பிறகு இறுதியாகத் தமிழ்த் தேசிய நிலைபாட்டிற்கு வந்தடைந்துள்ளீர்கள். இன்றைக்கு அதன் பொருத்தப்பாடு என்ன? தமிழ்த் தேசியத்தின் மெய்யியல் அடிப்படை என்ன?

☆ மா-லெ கட்சிக்குள் திருச்சி மத்திய சிறையில் நடந்த உள்கட்சிப் போராட்டத்தின் போதே நான் என்னையறியாமல் தமிழ்த் தேசிய நிலைபாட்டுக்கு வந்து கொண்டிருந்தேன்.1973 ஜூலை முதல் நாள் சீனப் பொதுமைக் கட்சியின் ஆண்டு விழாவை பழைய கண்டம் தூக்குக் கொட்டடியில் கொண்டாடினோம். அன்றுதான் நான் இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்தேன். புரட்சிப் பாதையில் இந்தியாவுக்கும் சீனாவுக்குமான ஒற்றுமை-வேற்றுமைகளைப் பட்டியலிட்ட போது, **சீனத்தில் பெரும்பாலும் ஒரே மொழி பேசப்படுகிறது, இந்தியாவில் பலமொழிகள் பேசப்படுவது புரட்சிக்குத் தடையாக உள்ளது** என்று வாதிட்டேன்.

சீனத்தில் போலவே இந்தியாவிலும் நீண்ட பயணம் நடக்கும் என்ற சாரு மசூம்தாரின் கருத்தை மறுத்தேன். ஆந்திரத்து சிறிகாகுளத்திலிருந்து வங்காளத்து பீர்பூம் வரை

படை நடத்துவோம் என்று அவர் நம்புவது நிறைவேறாது, ஏனென்றால் ஆந்திர எல்லையில் உள்ள வரங்கலைத் தாண்டிச் செல்ல முடியாது, மொழிவேறுபாட்டைக் கடக்க முடியாது என்றேன்.

மொழி, **புரட்சிக்குத் தடை என்ற கருத்தை ஆழ்ந்து அலசிய போது மொழிதான் தேசமாக மக்களை ஒன்றுபடுத்தி விடுதலைக் கருவியாகிறது என்ற புரிதலுக்கு மெல்ல வந்தடைந்தேன்.** பொதுமை அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சுமே இதற்கு வழிகாட்டுவதைத் தெரிந்து கொண்டேன். **இலெனின் எழுதிய "தேசங்களின் தன்-தீர்வுரிமை (சுய நிர்ணய உரிமை)"** பற்றிய நூலைத் திரும்பத் திரும்ப வாசித்து, அதன் மீது மா-லெ, மார்க்சிஸ்ட் கட்சிகளுக்குள் நான் நடத்திய விவாதங்கள் எனக்குத் தெளிவைத் தந்தன.

பெரியாரும் தமிழ்த் தேசியமும் என்ற தலைப்பிலான என் உரையின் ஒரு பகுதியை மறுத்துத் தோழர் பெ. மணியரசன் எழுதிய நூலுக்கு மறுமொழியாக நான் எழுதிய **"தேசியத்தின் உரையாடல்"** நூலில் இப்பொருள் குறித்து என் விளக்கத்தைத் தெளிவாக முன்வைத்துள்ளேன். பொதுவாகத் தேசியத்துக்கும், குறிப்பாகத் தமிழ்த் தேசியத்துக்கும் என் கோட்பாட்டுப் பங்களிப்பாக இந்நூலைக் கருதலாம்.

தமிழ்த் தேசியத்துக்கு மட்டுமல்ல, அனைத்துவகை முற்போக்குக் கருத்தியலுக்கும் மெய்யியல் அடிப்படை என்பது வரலாற்று இயங்கியல் உள்ளிட்ட பொருண்மிய இயங்கியல்தான். இந்த மெய்யியலை முரணற்றுச் சுடர்விடச் செய்வது மார்க்சிய ஒளிவிளக்கமே. மாந்தக்குல முன்னேற்றத்துக்கு இயக்குவிசைகளான அனைத்துக் கோட்பாடுகளும் மொழிந்தோ மொழியாமலோ இயங்கியல் பழகுகின்றன. திருவள்ளுவர் முதல் பெரியார் வரை, புத்தர் முதல் அம்பேத்கர் வரை வரலாற்று வழியில் இயங்கியலையே அடிப்படையாகக் கொண்டுள்ளனர்.

குமுகியத்துக்கான போராட்டம் குடியாட்சியக் கட்டத்தைக் கடந்து சென்றாக வேண்டும் – சுருக்கமாகவோ, விரிவாகவோ! [குமுகியம் = சோசலிசம், குடியாட்சியம் = சனநாயகம்.] ஒடுக்குண்ட மக்களின் தேசியம் என்பதும் குடியாட்சியத்தின் ஒரு

வடிவம்தான். தேசிய விடுதலை என்பதும் சமூகநீதி என்பதும் குடியாட்சியத்தின் செயலாக்கங்களே. உடைத்துச் சொன்னால் தமிழ்நாடு விடுதலை பெறாமல் தமிழ்க் குடியாட்சியம் நிறைவு பெறாது. தமிழ்க் குடியாட்சியத்தின் நிறைவு என்பதன் மறு பக்கம்தான் சாதி ஒழிப்புக்கு அடிப்படையான சமூகநீதி. **சீனப் புரட்சி ஒரு புதிய ஜனநாயகப் புரட்சி என்றால், தமிழ்நாட்டுப் புரட்சி என்பது தேசிய சமூகநீதிப் புரட்சியாகும்.** எனவேதான் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் மூலவுத்தி முழக்கம்: தமிழர் விடுதலைப் போர் முழக்கம்! சமூகநீதித் தமிழ்த் தேசம்!

● தமிழீழ விடுதலைப் புலிகள், சாதி குறித்தும், பெண் விடுதலை குறித்தும் உரிய முக்கியத்துவம் தரவில்லை என்று ஒரு சிலர் பரப்பரை செய்து வருகின்றனர். இது குறித்து உங்கள் பார்வை?

☆ தேசிய விடுதலைப் புரட்சி என்பது பகை நஞ்சை அழிக்கும் போதே நமக்குள்ளான நஞ்சையும் அழிக்கக் கூடியது. தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்ட 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் சோசலிசத் தமிழீழக் குடியரசு அமைக்க வேண்டும் என்ற குறிக்கோளைத் தமிழீழ மக்களின் முன் நிறுத்திற்று. எது எப்படியானாலும் ஆய்தப் போராட்ட வழியில் சிங்களப் பேரினவாத அரசிடமிருந்து விடுதலை பெறுவதே உடனடிக் குறிக்கோளாக இருந்தது. அன்றைய புறச் சூழல் நீண்ட அரசியல் போராட்டப் பட்டறிவுக்கு வாய்ப்பளிக்கவில்லை.

வரலாற்று நோக்கில் சிங்களப் பேரினவாதமும் இந்திய வல்லரசியமும் அமெரிக்க வல்லரசியமும் ஆகிய ஒடுக்குமுறை அச்சு ஈழத் தமிழர்களை அடிமைப்படுத்தி வைக்கும் சூழ்ச்சியைச் செயலாக்கி வந்த நிலையில் விடுதலை அரசியலைக் கட்டி வளர்ப்பதில் பிரபாகரனின் தலைமை திறம்பட இயங்கியது. படைமுதல் கொள்கையில் மயங்காமல் அரசியலை ஆணை செலுத்த வைப்பதிலும், அடிப்படைப் போராட்ட ஆற்றலாகிய மக்கள் திரளைச் சார்ந்து நிற்பதிலும் புலிப் படையினர் உறுதி காத்தனர்.

இருப்பினும் ஒருசில படைமுதல் (இராணுவவாதப்) பிழைகள் நேரிடவே செய்தன என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் சாதிமறுப்பிலும் பெண்ணுரிமையிலும்

விடுதலைப் புலிகள் தெளிவாகவே நிலை எடுத்து நின்றார்கள். அது போர்க்களத்தின் தேவையாகவும் இருந்தது. இதில் தலைவர் பிரபாகரனின் முற்போக்கான சமூகப் பார்வைக்கு ஒரு முக்கியப் பங்கு இருந்தது என நம்புகிறேன். இதன் பொருள் விடுதலைப் போரின் போக்கில் பிரபாகரனின் தலைமை எடுத்த எந்த முடிவையும் குற்றாய்வு செய்யக் கூடாது என்பதில்லை. பல பிழைகள் நேரிடத்தான் செய்தன. அவை குறித்துப் புறஞ் சார் ஆய்வு செய்வதை அவரே குற்றமாகக் கொள்ள மாட்டார்.

ஒவ்வொரு விடுதலைப் போருக்கும் மக்களின் பால் ஒரு பொறுப்புக் கூறல் உண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தன் வெற்றிகளைக் கொண்டு மட்டுமல்ல, தோல்விகளைக் கொண்டும் மக்களின் போராட்டப் பாதையைச் செப்பனிடும் வரலாற்றுப் பொறுப்பு ஒவ்வொரு விடுதலை இயக்கத்துக்கும் அதன் தலைமைக்கும் உண்டு. இந்த வகையில் **தமிழினி அவர்கள் எழுதிய “ஒரு கூர்வாளின் நிழலில்” நல்ல முயற்சி** எனக் கருதுகிறேன். படிக்கப் பரிந்துரைக்கிறேன்.

முடிவாக, தமிழீழ விடுதலைப் புலிகள் சாதி குறித்தும், பெண் விடுதலை குறித்தும் உரிய முக்கியத்துவம் தரவில்லை என்று ஒரு சிலர் செய்யும் பரப்புரை ஏற்கத்தக்கதன்று.

● தேசியம் என்பதே கற்பிதம் எனும் பெனடிக் ஆண்டர்சனின் கருத்தைச் சிலர் முன்நிறுத்துகின்றனர். அதற்கு உங்களது எதிர்வினை என்ன?

☆ “கற்பித்துக் கொண்ட சமுதாயங்கள்” என்பது பெனிடிக்ட் ஆண்டர்சன் எழுதிய நூல். அவர் தேசத்தை “கற்பித்துக் கொண்ட அரசியல் சமுதாயம்” என்று வண்ணித்தார். தொன்மைக் காலம் தொட்டு வந்த இயற்கை அடையாளங்களாக இல்லாமல், முதலாண்மை (முதலாளித்துவ) வளர்ச்சியாலும் பெருந்திரள் தொடர்பாடலின் வளர்ச்சியாலும் உந்தப்பட்டுச் சமூக வழியில் கட்டியமைக்கப்பட்ட புலப்பாடுகளே தேசங்கள் என்று அவர் வாதிட்டார்.

வரலாற்று வழியில் முதலாண்மை வளர்ச்சி, சந்தைத் தேவை இவற்றோடு இணைந்து தேசங்கள் மலர்வதை இலெனினும் எடுத்துக் காட்டுகிறார். இந்தப் பார்வையில்

சிக்கல் இல்லை. ஆனால் இந்த வளர்ச்சிப் போக்கில் மொழி, நிலம், பொருளியல் இணைவு ஆகியவற்றுக்குரிய பங்கினை மறுக்க முடியாது. தேசம் கற்பித்துக் கொள்ளப்பட்டதாகவே இருக்கட்டும், ஆனால் இந்த அகஞ்சார் கற்பித்தலுக்குப் புறஞ் சார் பகைப்புலம் இருக்க வேண்டுமல்லவா? மாந்தக் குமுகம் என்பது இயற்கையின் படைப்பாகவும், சமூகப் படைப்பாகவும் – இரண்டாகவும் - இருப்பது எப்படியோ அதே போலத்தான்.

மொழி இல்லாமல், மொழிவழித் தேசமும் தேசியமும் இல்லாமல் – இந்தக் கட்டத்தைக் கடக்காமல் - மாந்தக் குலம் வளர முடியுமா? முடியாது என்பதே வரலாறு கற்றுத்தரும் பாடம்.

எல்லா வகைக் கற்பிதங்களுக்கும் சமூக அடிப்படை இருந்தாக வேண்டும். தேசியம் கற்பிதமென்றால் அதற்கும் அவ்வாறான சமூக அடிப்படை இருந்தாக வேண்டும். வெறும் கற்பிதங்களைத் தவிர்த்து விட்டு வாழலாம். தேசியத்தை அப்படித் தவிர்த்து விட்டு வாழ முடியுமா? என்பதுதான் தீர்மானிக்கும் வினா. பொதுமைப் பன்னாட்டகத்தின் (கம்யூனிஸ்ட் அகிலத்தின்) கூட்டத்தில் மார்க்ஸ் செய்த எள்ளல்தான் நினைவுக்கு வருகிறது.

மார்க்ஸ் 1866 சூன் 20ஆம் நாள் எங்கெல்சுக்கு எழுதிய மடலில் சொல்கிறார்:

“நேற்று பன்னாட்டுப் பேரவையில் (அகிலம்) இப்போதைய போர் குறித்து ஒரு விவாதம் நடைபெற்றது.... ‘இளைய பிரான்சு’ பேராளர்கள் (தொழிலாளர் அல்லாதார்) எல்லாத் தேசிய இனங்களும், தேசங்களும் கூட ‘காலாவதியாகி விட்ட காழ்ப்புகளே’ என்று அறிவித்தார்கள்.... தேசிய இனங்களை இல்லாமற்செய்து விட்ட நம் நண்பர் லாஃபார்க்கும் மற்றவர்களும் நம்மிடம் ‘பிரெஞ்சு’ பேசினார்கள், அதாவது அவையில் பத்திலொரு பங்கினர்க்குப் புரியாத மொழியில் பேசினார்கள் என்று சொல்லி நான் என் உரையைத் தொடங்கிய போது ஆங்கிலேயர்கள் சிரித்து விட்டார்கள்....”

பெனிடிக்ட் ஆண்டர்சனின் நூலை நான் இன்னும் படிக்கவில்லை. தேசியத்தை வெறும் கற்பிதம் என்று கற்பிக்கும் எவருக்கும் என் விடை பொருந்தும். அவரது நூலைப் படித்தால் இன்னும் சொல்லலாம்.

● **ஆர்.எஸ்.எஸ் வலியுறுத்தும் கலாசார தேசியம், ஒரு பாசிசமாக மாறியிருக்கிறது. அவ்வகையில் தமிழ்த்தேசியம் இதற்கு மாற்றாக இருக்க முடியுமா?**

☆ ஆர்.எஸ்.எஸ் இந்துத் தேசியம் அதனளவிலேயெ பாசிசக் கோட்பாடுதான். பாசிசத்துக்கு எதிரானது குடியாட்சியம் (ஜனநாயகம்). தமிழ்த் தேசியத்தின் உள்ளடக்கம் குடியாட்சியமே. தமிழ்நாட்டில் மூலவுத்தி வகையில் பாசிசத்தை முறியடிக்கும் வலிமை தமிழ்த் தேசியத்துக்கே உண்டு. ஆனால் தமிழ்த் தேசியத்தை வெறும் இனவாதமாகச் சுருக்குவோரும், சாதி காக்கும் குடித் தேசியமாகத் தாழ்த்துவோரும் தமிழ்த் தேசியத்தையே பாசிசமாகச் சீரழித்து விடும் இடர் உண்டு. எனவேதான் தமிழ்த் தேசியத்தை ஒடுக்குண்ட அனைவரையும் அரவணைக்கும் குடியாட்சியக் கொள்கையாக வளர்த்தெடுப்பதற்கு அழுத்தம் தர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

● **இன்றைய புவிசார் அரசியலில் தேசிய விடுதலை இயக்கங்களை வல்லரசுகள் பயன்படுத்திக் கொள்கின்றன என்பது ஒரு போக்காக உள்ளது. எடுத்துக்காட்டாக ஈரானுக்கு எதிராகப் போராடுமாறு அண்மையில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், குர்திஷ் போராளிகளுக்கு அறிவுறுத்தியதை இத்துடன் இணைத்துக் காண முடியும். இது குறித்த உங்களது கண்ணோட்டம்?**

☆ ஜார்ஜ் புஷ் இதையே இராக்கில் செய்தார். தேசிய விடுதலை இயக்கங்களை வல்லரசுகள் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சி கடந்த காலத்திலும் இடம்பெற்றது. இதன் பொருள் ஒடுக்குண்ட தேசங்கள் விடுதலைக்குப் போராடுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதன்று. **முற்போக்கான ஒவ்வொரு தேசியமும் பன்னாட்டுத் தேசியத்தையும் (சர்வதேசியம்) போற்றி நிற்க வேண்டும். அரசுகளின் ஐநா போலவே கருத்தியல் நோக்கில் அரசுகளற்ற தேசங்களின் ஐநா ஒன்றும் தேவை.** நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் போல் அனைத்துலக அரசில்லாத் தேசங்களின் நாடுகடந்த அமைப்புகளை உருவாக்க இப்போதுள்ள இணைய வசதிகளைப் பயன்படுத்த முடியும். தொடர்ச்சியான உரையாடல் செய்யலாம்.

இன்றைய புவிசார் அரசியல் மெய்ம்மை என்பது ஒருதுருவ உலகக் கட்டுமானம் கலைந்து போய் பலதுருவ உலகமாக மாறிவருவதாகும். இஃது அரசில்லாத் தேசங்களுக்குப் புதிய வாய்ப்புகளைத் திறந்து விடுவதாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான இப்போதைய உலக ஒழுங்கு புதிய தேசங்கள் முகிழ்ப்பதற்கு எதிராக இயங்குகிறது. அதையும் மீறித்தான் சற்றொப்ப 150 புதிய தேசங்கள் மலர்ந்துள்ளன. பழைய உலக ஒழுங்கு சாப்படுக்கையில் இறுதியாக மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது. புதிய உலக ஒழுங்கின் பிறப்பு வலிகளைக் கண்டு வருகிறோம்.

● தேசிய இனப்பிரச்சனை குறித்த மார்க்ஸ் / இலெனின் / ஸ்டாலின் / மாவோ ஆகியோரின் அணுமுறைகள் குறித்து விரிவாகத் தொகுத்துக் கூறவும்.

☆ மார்க்ஸ்-எங்கெல்ஸ் பொதுமை அறிக்கையிலேயே (Communist Manifesto) பாட்டாளிக்கும் தேசத்துமான உறவை வரையறுத்துச் சொல்லி விட்டார்கள் - பாட்டாளி வகுப்பு தன்னையே ஒரு தேசமாக ஒழுங்கமைத்துக் கொள்கிறது! அதனால்தான் **முத்தாய்ப்பாக "அனைத்து நாடுகளின் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!" (Workers of all lands, Unite!) என்று முழக்கம் தந்தார்கள். இந்தச் சாரத்தையே கெடுத்து "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!" என்று திரித்து விட்டனர். இலெனின் "அனைத்து நாட்டுத் தொழிலாளர்களே, ஒடுக்குண்ட மக்களினங்களே ஒன்றுபடுங்கள்!" என்று முழக்கம் தந்தார்.** பாட்டாளி வகுப்பு எல்லா வகையிலும் ஒடுக்குண்ட மக்களினங்களோடு ஒன்றுபட்டு நிற்பதே விடுதலைக்கு வழி! என்று பொருள். **தேசிய இனச் சிக்கலுக்கு ஸ்டாலின் பங்களிப்பு என்பது ஒரு வகையில் இலெனின் ஆற்றிய பணியின் தொடர்ச்சியே! ஆனால் இரண்டாம் உலகப் போரில் பாசிச எதிர்ப்பு ஒற்றுமையைக் கட்டி, பாசிசப் பேரிடரை வீழ்த்தியதில் ஸ்டாலின் பங்களிப்பு தனி மதிப்புக்குரியது. சீனத்தைப் பொறுத்த வரை அனைத்தும் தழுவிய ஒற்றுமை முன்னணியைக் கட்டி ஜப்பானிய வன்பறிப்பை முறியடித்ததும் செஞ்சீன விடுதலையின் வழி உலகளாவிய தேசிய விடுதலைத் தளத்தைக் கட்டியதும் மாவோவின் மகத்தான பங்களிப்பு எனலாம்.**

இத்தனையும் இருப்பினும் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகான ஊழியில் தேசிய விடுதலைக்கான புதிய போராட்ட ஆற்றல்களை இனங்கண்டு முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவதில் மாவோவின் பங்களிப்பு நிறைவளிக்கும் படியானதன்று. 1957இல் குமுகிய நாடுகளின் ஆளும் 12 பொதுமைக் கட்சிகள் வெளியிட்ட சாற்றுரையும், 1960இல் 81 பொதுமை மற்றும் தொழிலாளர் கட்சிகளின் கூட்டறிக்கையும் உலகளாவிய பொதுமை இயக்கத்தின் தலைமைப் போட்டிக்கே சான்றாக நிற்கின்றன. வெவ்வேறு விதமாக விளக்கப்பெற்ற புத்தூழி (New Epoch) என்ற கருத்தாக்கத்தின் பேரில் உலகின் பல நாடுகளிலும் விரைவான வெற்றி மயக்கம் வளர்ந்து பெரும் சேதம் உண்டாவதற்கு சோவியத்துக் கட்சி போலவே சீனப் பொதுமைக் கட்சியும் மாவோ தலைமையும் ஓரளவு பொறுப்பேற்கத்தான் வேண்டும். சான்றாக எம்-எல் கட்சியின் நம்பிக்கைகள் குறித்துக் கேள்வி எழுந்த போதெல்லாம் ''மாவோ எங்கள் வழியைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்'' என்று எங்களை நாங்களே தேற்றிக் கொள்வது வழக்கமாய் இருந்தது.

● **தமிழ்த்தேச இறையாண்மைக்காகப் புலவர் கலியபெருமாள் மற்றும் தமிழரசன் ஆகியோரது பங்களிப்பினைப் பதிவிடவும்.**

☆ புலவர் கலியபெருமாள், தமிழரசன் ஆகிய தோழர்கள் முதலில் இந்தியப் புரட்சியையும், பிறகு தமிழகப் புரட்சியையும் தீவிரமாக நேசித்தவர்கள். புரட்சிக்காக அரும்பெரும் ஈகம் செய்தவர்கள். எப்படியாவது ஆய்தப் புரட்சி நடந்து ஒடுக்குமுறை யிலிருந்து மக்கள் விடுதலை பெற வேண்டும் என்ற துடிப்பு அவர்களுக்குள் தீயாய் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் இதற்குத் தேவையான சமூக அறிவியல் கல்வியின் தேவையைத் தொடக்கத்தில் அவர்கள் உணரவில்லை. உணரத் தொடங்கிய போது பிரிந்து விட்டார்கள். ஈழப் போராட்டம் அவர்களுக்குப் பெரிதும் ஊக்கமூட்டியது. நான் இருவரோடும் நீண்ட பல காலம் சிறையில் சேர்ந்து இருந்தவன். எம்-எல் கட்சியைக் குறைகூறி உடைத்து விட்டேன் என்ற வருத்தம் என் மீது புலவருக்குச் சிறை வாழ்க்கை முழுவதிலும் இருந்தது. வெளியில் வந்த பிறகு, குறிப்பாக இறுதி ஆண்டுகளில்தான் என்னிடம் நெருக்கமாக இருந்தார். நாங்கள் தமிழ்த் தேசியக் கருத்திலும் செயலிலும் தோழமை கொண்டோம். தோழர் தமிழரசன் என்னுடன்

அவ்வளவு பெரிதாக விவாதம் செய்ய மாட்டார். ஆனால் சிறைப் போராட்டங்களில் நாங்கள் நெருங்கி நின்றோம்.

இந்திய அளவிலான ஆய்தப் போராட்டம் என்ற கானல்நீர் வேட்டையிலிருந்து தமிழ்த் தேசிய விடுதலை என்ற நிலைப்பாட்டுக்கு வந்து சேர்ந்தவர்கள் என்ற முறையில் அவர்கள் இருவரும் மதிக்கத்தக்கவர்கள். அதே போது கூட்டாகவோ தனித்தனியாகவோ அவர்களின் தெளிவான மூலவுத்தியைக் குறிக்கும்படியான உரைகள் பேச்சாகவோ எழுத்தாகவோ எதுவும் இல்லை. வீரநாயக வழிபாடு அல்லாத வரலாற்றுச் செய்திகளும் புறஞ்சார்ந்து தொகுக்கப்பட வில்லை. இந்நிலையில் இதற்கு மேல் எவ்விதத் திறனாய்வும் செய்ய இயலாதவனாய் உள்ளேன்.

● பெரியாருக்கு எதிராகப் பிரபாகரன் / வ.உ.சி / பாரதி ஆகியோரை எதிர் நிறுத்துவதன் பின்னணி என்ன?

☆ பெரியாருக்குப் பிரபாகரன் தன்னை எதிர்நிறுத்திக் கொள்ளவே இல்லை. இருவரையும் சேர்த்துப் போற்றுகிற எவரும் முன்னெப்போதும் அவர்களை எதிர்நிறுத்தியதும் இல்லை. அவர்களுக்கிடையில் வேறுபாடுகள் இருந்தால் வியப்பொன்றும் இல்லை. காலமும் களமும் வேறுபடும் போது, கருத்தும் வேறுபடத்தான் செய்யும். அந்த வேறுபாடுகளை எடுத்துக் காட்டி ஒப்பாய்வு செய்ய யார் வேண்டுமானாலும் முற்படலாம், தவறில்லை. ஆனால் இங்கு நடப்பது எந்தவித ஏரணத்துக்கும் அடங்காத வசைமாரி என்பதால் எடுபடவே எடுபடாது. சலிப்பும் வலிப்பும் கண்டவர்களுக்கு எம்மிடம் மருந்தில்லை.

வ.உ.சி. மட்டுமல்ல, திருவிக, மறைமலை அடிகளார், பாவாணர், பாவலரேறு போன்ற பெரியோரும் கூட பெரியாரின் கருத்துகளை முழுமையாக ஏற்றவர்கள் அல்லர். அதனாலென்ன? அவர்களெல்லாம் பெரியாரைப் புழுதியில் வீசி விடவில்லையே? அவருக்குரிய மதிப்பை அளிக்கத்தானே செய்தார்கள்? வரலாற்றுப் பெருமக்களின் கருத்துகளையும் அவற்றிடையிலான முரண்பாடுகளையும் அலசி ஆராயலாம், தவறில்லை. ஆனால் அதன் வடிவம் குரைத்தல் அன்று.

பாரதி இந்தியத் தேசியத்தின் பாவலர் மட்டுமல்ல, இந்துத் தேசியத்தின் பாவலரும் ஆவார். நல்ல பல முற்போக்கான சுடர்த்

தெறிப்புகள் இருப்பினும் இறுதி நோக்கில் அவரது பாக்கள் இன்று பார்ப்பனியத்துக்கே - இந்துத் தேசியத்துக்கே - பயன்படக் கூடியவை. எனவே அவர் பற்றிய மயக்கத்துக்கு எதிராகத் தமிழ்மக்களை எச்சரிக்க வேண்டிய கடமை பெரியாருக்கிருந்தது. அறிஞர் அண்ணா இந்த வகையிலும் பெரியாருடன் வேறுபட்டு நின்றார். மக்கள் பாவலர் பாரதி என்ற ஆங்கிலக் கட்டுரையை பெரியார் தலைமையில் இயங்கிக் கொண்டிருந்த போதே அண்ணா எழுதி வெளியிட்டார். பெரியாருக்கு எதிராக பாரதியை நிறுத்தினால் நிறுத்தட்டும், காத்திரமான விவாதம் நடக்கட்டும்.

● அடிக்கட்டுமானம் / மேற்கட்டுமானம் எனும் மார்க்சியப் பகுப்பாய்வில், சாதியையும் அடிக்கட்டுமானமாகக் கருத முடியும் எனும் கண்ணோட்டம் குறித்த உங்களது மதிப்பீடு?

☆ அடிக்கட்டுமானம், மேற்கட்டுமானம் என்பவை சமூக அமைப்பைப் புரிந்து கொள்வதற்கான அருநிலைப் பகுப்புகள் (abstract divisions), அவ்வளவுதான். எந்தவொரு சமூக அமைப்புக்கும் அடித்தளமாக இருப்பது அதன் பொருளாக்க முறைசார் பொருளியலே, அறிந்தோ அறியாமலோ அந்தப் பொருளியலைக் காத்து நிற்கும் கருத்தியல் கூறுகளையே மேற்கட்டுமானங்கள் என்கிறோம். சாதி இந்த இரு தளங்களிலும் இயங்குகிறது என்பதே உண்மை. **மார்க்சும் எங்கெல்சும் 1845-46இல் எழுதிய ஜெர்மானியக் கருத்தியல் என்ற நூலில் முதன்முதலாக சாதி பற்றிக் குறிப்பிட்டார்கள். சாதிக்கு அடிப்படை உழைப்புப் பிரிவினை என்றார்கள். உழைப்புப் பிரிவினை என்பது பொருளியல் அடிக்கட்டுமானத்தில் நிலவுவது என்பதைச் சொல்லத் தேவையில்லை.**

நியூயார்க் டெய்லி ட்ரிப்யூனில் (1853-61) எழுதிய கட்டுரைகள், மார்க்ஸ்-எங்கெல்ஸ் மடல்கள் (1852-62), பொருளியல் கைச்சுவடிகள் (1857-59), அரசியற்பொருளியல் குற்றாய்வுக்கு ஒரு பங்களிப்பு (1859) மூலமுதல் - இயல் ஒன்று (1867) என்று பல தருணங்களில் மார்க்ஸ்-எங்கெல்ஸ் சாதி பற்றி எழுதிய குறிப்புகள் உள்ளன. இவை அனைத்திலும் அவர்கள் சாதிக்கு அடிப்படையாக உழைப்புப் பிரிவினையைக் குறிப்பிடுவதால் சாதிக்கு அடிக்கட்டுமானத்தில் இடமளிக்கப்படுகிறது. 1853இல் மார்க்ஸ் எழுதிய இந்தியாவில்

பிரித்தானிய ஆட்சியின் எதிர்கால விளைவுகள் என்ற கட்டுரை இவ்வகையில் மிகவும் முக்கியமானது. அதே போது சாதியப் பண்பாடு பற்றிய பேச்சைத் தனித்துக் குறிப்பிடத் தேவையில்லை.

அவ்வளவு ஏன்? சாதியானது பொருளியல் வாழ்வில் ஒரு சமூக வகுப்பாகத் தொழிற்படுவது நாமே எந்தக் கோட்பாட்டுக் கண்ணாடியும் அணியாமலே காணும் படியான உண்மை. அகமண முறையில் ஒரு காரணியாக இடம்பெறும் போது அதன் முதன்மையான பண்பாட்டு வகிபாகம் துலக்கமாகிறது.

● கார்ல் மார்க்சின் "ஆசிய உற்பத்தி முறை" என்பது குறித்துப் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அணுகுமுறைகள் வந்துள்ளன? அது பற்றிய உங்களது திறனாய்வு என்ன?

☆ மார்க்சும் எங்கெல்சும் இது வரைக்குமான மாந்தக் குல வரலாற்றை அடுத்தடுத்த பொருளாக்க (உற்பத்தி) முறைகளாகப் பிரித்து – தொல் பொதுமை, அடிமையுடைமை, கிழாரியம் (பிரபுத்துவம்), முதலாண்மை, அடுத்து வரவேண்டிய புதுமப் பொதுமை, அதன் முதல் கட்டமாகிய குமுகியம் (சோசலிசம்) என்று – வரிசைப்படுத்தினார்கள் என்பது மார்க்சியர்களின் எளிய புரிதல். இவை சமூக வளர்ச்சியைக் கணிப்பதற்கான அளவைகள்தாமே தவிர, இவை அல்லாத வேறு பொருளாக்க முறைகளே இல்லை என்று பொருள் கொள்ளக் கூடாது. **தொல் பொதுமைக்கும் அடிமைக் குமுகத்துக்கும் இடையில் தந்தைவழிச் சமூகம் போன்ற நீண்ட கட்டங்கள் நிலவி வந்ததை எங்கெல்ஸ் சுட்டியுள்ளார்.**

இவ்வகையில் **மையப்படுத்திய கொடுங்கோல் ஆட்சி, பாரிய நீர்ப்பாசன ஒழுங்கு, நிலத்தில் தனியுடமை இன்மை, தன்னிறைவுக் கிராமங்கள், மாறாமல் நீடிக்கும் உழைப்புப் பிரிவினை, சந்தைப் பொருளியலும் எனவே சரக்காக்கமும் பெரும்பாலும் இல்லாத நிலை, சமூக வளர்ச்சித் தேக்கம் போன்ற காரணிகள் இணைந்த ஆசியவழிப் பொருளாக்கம் என்ற கருத்தை மார்க்ஸ் முன்வைத்தார்.** நிலத்தில் தனியுடைமை என்பது குறிப்பாக முகலாயர் ஆட்சிக் காலத்திலேயே வந்து விட்டது என்ற அடிப்படையில் **இர்ஃபான் ஹபீப்** போன்ற புகழ் பெற்ற மார்க்சியர்கள் ஆசியவழிப் பொருளாக்கம் என்ற கருத்துடன் முரண்பட்டார்கள். பிளெக்கானவும், இலெனினும்

உருசியப் பொருளாக்க முறையில் ஆசியவழிப் பொருளாக்கக் கூறுகளை இனங்கண்டனர். ஆனால் இலெனின் மறைந்த பின் ஸ்டாலின் வழிகாட்டுதலில் பன்னாட்டுப் பொதுமை இயக்கம் ஆசியவழிப் பொருளாக்கம் என்ற பார்வையை உதறிவிட்டு, மார்க்சின் செவ்வியல் வரிசைக்குத் திரும்பி விட்டது. வகுப்புக் குறுக்கிய அணுகுமுறைக்கும் இது பொருத்தமாக அமைந்து விட்டது.

இன்று வகுப்பல்லாத கூறுகள் (சாதி உள்ளிட்டவை) பொருளியல் அடித்தளத்திலேயே நிலவுவதை விளங்கிக் கொள்ள ஆசியவழிப் பொருளாக்கப் பார்வை நமக்குத் தேவைப்படுகிறது. மாறாமல் நீடிக்கும் உழைப்புப் பிரிவினை என்பது சாதியை விளங்கிக் கொள்ள உதவும். இது வெறும் உழைப்புப் பிரிவினை மட்டுமன்று, உழைப்பாளர் பிரிவினையும் ஆகும் என்றார் அம்பேத்கர். சமூக அடிக்கட்டுமானம், மேற்கட்டுமானம் இரண்டிலும் சாதி தொழிற்படுவதற்கு ஆசியப் பொருளாக்க முறை பற்றிய புரிதல் தேவைப்படுகிறது.

ஆசியவழிப் பொருளாக்கம் என்ற கருத்தை மறுதலிப்பது இலெனின் அடிக்கடி வலியுறுத்திய புரட்சிக் குடியாட்சியத்தின் (revolutionary democracy) மதிப்பைக் குறைப்பதற்கு வழிசெய்கிறது. குறிப்பாக நம் சூழலில் பெரியார்-அம்பேத்கர் பற்றிய அலட்சியம் அல்லது பார்வைக் குறைக்கு இட்டுச் செல்கிறது.

● **இன்றைக்குத் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு நாடி வட மாநிலங்களிலிருந்து வகைதொகை இன்றி எண்ணற்றோர் வந்து குவிகின்றனர். இதன் பாரதூரமான விளைவுகள் எப்படி இருக்கும்? இதற்கான மாற்று என்ன?**

☆ தமிழகத்தின் தேசியத் தன்மையைப் பாதுகாப்பதில் அதன் மக்கள்தொகை இயைபுக்கு (Demographic composition) ஒரு பங்குண்டு. இந்த மக்கள்தொகை இயைபு சிதைக்கப்படுமானால் தமிழ் மக்கள் தமிழ்நாட்டிலேயே ஏதிலிகள் ஆகும் நிலை ஏற்படும். தமிழ்த் தேசிய ஓர்மை காக்கத் தமிழ் நாட்டுக்குக் குடியுரிமை கோர வேண்டும். இந்தியாவில் இருக்கும் வரை இரட்டைக் குடியுரிமை கூட இருக்கலாம். வெளியார் வருகையை முறையாக ஒழுங்குபடுத்திக் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும்.

தமிழ்நாட்டு வேலைவாய்ப்புகளில் குறிப்பிட்ட விழுக்காட்டை தமிழ்நாட்டில் வசிப்பவர்களுக்கே ஒதுக்கீடு செய்யும் ஏற்பட்டைக் கோரலாம். காசுமீரம் தொடர்பான அரசமைப்புச் சட்ட உறுப்பு 35A, வடகிழக்கு மாநிலங்களில் செயல்படும் சில சிறப்புச் சட்டப்பிரிவுகள் நம் கவனத்துக்குரியவை. தமிழ்த் தேசிய சமூகநீதிக் கோரிக்கைகளுக்கான இயக்கங்களில் குடியேறிகளையும் இணைத்துக் கொள்ள கவனம் செலுத்த வேண்டும். குறுகிய இனவாதம் தவிர்க்கப்பட்டு, பாசிச எதிர்ப்பில் குடியாட்சியக் கோரிக்கைகளை வகுக்கும் போது தேசிய இனக் கோரிக்கைகளும் வலியுறுத்தப்பட வேண்டும்.

● உங்களது எழுத்தில் மேலோங்கி நிற்கும் தூய தமிழ் நடையைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது எனப் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இது குறித்த உங்கள் விளக்கம்?

☆ மற்றத் தூய்மைகளைப் போலத்தான் மொழித் தூய்மையும். புதிய அறிவியல் செய்திகளைச் சொல்லும் போது மொழித் தூய்மைதான் துல்லியமான இலக்கணங்கள் வகுக்க உதவும். தனித்தமிழ் இயக்கம் என்பது தனித்து அமிழ் இயக்கம் அன்று என்பார் பேராசிரியர் இளவரசு. ஒரு செய்தியை விளங்கச் செய்திட வேற்றுமொழிச் சொல் தேவைப்படும் வரை ஆள்வதில் தவறில்லை. அந்த அளவில் தவிர்க்கவியலாவிடத்து மொழிக் கலப்பு இருக்கலாம். காலப்போக்கில் அதையும் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் **என்றென்றும் கலப்படம் செய்வதுதான் எளிமைக்கு வழி என்று நினைப்போர்க்கு அறிவியல் அக்கறையும் இல்லை. மொழிக் கவலையும் இல்லை. ஒரு மொழியை நேசிக்காமல் அந்த மொழி பேசும் மக்களை எவ்வாறு நேசிக்கக் கூடும் என்று விளங்கவில்லை.** தேவையற்ற அயல்மொழிக் கலப்பை வலியுறுத்துவோரின் தோலைக் கீறிப் பாருங்கள், தமிழ் பேசும் மக்கள் பால் அலட்சியமும் வடமொழி அல்லது ஆங்கிலம் பேசுவோர் பால் மயக்கமும் பொங்கி வழியக் காணலாம். சமற்கிருத மயமாக்கமும், ஆங்கில மயமாக்கமும் மொழிசார் செயல்வழிகள் மட்டுமல்ல, சமூகம்சார் செயல்வழிகளும் ஆகும் என்பது நினைவிருக்கட்டும்.

நான் மொழிபெயர்ப்புத் துறையில் இயங்குவதால் நல்ல தமிழாக்கங்களைத் தேடுகிறேன், கிடைப்பனவற்றில் எனக்கு நிறைவில்லாத போது நானே சொல்லடிக்கிறேன். இதை

மகிழ்ந்து செய்கிறேன். அபேதவாதமாகவும் சமதர்மமாகவும் நிகரமையாகவும் குழம்பித் தடுமாறிய சோசலிசத்தைக் குமுகியம் என்று தமிழாக்கம் செய்தேன். அருளியாரிடம் இதற்கு விளக்கம் சொன்னேன். ஏற்றுக் கொண்டார். குடியாட்சியம், குமுகியம், பொதுமை போன்ற சொல்லாட்சிகளை என் வகுப்பில் கலந்து கொள்ளும் தோழர்கள் தயங்காமல் ஏற்று ஆள்கின்றனர்.

Anarchy, anarchism நீண்ட காலம் குழம்பிக் கிடந்தன. தூக்கு மேடை ஏறிய மேநாள் ஈகியரில் ஒருவர் எழுப்பிய இறுதி முழக்கம்: **Long live anarchism!** அராஜகம் என்று தமிழில் சொல்வதில் ஒலிக்கும் எதிர்மறைச் சாயல் அந்த இலட்சியத்தைச் சிதைத்து விடுகிறது. ஆளும் அரசு தேவையில்லை என்பது ஓர் உன்னதக் குறிக்கோள். அது சரியா தவறா என்று ஆராயலாம், ஆனால் அதற்கான தமிழ்ச் சொல்லே அதனைக் கீழ்மைப்படுத்தி விடக் கூடாது அல்லவா? நானும் முதலில் அரசிலிக் கொள்கை என்று சொல்லிக் கொண்டிருந்தேன். நிறைவில்லை. Monarchy – முடியாட்சி, diarchy – இரட்டையாட்சி என்ற வழியில் anarchy – அனாட்சி என்று சொல்லத் தொடங்கினேன். **ஆட்சிக்கு எதிர்மறை அனாட்சி**. **Anarchism – அனாட்சியம்**. அரசறிவியல் தமிழில் வளரும் போது அனாட்சியம் ஆட்சி செய்யும் என நம்புகிறேன். மேநாள் ஈகி "அனாட்சியம் வெல்க!" என்று முழங்குவது அவரது பெருங்குறிக்கோளுக்கு நீதி செய்யும் அல்லவா?

மூலமுதலில் பலவும் புதிதாகச் சொல்லடித்துள்ளேன். **தோழர் எஸ்விஆர் வரவேற்று எழுதியுள்ளார்**, பார்த்தீர்களா? அறிவியலைக் கண்டு அஞ்சுவது சரிதான்! அதன் தொடர்ச்சியாக அறிவியல் தமிழைக் கண்டும் அஞ்ச வேண்டியது சரிதான்! பழகுங்கள், அச்சம் போய் விடும்!

♦♦♦

பிழை மலிந்த பிதற்றல் நூலுக்குப் பரிசா?

பெரும் உரையாசிரியர் வை.மு.கோவைப் பற்றிய ஆய்வு

பொ.வேல்சாமி

உரையாசிரியரும் தமிழறிஞருமான வை.மு,கோபால கிருஷ்ணமாச்சாரியாரின் வாழ்க்கையையும் பணிகளையும் பற்றிய நூல் ஒன்று வந்துள்ளது. **“வை.மு. கிருஷ்ணமாச்சாரியாரின் உரைவளம்” எனும் இந்த நூலை எழுதியவர் முனைவர் வெ.இராஜேஸ்வரி,எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.**

இந்நூலில் உள்ள பெரும்பாலான தகவல்களை அவர் பிழைகள் நிறைந்ததாகவே எழுதியுள்ளார். ஏனென்றால் **வை.மு.சடகோபராமானுசாச்சாரியார், சே.கிருஷ்ணமாச்சாரியார், வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்** ஆகியவர்களின் கூட்டுச் செயல்பாட்டினால் உருவான பதிப்புகளைப் பற்றிய ஆய்வு என்பது 1898 இல் தொடங்கி 1970 வரையான காலம் வரை நீள்கின்றது. இந்த 72 வருடங்களில் இம்மூன்று பேராசிரியர்களும் இணைந்து தமிழ் நூல்களுக்கு உரை எழுதும் பணியில் ஈடுபட்டனர்.

அத்துடன் வை.மு.கோவினுடைய அண்ணன்முறையானரான தமிழறிஞர் வை.மு.சடகோப ராமானுச்சாரியாரில் தொடங்கி இவருடைய உறவினரான சே.கிருஷ்ணமாச்சாரியாருடன் இணைந்தும் இவ்விரு பேராசிரியர்களின் மறைவுக்குப் பின்னர்

பதிப்பிக்கப்பட்ட நூல்களில் விடுபட்டுபோன பகுதிகளை நிறைவு செய்து முடிப்பதாகவும், சில நூல்களை வை.மு.கோவே உரை எழுதி வெளியிடுவதாகவுமான வரலாற்றை உடையதாக இருக்கின்றது. இந்த அறிஞர்கள் மூவரும் இணைந்து செயல்பட்டு வெளியிட்ட நூல்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியாரின் பணிகளை ஆராய முற்படவேண்டும். அவ்வாறான தேடலுடன் கூடிய ஆய்வுகள்தான் இந்த அறிஞரைப் பற்றியதான முழுமையான ஆராய்ச்சியாக அமையும். இவ்வாறான செய்திகளைக் கண்டுகொள்ளாமலும் கணக்கில் எடுக்காமலும் மனம்போனபடி முனைவர் வெ.இராஜேஸ்வரி,எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி. எழுதிய நூல்தான் “வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியாரின் உரைவளம்” ஆகும். இத்தகைய தவறான நூலை “தமிழ் வளர்ச்சித்துறை” சிறந்த நூல் என்று பாராட்டிப் பரிசும் வழங்கியிருக்கிறது என்பது வியப்பூட்டுகிறது.

இந்த நூலில் திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரைக்கு விளக்கமாக எழுதப்பட்டுள்ள செய்திகளைப் பற்றிக் கூறுவதில் பெரும்பாலானவை பிழையானவை.

தண்டியலங்காரத்தில் “பொதுவியல், பொருளணியியலுக்கு“ வை.மு.கோ உரை எழுதி பதிப்பித்துள்ளார் என்ற செய்தி முழுவதும் பிழையானது.

இவரைப் போலவே “தொல்காப்பியம், சங்க இலக்கியம்; பதிப்பும் பதிப்பாளரும்” என்ற நூலில் பக்கம் 378 இல் “உ.வே.வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியர்” என்ற தலைப்பில் பு.பாலாஜி என்ற ஆய்வாளரும் பிழையாக எழுதுகிறார்.

இவரால் மேலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற நூல்களில் பலவும் வை.மு.சடகோபராமானுசாச்சாரியார், சே.கிருஷ்ணமாச்சாரியார் என்ற இரண்டு பேராசிரியர்களாலும் பல ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டும் பதிப்பிக்கப்பட்டும் வந்துள்ளன. கம்ப ராமாயணத்தில் சில பகுதிகளும் வில்லிபாரதத்தில் சில பகுதிகளும் பத்துப்பாட்டில் ஏழு நூல்களும்தான் பேராசிரியர் வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியாரால் உரை எழுதப்பட்டவை என்று உறுதியாகத் தெரிகின்றன. தண்டியலங்காரம், நன்னூல், நாலடியார், “பகவத்விஷயம்

10 தொகுதிகள்'', மதுரைக் கலம்பகம் போன்ற பல நூல்களுக்கு உரை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டவர்கள் வை.மு.சடகோபராமானுசாச்சாரியார், சே.கிருஷ்ணமாச்சாரியார். பிற்காலங்களில் இவ்விரு பேராசிரியர்களின் மறைவுக்குப் பின்னால் இத்தகைய நூல்களை மறுபதிப்பு செய்து வெளி யிட்டவர்தான் பேராசிரியர் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் என்பது குறிப்பிடத்தக்கது. வை.மு.கோவின் மறைவுக்குப் பின்னர், இவர்களுடைய நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிட்ட வை.மு.கோ.வின் மைந்தரான வை.மு.நரசிம்மன் அவர்களும் ''உமா பதிப்பகத்தாரும்'' மற்ற இரண்டு பேராசிரியர்களின் பெயர்களை நீக்கிவிட்டு உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் பெயரை மட்டும் குறிப்பிட்டுள்ளனர். பல்கலைக் கழகங்களில் ஆய்வுகளை நிகழ்த்திய ஆராய்ச்சியாளர்கள் மற்ற இரண்டு பேராசிரியர்களால் வெளியிடப்பட்ட நூல்களின் முந்தைய பதிப்புகளைக் கண்டு ஒப்பிட்டு ஆராயாமல் தங்களுடைய கருத்துக்களை ஆய்வுகளாக வெளியிட்டுள்ளனர். இது போன்ற நிகழ்வுகளால் பேராசிரியர் வை.மு.கோ பற்றிய ஆய்வுகள் பலவும் பிழைகள் நிரம்பியதாக உள்ளன.

சரி இது எவ்வாறாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலைபெற்றுவிட்ட ஆளுமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிஞர்களைப் பற்றியும் அவர்களால் செய்து முடிக்கப்பட்ட ஆய்வுகளைப் பற்றியும் ஒரு தெளிவான வரலாற்றுரீதியான விளக்கத்தை நாம் தேட வேண்டும். அத்தகைய தேடலின் ஒரு பகுதியாக இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற உரையாசிரியரான வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியாரின் பணிகளைப் பற்றிச் சரியான தகவல்களுடன் கூடிய ஓர் ஆய்வை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்தக் காலக்கட்டத்துத் தமிழ்நூல் பதிப்புகளைப் பற்றி ஆராய்வதற்கு அக்காலத்தில் (கி.பி.1870 – கி.பி.1920) பள்ளி, கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் இடம்பெற்ற பழந்தமிழ் நூல்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஏனென்றால், 19ம் நூற்றாண்டின் நடுபகுதியிலிருந்து சங்க இலக்கியங்களும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும்

தொல்காப்பிய பொருளதிகாரமும் ஏட்டுச்சுவடிகளிலிருந்து அச்சு வடிவம் பெற ஆரம்பித்தன. இதனால் அக்காலக்கட்டத்தில் தமிழ் ஆய்வில் ஈடுபாடு கொண்டிருந்த அறிஞர்களால் ஆராய்ச்சிக்கு உட்படுத்தபடும் நூல்களாக இவைகள் இடம் பெற்றன. இதன் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக அந்தக் காலக்கட்டத்தில் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வந்த கல்வி நிலையங்களிலும் பல்கலைக் கழகப் பாடத்திட்டத்திலும் இந்நூல்களும் இவற்றிற்கு எழுதப்பட்டுள்ள பழமையான உரைகளுடன் மாணவர்கள் தேர்வுக்குப் படிப்பதற்கான பாடநூல்களாக இடம்பெற்றன. இத்தகைய பழமையான நூல்களுக்கு பழங்காலத்திலேயே உரையாசிரியர்களால் எழுதப்பட்ட உரைகளும் இருந்தன. எடுத்துக்காட்டாக **இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்கினியர், நக்கீரர்** போன்ற இலக்கண உரையாசிரியர்களும் **பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், அரும்பத உரைகாரர், பெரியவாச்சான் பிள்ளை** போன்றபுகழ்பெற்ற தமிழ் இலக்கிய உரையாசிரியர்களையும் குறிப்பிடலாம்.

அதே சமயத்தில் அந்தக் காலகட்டத்தில்இத்தகைய பழந்தமிழ் நூல்களையும் அந்நூல்களுக்கான புகழ்மிக்க உரைகளையும் மாணவர்களுக்குப் பாடமாக நடத்துவது அவ்வளவு எளிமையான செயலாக ஆசிரியர்களுக்கு இருக்கவில்லை. இவ்வாறாக அக்காலத்தில் நிலவி வந்த கல்விச் சூழ்நிலையைப் பற்றி **உ.வே.சாமிநாத அய்யர்** தன்னுடைய **“என் சரித்திரம்”** என்ற நூலின் பல இடங்களில் விளக்கமாகப் பேசுகின்றார். எடுத்துக்காட்டாக அந்த நூலின் பக்.731 இல் 1880 இல் நீதியரசர் சேலம் இராமசாமி முதலியாரை சந்தித்து பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில், முதலியார் அவர்கள் தமிழின் பழமையான நூல்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்ட கேள்விக்குப் பதிலாக உ,வே.சா எழுதுகிறார்.

“தாங்கள் எந்த நூல்களைச் சொல்லுகிறீர்களென்று தெரியவில்லையே?” என்றேன்.

“சீவக சிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? சிலப்பதிகாரம் படித்திருக்கிறீர்களா?”

அவர் சொன்ன நூல்களை நான் படித்ததில்லை; என்னுடைய ஆசிரியரே படித்ததில்லை, புஸ்தகத்தைக்கூட நான் கண்ணால் பார்த்ததில்லை. ஆனாலும், 'இவ்வளவு புஸ்தகங்களைப் படித்ததாகச் சொன்னதை ஒரு பொருட்படுத்தாமல் எவையோ இரண்டு மூன்று நூல்களைப் படிக்கவில்லை என்பதைப் பிரமாதமாகச் சொல்லவந்துவிட்டாரே!' என்ற நினைவோடு பெருமிதமும் சேர்ந்து கொண்டது. "புஸ்தகம் கிடைக்கவில்லை; கிடைத்தால் அவைகளையும் படிக்கும் தைரியமுண்டு" என்று கம்பீரமாகச் சொன்னேன்."

ஆனால் 1870லிருந்து உ.வே.சா., தன்னுடைய முதல் பதிப்பான சீவக சிந்தாமணி நூலை வெளியிட்ட 1887 வரையிலான 17 ஆண்டுகளில் நன்னூல் போன்ற இலக்கண நூல்களும் சிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற காப்பிய நூல்களிலிருந்து சில பகுதிகளும் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, ஏலாதி போன்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலிருந்து பல பகுதிகளும் அன்று படித்து வந்த பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பாடநூல்களாக அமைக்கப்பட்டு இருந்தன. இந்த நூல்களில் திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையுடன் கூட அதன் பதிப்பாசிரியர்கள்,மாணவர்கள் எளிமையாகப் புரிந்து கொள்வதற்காகப் பரிமேலழகர் போன்ற பழமையான உரையாசிரியர்களின் உரைகளுக்குப் பலவிதமான விளக்கங்களையும் எழுதிச் சேர்த்துப் பதிப்பித்து வெளிவந்த நூல்களும் உண்டு.

1868இல் பி.ஏ. படிக்கும் மாணவர்களுக்கு "சீவக சிந்தாமணியின்" முதல் பாகமான "நாமகள் இலம்பகத்தை" புகழ்பெற்ற உரையாசிரியர் நச்சினார்கினியர் எழுதிய உரையுடன் பாடமாகப் பல்கலைக் கழகத்தினர் வைத்தனர். அந்த நூலை **"ஹெச்.பவார்"** என்ற தமிழறிஞரான கிறிஸ்தவ பாதிரியார் பதிப்பிக்கின்றார். அந்த நூல் சமண சமயம் சார்ந்த சீவகனின் சரித்திரத்தைச் சொல்வதன் வாயிலாகச் சமண சமயத் தத்துவத்தை விளக்குவதற்காகப் பாடப்பட்டதாகும். எனவே அந்நூலின் பல பாடல்களில் சமண சமயக் கோட்பாடுகள் தொடர்பான பல செய்திகள் இடம்பெற்றிருந்தன. இத்தகைய சமயம் சார்ந்த செய்திகளைப் புரிந்து கொண்டபின்னர்தான் மாணவர்கள் அந்தநூலைப் படித்துப் புரிந்து கொள்ள முடியும்.

எனவே இந்த நூலைப் படிப்பவர்களுக்கு வழிகாட்டியாக சமண சமய கோட்பாடுகள் தொடர்பான பல்வேறு தகவல்களை இதனைப் பதிப்பித்த ஆசிரியர் தன்னுடைய முன்னுரையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கமாக எழுதியுள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் நச்சினார்கினியர் உரையை ஆங்கிலத்தில் எளிமையாக மொழிபெயர்த்தும் தருகிறார்.

அத்துடனேயே நூலினுள்ளே உரையாசிரியர் எழுதிய பல நுட்பமான சொற்களுக்கான விளக்கங்களையும் கூறுகிறார். நூலின் இறுதியில் இரண்டு முக்கியமான பின் இணைப்புகள் உள்ளன.

ஒன்று, நாமகள் இலம்பகத்தில் பயின்று வந்துள்ள அரிய தமிழ்ச் சொற்களின் அகராதியும் அச்சொற்களுக்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைத்து "இன்டெக்ஸ்" என்ற பெயரில் தந்துள்ளார். (இந்த நூல் வெளிவந்து 19 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத அய்யரால் பதிப்பிக்கப்பட்ட சீவக சிந்தாமணி நூலில் நவீன காலத்துப் பதிப்பில் இடம்பெற வேண்டிய "அரும்பத அகராதி" என்ற "இன்டெக்ஸ்" போன்றவை இல்லை என்பது கவனிக்கத்தக்கது. இதற்கு 20 ஆண்டுகளுக்கு பின்னர் அதாவது ஹெச்.பவார் வெளியிட்ட சிந்தாமணி நூலுக்கு 37 ஆண்டுகளுக்குப் பின்பு, 1907 இல் உ.வே.சா வெளியிட்ட இரண்டாம் பதிப்பில்தான் ஆய்வாளருக்கு பயன்படும்படியான "அரும்பத அகராதி" (இன்டெக்ஸ்) என்ற நவீன ஆய்வுப் பகுதி இடம்பெற்றுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும்.)

இரண்டு, இந்த நூலின் பதிப்பாசிரியரான ஹெச்.பவார் இந்த நூலைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஆராய்ச்சிக் குறிப்புக்களிலும் ஆங்கிலச் சொற்களுக்கான "இன்டெக்ஸ்" இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நூல் பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றதைத் தொடர்ந்து அடுத்து வந்த காலங்களில் காப்பியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை போன்ற பல நூல்கள் அன்றைய பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பாடத்திட்டங்களில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு அக்காலத்தில் இடம்பெற்றிருந்த சில நூல்களின் பட்டியலைப் பார்ப்போம்.

(1) 1872 நான்மணிக்கடிகை, பாரதவெண்பா (மெட்ரிக்குலேசன்)

(2) 1872, 1876, 1880 சிலப்பதிகாரம் அடியார்க்குநல்லார் உரையுடன்

(3) 1881 ஏலாதி (மெட்ரிக்குலேசன்)

(4) 1885 நாலடியாரும் கூர்மபுராணமும்

உ.வே.சாமிநாத அய்யர் பதிப்புகள் வெளிவருவதற்கு முன்பே பல தமிழ் நூல்கள் அன்றைய கல்லூரி பள்ளி மாணவர்களின் பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தன.அப்படி இடம்பெற்ற நூல்களின் மூலமும் அதற்குப் பழமையான உரை இருந்தால் அந்த உரையும் பழைய உரை இல்லாவிட்டால் பதிப்பாசிரியர் எழுதிய புதிய உரையுடன் வெளியிடப்பட்டன. நான்மணிக்கடிகை, நாலடியார் போன்ற நூல்களில் ஆங்கில மொழிபெயர்ப்பும் சேர்ந்து இடம்பெற்றிருந்தன. பின்வந்த காலங்களிலும் இவ்வாறு பாடமாக வைக்கப்பட்ட பல தமிழ் இலக்கிய நூல்களிலும் ஆங்கில மொழிபெயர்ப்பும் இடம்பெற்றிருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

உ.வே.சாமிநாத அய்யர் 1887இல் சீவக சிந்தாமணியை நச்சினார்கினியர் உரையுடனும் 1889இல் பத்துப்பாட்டை நச்சினார்கினியர் உரையுடனும் 1892இல் சிலப்பதிகாரத்தை அடியார்க்குநல்லார் உரையுடனும், அரும்பத உரையுடனும் வெளியிட்டார். 1894இல் புறநானூற்றையும் அதற்குப் பழமையாக எழுதப்பட்டிருந்த உரையையும் 1895இல் புறப்பொருள் வெண்பாமாலையையும் வெளியிட்டார் (அன்றைய நிலையில் இந்நூலுக்கு உரை எழுதியவர் சாமுண்டி தேவ நாயகர் என்பது உ.வே.சாவுக்குத் தெரியாமல் இருந்தது. இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் அடிக்குறிப்பாக இந்த நூலின் உரையாசிரியர் சாமுண்டி தேவ நாயகர் என்பதை அறிஞர் ரா.ராகவையங்கார் செந்தமிழ் பத்திரிகையில் எழுதியுள்ளார் என்று உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் 1924 இல் வந்த மூன்றாம் பதிப்பில் கூட இந்த உரையாசிரியர் பெயர் இடம்பெறவில்லை. 1942 இல் வந்த ஐந்தாம் பதிப்பில்தான் இந்த உரையாசிரியர் பெயர் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.)

1903 இல் ஐங்குறுநூறும் அந்நூலுக்கு எழுதப்பட்ட பழைய குறிப்புரையும் 1904 இல் பதிற்றுப்பத்தும் அதற்கான பழைய உரையும் உ.வே.சா வெளியிட்டார்.

1887 தொடங்கி 1904 முடிய 17 வருடங்களில் உ.வே.சா அதுவரையில் அச்சிடப்படாத அரிய பழமையான தமிழ் நூல்களில் எட்டு நூல்களைப் பதிப்பித்து விட்டார். இந்த நூல்கள் உ.வே.சாவால் அச்சில் வெளியிடப்பட்ட ஒரு சில ஆண்டுகளிலேயே அவ்வாறு அச்சில் வந்த நூல்களின் பல பகுதிகள் 19ஆம் நூற்றாண்டில் (1896இலிருந்து) பள்ளி, கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான பாடத்திட்டத்திலும் சேர்க்கப்பட்டன. அவற்றுள்

சீவக சிந்தாமணி (கோவிந்தையார் இலம்பகம்)

பத்துப்பாட்டு (மலைபடுகடாம், பொருநராற்றுப்படை, முல்லைப்பாட்டு, சிறுபாணாற்றுப்படை)

சிலப்பதிகாரம் (நாடுகாண்காதை, கொலைக்களக்காதை, புறஞ்சேரியிருத்தக்காதை)

புறநானூறு (புறநானூறு பாடல்கள் 101–125, 200–266)

புறப்பொருள் வெண்பாமாலை (வெட்சிப்படலம் முதல் காஞ்சிப்படலம் முடிய)

ஆகிய ஐந்து நூல்களின் பாடத்திட்டத்திற்கான பகுதிகளை மட்டும் தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் தனித்தனியாக வெளியிட்டு அத்தகைய பாடத்திட்டநூல்களுக்கு முன்பு, தான்பதிப்பித்தநூல்களில் இடம்பெற்ற செய்திகளுக்கும் கூடுதலாக பல குறிப்புகளைச் சேர்த்திருந்தார். இக்குறிப்புகள் மாணவர்கள் அந்நூல்களைக் குழப்பமின்றி விளக்கமாகப் புரிந்து கொள்வதற்குப் பக்கத் துணையாக இடம்பெற்றது. 1892 இல் சிலப்பதிகாரம் அரும்பதயுரையுடனும் அடியார்க்குநல்லார் உரையுடனும் உ.வே.சாமிநாத அய்யரால் வெளியிடப்பட்டது.

பல ஆண்டுகள் சென்ற பின்பு சிந்தாமணி, பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற நூல்களை மறுபதிப்புகளாக உ.வே.சா. மீண்டும் வெளியிட்டார். பாடத்திட்டப் புத்தகங்களில் மாணவர்களின் புரிதலுக்காக எழுதப்பட்டிருந்த குறிப்புகளைப் பின் வந்த மறுபதிப்புகளில் இணைத்து வெளியிட்டார். இதனால் முதல் பதிப்பில் 945 பக்கங்களில் வெளிவந்த சீவகசிந்தாமணி மூன்றாம் பதிப்பில் 810 பக்கங்கள் கூடுதலாகி 1755 பக்கங்களில் வெளிவந்துள்ளது. முதல் பதிப்பில் 435 பக்கங்களில் வெளிவந்த

பத்துப்பாட்டு மூன்றாம் பதிப்பில் 500 பக்கங்கள் கூடுதலாகி 935 பக்கங்களில் வெளிவந்துள்ளது. முதல் பதிப்பில் 641 பக்கங்களில் வெளிவந்த சிலப்பதிகாரம் மூன்றாம் பதிப்பில் 136 பக்கங்கள் கூடுதலாகி 777 பக்கங்களில் வெளிவந்துள்ளது. முதல் பதிப்பில் 487 பக்கங்களில் வெளிவந்த புறநானூறு 304 பக்கங்கள் கூடுதலாகி மூன்றாம் பதிப்பில் 791 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இவ்வாறு அடுத்தடுத்த பதிப்புகளில் அதிகரிக்கப்பட்ட பக்கங்களில் உள்ள செய்திகளில் பெரும்பாலானவை பாடத்திட்டப் பதிப்புகளில் மாணவர்களுக்கு புரியும்படியான விளக்கங்களும் அடுத்தடுத்த காலங்களில் அந்தந்த நூல்களுக்கு உ.வே.சாவுக்கு கிடைத்த கூடுதல் தரவுகளும்தான் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

19ஆம் நூற்றாண்டின் தமிழ்நூல் பதிப்புகளைப் பற்றி திருக்குறளை மொழிப்பெயர்த்துப்பதிப்பித்தவர்களான **எல்லீஸ், ட்ரூபாதிரியார், ஜி.யூ.போப், சார்லஸ் கிரால், ஹெச்.பவார்** போன்றவர்கள் தமிழில் ஏட்டுச்சுவடிகளாக இருந்த நூல்களை அச்சு வடிவத்துக்குக் கொண்டு வந்தனர். அப்படி அவர்களால் தமிழில் அச்சிடப்பட்ட நூல்கள் என்பன அன்று ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளில் வெளியிடப்பட்ட நூல்களின் நவீன வடிவத்தில் அமைக்கப்பட்டு வெளிவந்தன.இந்த வகையான நவீன நூல் வெளியீட்டு முறையை அவர்களிடமிருந்து செம்மையாகக் கற்றுக் கொண்டவர் உ.வே.சா என்பதை அவருடைய பதிப்புகள் நமக்கு நன்கு விளக்குகின்றன.உ.வே. சா.வின் இத்தகைய பதிப்பும் பாடத்திட்டமும் பற்றிய நுட்பங்களை வை.மு.சடகோப ராமானுசாச்சாரியார், சே.கிருஷ்ணமாச்சாரியார், வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் போன்ற ஆசிரியர்கள் முழுமையாகப் பின்பற்றி தங்களுடைய தமிழ்ப் பதிப்புகளையும் பாடநூல்களையும் வெளியிட்டனர்.

இந்த மூன்று பேராசிரியர்களும் தனித்தனியாகவும் இணைந்தும் சிறிதும் பெரிதுமாக 50க்கும் மேற்பட்ட தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை வெளியிட்டிருக்கின்றனர். 1898இல் தொடங்கி 1956 வரை சுமார் 58 வருடங்கள் இவர்களுடைய நூல்கள் வெளிவந்தன. 1957 க்கு பின் சுமார் 1970 வரை வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியாரின் மகன் வை.மு.நரசிம்மன் அவர்களால் முன்னர் அம்மூன்று பேராசிரியர்களாலும் வெளியிடப்பட்ட பல நூல்கள் மறுபதிப்பாக

வெளியிடப்பட்டன. அப்படி வெளியிட்டபோது இம்மூவரில் உண்மையான உரையாசிரியர் யார்? அல்லது இம்மூவரும் இணைந்து எழுதி வெளியிட்ட நூல்களா? என்பதைப் பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லாமல் வெளியிட்டு விட்டார். இதனால் ஒருவர் எழுதிய உரைக்குறிப்புகளை மற்றவர்கள்எழுதியது என்று பிழையாகப் பலரும் கருதி வந்தனர்.இத்தகைய ஒரு குழப்ப நிலை இன்றும் தமிழாய்வு உலகில் நிலவி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படிப் பலரும் தவறாகக் கருதுவதற்குக் காரணங்களை இனங்கண்டு விளக்கி சரியான சான்றுகளால் யார் யார் எந்தெந்த நூல்களை வெளியிட்டார்கள் என்பதையும் ஒரு நூலிலேயே ஒவ்வொருவருடைய பங்களிப்பும் எவ்வளவு என்பதையும் இந்த ஆய்வில் சான்றுகளுடன் விளக்குகின்றேன். இத்தகைய ஆய்விற்கு வேறு வகையான தரவுகளைப் பெறமுடியவில்லை. ஆனால் 1903 லிருந்து 1964 வரையிலான 60 ஆண்டுகளில் இம்மூவராலும் வெளியிடப்பட்ட நூல்களில் இடம்பெற்றுள்ள “நூல்விளம்பரப்பட்டியல்”களில் இருந்து சான்றுகளைத் தருகின்றேன்.

(1) நன்னூல் – 1898

(2) தண்டியலங்காரம் பொருளணியியல் – 1901

(3) சிலப்பதிகாரம் காடுகாண்காதை - 1906

(4) அஷ்டப்பிரபந்தம் – 1906 க்கு முன்பு

(5) மதுரைக்கலம்பகம் – 1906 க்கு முன்பு

(6) கம்பராமாயணம் பாலகாண்டம் சில பகுதிகள் – 1906க்கு முன்பு

(7) கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் சில பகுதிகள் - 1906க்கு முன்பு

(8) கம்பராமாயணம் ஆரண்ய காண்டம் முழுமையும் - 1906க்கு முன்பு

(9) கம்பராமாயணம் சுந்தரகாண்டம் சில பகுதிகள் - 1906க்கு முன்பு

(10) கம்பராமாயணம் யுத்தகாண்டம் சில பகுதிகள் - 1906 க்கு முன்பு

(11) பாகவதம் சில பகுதிகள் - 1906 க்கு முன்பு
(12) சிலப்பதிகாரம் காடுகாண்காதை - 1906 க்கு முன்பு
(13) வில்லிபுத்தூரார்பாரதம் பல பகுதிகள் - 1906 க்கு முன்பு
(14) சூளாமணி முதல் மூன்று சருக்கங்கள் - 1906 க்கு முன்பு
(15) தண்டியலங்காரம் – 1901
(16) திருக்குறள், நாலடியார் சிற்சில பகுதிகள் - 1909
(17) முதுமொழிக்காஞ்சி - 1909
(18) நாலாயிர திவ்யப்ரபந்தம் - 1924
(19) திருப்பாவை வியாக்யானம் - 1924
(20) திருப்பாவை வியாக்யானம் உரை - 1924
(21) கம்பராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் உரையுடன் – 1924
(22) ஆச்சார்யஹ்ருதயம் - 1924
(23) நாலடியார் உரையுடன் - 1924
(24) ஐந்திணையெழுபது உரையுடன் - 1928
(25) சோழமண்டலசதகம் பாடப்பட்டோர் வரலாற்றுடன் - 1928
(26) புறத்திரட்டு முதற்பகுதி - 1928
(27) கம்பராமாயணம் முழுமையும் - 1935
(28) சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை உரை - 1935
(29) தொல்காப்பியச் சொல்லதிகாரக்குறிப்பு - 1935
(30) பகவத் விஷயம் 10 வால்யூம் - 1935
(31) திருக்குறள் அறத்துப்பால் - 1937
(32) திருக்குறள் பொருட்பால் - 1938
(33) திருக்குறள் பொருட்பால், காமத்துப்பால் - 1938
(34) தண்டியலங்காரம் முழுமையும் - 1964
(35) சிலப்பதிகாரம் (காட்சிக்காதை, நாடுகாண்காதை) - 1964
(36) மணிமேகலை (பாத்திரம்பெற்றகாதை, மலர்வனம்புக்க காதை) - 1964

தண்டியலங்காரம் பற்றி

1901 இல் அணி இலக்கண நூலாகிய “தண்டியலங்காரத்தில்” “பொருள் அணியியல்” மட்டும் அன்றைய பி.ஏ.மாணவர்களுக்கான

பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தது. இந்நூலை கி.பி.1857 இல் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் என்பவர் சுப்ரமணிய தேசிகர் எழுதியுள்ள பழைய உரையுடன் வெளியிட்டு இருந்தார். அந்தப் பழைய உரையானது கல்வியாளர்களால் மட்டும் புரிந்துகொள்ளும் வகையில் கடினமாக இருந்தது.அதனால் அன்றைய மாணவர்களுக்கு இந்த நூலையும் இதன் பழைய உரையையும்புரிந்து கொண்டு பாடம் நடந்துவது ஆசிரியர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது.

1857இல் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் வெளியிட்ட அச்சுப்படியையும் பல்வேறு இடங்களில் தான் தேடித் தொகுத்த ஏட்டுச்சுவடிகளையும் துணையாகக் கொண்டு வை.மு.சடகோப ராமானுச்சாரியார் தண்டியலங்காரத்தையும் மூலத்தையும் அதற்கு எழுதப்பட்டிருந்த பழைய உரையையும் செம்மையாக ஆராய்ந்தார். அதன் விளைவாக அந்நூலின் “மூலம்” செம்மைப்படுத்தப்பட்டது. அத்துடன் அந்தப் பழைய உரையை மாணவர்கள் எளிதில் விளங்கி கொள்வதற்கான குறிப்புகளையும் எழுதி இணைத்தார். 1901 இல் பொதுவணியியல், பொருளணி யியல், சொல்லணியியல் ஆகிய மூன்று இயல்களில் ஒன்றை மட்டும் அதாவது அன்று பி.ஏ. பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்த பொருளணியியலை மட்டுமேவெளியிட்டார். பொதுவணியியல் தனி நூலாக வெளியிடப்பட்டதை 1909 இல் மதுரை கலம்பகம் நூலில் உள்ள விளம்பரம் தெரிவிக்கின்றது. ஆனால் 1901 இல் வந்த பதிப்பை நேரில் பார்த்து ஆராயும் தகுதியற்றவர்கள் இதுபற்றி மனம்போனபடி தவறாக எழுதுகின்றனர். எடுத்துக்காட்டாக 1920 இல் ஆறுமுகம்சேர்வை வெளியிட்ட தண்டியலங்காரத்திலும் 1967இல் பேராசிரியர் கு.சுந்தரமூர்த்தி வெளியிட்ட தண்டியலங்காரத்திலும் 1901 லேயே வை.மு.சடகோப ராமானுச்சாரியாரால் பொதுவணி யியலும் பொருளணியியலும் வெளியிடப்பட்டதாகக் குறிப்புகளை எழுதியுள்ளனர். அதேநேரத்தில் வை.மு.கோ உரைத்திறன் என்ற நூலை எழுதிய முனைவர் வெ.இராஜேஸ்வரி, எம்.ஏ.,எம். பில்.,பிஎச்.டி., அவர்கள் ஒருபடி மேலே போய் 1901-இல் இந்நூலை வெளியிட்டவர் வை.மு.கோபால கிருஸ்ணமாச்சாரியார் என்று உளறிக் கொட்டுகிறார். இவ்வாறு பல பிழைகள் நிறைந்துள்ள இந்த நூலுக்குத் தமிழக அரசின் “தமிழ்வளர்ச்சித்துறை” “சிறந்த நூல்” என்று பரிசளித்துப் பாராட்டிப் பரவசப்பட்டுள்ளது.

1901 இல் பொதுவணியியலுக்கு, தான்எழுதிய முகவுரையில் இந்நூலை இயற்றியவர் அம்பிகாபதியின் மகன் தண்டி என்பார் என்று கூறுகின்றார். இந்தக் கூற்றுக்கு ஆதரவாகப் பழைய ஏடுகளில் இருந்த ஒரு சிறப்புப் பாயிர செய்யுளையும் எடுத்துக்காட்டாகக் கூறுகின்றார். இந்த அம்பிகாபதி என்பவர் கம்பரின் மகனா என்பது பற்றி எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. கூடுதலாகத் தமிழ்மொழியில் அலங்கார நூல்கள் எந்தெந்த காலத்திலிருந்து உருவாகி வந்தன என்ற வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றார். அவ்வாறு தரும் போது வடமொழியில் வெளிவந்த அலங்கார நூல்கள் பலவற்றை ஒப்பிட்டுக் குறிப்பிடுகின்றார். அவ்வாறு வடமொழியில் வெளியிடப்பட்ட நூல்களில் ‘‘காவ்யதர்சம்’’ என்ற அணி இலக்கண நூல் குறிப்பிடத்தக்கது. இந்த வடமொழி நூலை எழுதியவர் ‘‘தண்டி’’ என்றும் அந்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்புதான் இந்த தண்டியலங்காரம் என்பதையும் விளக்குகின்றார். இதில் சடகோப ராமானுசாச்சாரியாரால் எழுதப்பட்டுள்ள முன்னுரையின் அமைப்பும், அந்த நூலில் அவரால் எழுதப்பட்டுள்ள பழைய உரைக்கான விளக்கக் குறிப்புகளும் அதற்கு முன் உ.வே. சாமிநாத அய்யரால் வெளியிடப்பட்ட பாடநூல்களான சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், புறநானூறு போன்றவற்றில் உள்ள ஆய்வுக் குறிப்புகளை ஒத்திருப்பதைக் காணலாம்.

திருக்குறள் உரைவிளக்கம் பற்றி

இன்றைய கல்விச் சூழலில் வை.மு.கோ உரை என்று பலராலும் பாராட்டப்படும் நூல்களில் திருக்குறளுக்கு பரிமேலழகர் எழுதியுள்ள உரைக்கான விளக்கமும் கம்பராமாயண உரையும் ஆய்வாளர்கள் பலராலும் பாராட்டிப் பேசப்படுவதாக உள்ளன. திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரைக்கான விளக்கத்தை அறத்துப்பாலுக்கு மட்டும் 1937இல் நூலாக வெளியிட்டனர். 1938இல் பொருட்பால், காமத்துப்பால் ஆகிய இரண்டையும் இணைத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளனர். பின்னர் 1946இல் பொருட்பால், காமத்துப்பாலும் 1949இல் அறத்துப்பாலும் 1955இல் பொருட்பால், காமத்துப்பாலும் 1965இல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய மூன்றும் இணைந்ததாகவும் வெளியிடப்பட்டுள்ளன. திருக்குறள் பரிமேலழகர் உரை முழுமைக்கும் வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

உரை விளக்கம் எழுதியுள்ளதாக இன்று பலரும் தவறாகக் கருதி வருகின்றனர். இதற்கான காரணம் 1937லிருந்து 1965 வரை வெளியிடப்பட்ட பதிப்புகளில் 1937இல் வெளியிடப்பட்ட அறத்துபாலில் மட்டும் அதன் குறிப்புரை ஆசிரியர் வை.மு.சடகோப ராமானுசாச்சாரியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. “பார்வையிட்டவர் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்தடுத்து வந்த பதிப்புகளில் 1949 இல் வெளியிடப்பட்ட திருக்குறள் அறத்துப்பாலில் மட்டுமே வை.மு.சடகோப ராமானுசாச்சாரியார் பெயர் இடம்பெற்றுள்ளது. மற்ற பதிப்புகளில் எல்லாம் வை.மு.கோ பெயர் மட்டும் இடம் பெற்று வெளியிடப்பட்டுள்ளது. அதனால் திருக்குறள் முழுமைக்குமான குறிப்புரை ஆசிரியர் வை.மு.கோ. தான் என்று பலரும் தவறாகக் கருதும் நிலை ஏற்பட்டது. அதே நேரத்தில் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியாரால் எழுதப்பட்ட முன்னுரையில் 102 அதிகாரங்களுக்கு சடகோப ராமானுசாச்சாரியார் குறிப்புரை எழுதியதாகவும் மீதமுள்ள 31 அதிகாரங்களுக்கு தான் குறிப்புரை எழுதியதாகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த முன்னுரையை ஆய்வாளர்கள் எப்படிப் படிக்காமல் விட்டனர் என்பது வியப்பாக உள்ளது.

1937 பதிப்பில் பதிப்பாசிரியர் வை.மு.கோ. எழுதும் முன்னுரையில், கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து 1938 இல் பொருட்பாலையும் காமத்துப்பாலையும் வெளியிடும் போது தான் எழுதிய பதிப்புரையில் அவர் மிகத் தெளிவாக கூறுகின்றார். 133 அதிகாரங்கள் உள்ள திருக்குறளில் 99 அதிகாரங்களுக்கு தன்னுடைய அண்ணன் முறையினரான சடகோப ராமானுசாச்சாரியார் உரை எழுதியிருப்பதையும் (இந்தப் பகுதிகள் மட்டும் தான் அந்தக் காலத்தில் மாணவர்களுக்குப் பாடமாக இருந்தன. அந்தப் பாடப் பகுதிகளுக்கு மட்டுமே சடகோப ராமானுசாச்சாரியார் உரை விளக்கம் எழுதினார்) மீதமுள்ள பகுதிகளைப் பதிப்பாசிரியராகிய தன்னால் விளக்கவுரை எழுதப்பட்டு முழுமைப் பெறச் செய்து வெளியிட்டதாகவும் கூறுகின்றார்.

1937 இல் வெளிவந்த திருக்குறள் அறத்துப்பால் பதிப்பின் முதல் பக்கத்தில் பரிமேலழகர் உரைக்குக் குறிப்புரை வரைந்தவர் “வை.மு.சடகோப ராமானுசாச்சாரியார் ஸ்வாமிகள் இயற்றிய

குறிப்புரையுடன்" என்றும் வை.மு.கிருஷ்ணமாச்சாரியாரால் பார்வையிடப்பெற்று என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1938 இல் வெளிவந்த பொருட்பால் காமத்துப்பால் இணைந்த பதிப்பில் முதல் பக்கத்தின் நடுவில் "குறிப்புரையுடன்" என்று வெறுமனே எழுதப்பட்டு, நூலை வெளியிட்டவர் வை.மு.கிருஷ்ணமாச்சாரியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1965 இல் திருக்குறள் மூன்று இயல்களும் சேர்த்து ஒன்றாக வெளியிடப்பட்ட பதிப்பில் சடகோப ராமானுசாச்சாரியாரின் பெயரை தூக்கிவிட்டு பரிமேலழகர் உரைக்கு முழுமையாகக் குறிப்புரை எழுதியவர் வை.மு.கோ மட்டுமே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் உமா பதிப்பகம் வெளியிட்ட மறுபதிப்பிலும் வை.மு.கோ பெயர் மட்டும் இடம் பெற்றுள்ளது. இதனால் திருக்குறளில் 41 அதிகாரங்களுக்கு மட்டும் உரை எழுதிய வை.மு.கோவே நூல் முழுமைக்கும் குறிப்புரை வரைந்தவராகப் பலரும் கருதும் நிலை ஏற்பட்டது.

இதுமட்டுமன்றி வை.மு.சடகோப ராமானுசாச்சாரியாரால் எழுதப்பட்ட பரிமேலழகர் உரைக்கான விளக்கத்தை அந்தக் காலத்தில் புகழ்பெற்றிருந்த பல தமிழ் அறிஞர்கள் பாராட்டி இருக்கின்றனர். அத்தகைய தமிழ் அறிஞர்களில் ஒருவரான வேங்கடராஜீலு ரெட்டியார் தன்னிடம் கூறியதாக வை.மு.கோ எழுதுகின்றார்."

இந்தப் பகுதியை முறையாகப் படிக்காமல் வை.மு.கோ பற்றி, "வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியாரின் உரைவளம்" என்ற பெயரில் ஒரு குப்பை நூலை எழுதிய வெ.ராஜேஸ்வரி அம்மையார் அந்நூலின் பெரும்பாலான இடங்களில் தவறாகவே எழுதிச் செல்கிறார். அவற்றில் அந்த அம்மையார் கூறும் செய்திகளில் மிகவும் நகைச்சுவையானது. "திருக்குறள் அறத்துப்பால் மூலமும் பரிமேலழகர் உரையும் என்ற நூல் "வேங்கடராயலு ரெட்டி"யாரால் எழுதப்பட்டு, (இப்படி ஒரு நூலை வேங்கடராயலு ரெட்டியார் எழுதவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது) வை.மு.கோவால் பார்வையிடப்பட்டு வெளியிடப்பட்டது." என்று முழுமையும் தவறாக உளறியதுடன் நில்லாமல் வை.மு.கோவின் பெருந்தன்மையைப் பாராட்டுவதாக நினைத்து "தன்காலத்து உரையாசிரியர்கள் (வேங்கடராஜுலு

ரெட்டியார் போன்றவர்கள்) நூல் எழுதிப் பதிப்பிக்க மிகவும் உதவியுள்ளார்'' என்று பரவசமாகத் தன் நூலின் பக்கம் 44, 45இல் பதிவிடுகின்றார்.

இதேபோன்று வை.மு.சடகோப ராமானுச்சாரியாரால் தண்டியலங்காரத்திற்கு எழுதப்பட்டஉரை விளக்கத்தை முனைவர் வெ.இராஜேஸ்வரி, எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி., அவர்கள் (வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியாரின் பதிப்புகளைப் பற்றி ஆய்வு? செய்தவர்) தன் ஆய்வு நூலில் ''தண்டியலங்காரத்தில் பொதுவியல், பொருளணியியலுக்கும் உரை எழுதிப் பதிப்பித்தவர் வை.மு.கோ. என்று கூசாமல் தவறாகக் உளறிக்கொட்டுகிறார்.''

இப்படிப் பிழைகள் மலிந்த நூலைப் பற்றி

''இந்நூலுள் ஒவ்வோர் இயலும் ஒவ்வொரு முனைவர் பட்டத்துக்குக் கட்டியம் கூறி நிற்பது. அவ்வளவு அழுத்தம் திருத்தமாகவும், உறைபொதி வடிவாகவும் தன் ஆய்வைப் பதிவு செய்திருக்கிறார்'' என முனைவர் V. கிருஷ்ணன் என்பவர் உச்சிமீது வைத்துப் பாராட்டி மகிழ்கிறார் என்றால், தமிழாய்வு எந்தத் திசை வழியில் செல்கிறது என்பதை நினைக்கவே அச்சமாக உள்ளது.

♦♦♦

கட்டுரையாளர்
ஆய்வறிஞர்

மூத்த எழுத்தாளர் க.ரத்னம்

(கோவையைச் சார்ந்த மூத்த எழுத்தாளர் (வயது 95) க.ரத்னம் அவர்கள் நாவல் / சிறுகதை / கவிதை / எனப் பல இலக்கியப் படைப்புகளை எழுதிக்குவித்தவர். தமிழ்ப் பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், திறனாய்வாளர், பறவையியல் அறிஞர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். அவரது **"கல்லும் மண்ணும்"** புதினம் பெரும் வரவேற்பினைப் பெற்றது. **புதுமலர் பதிப்பகம் சார்பாக 1999 ஆம் ஆண்டில் அது மீண்டும் வெளியிடப்பட்டது.** இங்கிலாந்தைச் சேர்ந்த மானுடவியல் ஆய்வாளர் **எட்கர் தர்ஸ்டன்** (1855 - 1935) எழுதிய **"தென்னிந்தியச் சாதிகள் மற்றும் பழங்குடிகள்" (Castes and Tribes of Southern India)** குறித்த நூலை மொழியாக்கம் செய்து தமிழுக்குப் பெருமை சேர்த்தவர். எழுத்தாளர் க.ரத்னம் அவர்கள் எழுதிய **"தமிழ்நாட்டுப் பறவைகள்"** தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்ற மிக முக்கியமான நூலாகும்.



கோவையில் தனது துணைவியார் மரகதம் அம்மையாருடன் வாழ்ந்து வரும் அவரைச் சந்தித்து உரையாடிய அனுபவம் தனித்துவமானது. அதன் சாரம் இங்கு பதிவிடப்படுகிறது.)

க.ரத்னம் மற்றும் அவரது துணைவியார் மரகதம் அம்மையார்.

★ "கல்லும் மண்ணும்" நாவல், புதுவகைப் புனைவு. ஒரு கிழவனும் சிறுவனுமே அதன் பாத்திரங்கள். (ஹெம்மிங்வேயின் கடலும் கிழவனும் எனும் ஆங்கில நாவலின் தாக்கத்தால் அது உருவானது. அது திரைப்படமாக வெளிவந்த பொழுது அதை நான் பார்த்துள்ளேன். 1960 - இல் "கல்லும் மண்ணும்" நாவல் முதலில் வள்ளுவர் பண்ணையால் வெளி யிடப்பட்டது. அது பாரதி மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப்பட்டது. பின்னர் அந்த நாவல் புதுமலர் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

★ எனது படைப்புகள் ஆனந்த விகடன், குமுதம், சுதேசமித்திரன் போன்ற இதழ்களிலும், தீபம், அமுதசுரபி ஆகிய இலக்கியப் பத்திரிகைகளிலும் வெளி வந்தன. பிறகு அவை "காலையும் மாலையும்" என்ற தலைப்பில் நூலாகவும் வெளியாயின. 1965-ல் "விளையாட்டு மைதானம்" எனும் எனது சிறுகதை ஆனந்த விகடன் பத்திரிகையில் முத்திரைக் கதையாக வெளிவந்துள்ளது.

★ தாகூரின் கவிதைகள் மீது இருந்த ஈடுபாட்டால், வசனகவிதைகள் எழுதினேன். மீராவின் வசனகவிதைத் தொகுதி வெளியாவதற்கு ஓராண்டுக்கு முன்பே எனது "பேதை நெஞ்சம்" தொகுப்பு 1960-ல் வெளியானது.

★ எனது புதினங்களைப் பொறுத்தவரை "நினைவின் நிழல்" மற்றும் "கனவு மாலை" ஆகிய இரண்டின் பாத்திரங்களும் தொடர்பு உடையவை.

தமிழ்நாட்டுப் பறவைகள் நூலுக்குத்
தமிழ்நாடு அரசின் பரிசு

★ "இவர்கள் பார்வையில் அகலிகை" நூல், புதுமைப்பித்தனின் அகலிகை தொடர்பான தாக்கத்தால் மற்ற படைப்புகளையும் தேடத் தூண்டியது. இராமாயணத்தில் அகலிகை வரலாறு விரிவானது. மகாபாரதத்திலும் அகலிகை வரலாறு உள்ளது. அதனைத் தேடிப் பிடிக்க மிகுந்த முயற்சி மேற்கொள்ள வேண்டியதாயிற்று. எனினும் இந்நூல் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

★ நான் பறவைகள் மீது ஈடுபாடு கொள்ள நேர்ந்தது ஒரு எதிர்பாராத நிகழ்வாகும். மாநிலக் கல்லூரியில் விலங்கியல் பேராசிரியரான நண்பர் சேதுவைப் பார்க்கச் சென்றேன் வகுப்புக்கு அவர் செல்ல வேண்டி இருந்ததால், அவர் அறையில் அமர்ந்தவன், அங்கு இருந்த புத்தகங்களைப் புரட்டினேன் அமெரிக்க எழுத்தாளர் ஒருவரின் "How to watch Birds?" என்ற நூல் கண்ணில் பட்டது. அதன் தாக்கமே பறவைகளைப் பார்க்கக் காரணமாயிற்று. பிறகு பட்ட வகுப்பில் விலங்கியல் படிக்கும் மாணவர்களுக்குப் பறவைகளைப் பற்றிய அறிமுக நூலாக **"தென் இந்தியப் பறவைகள்"** எனும் நூலை எழுதினேன். அது தமிழக அரசின் வெளியீடாக வந்தது. தொடர்ந்து **"தமிழ்நாட்டுப் பறவைகள்"** நூலும் வெளிவந்தது.

★ பறவைகள் பற்றிய என்னுடைய குறிப்புகள் அனைத்தையும் ஜெகநாதன் என்ற மாயவரம் கல்லூரி இயற்கை இயல் மாணவரிடம் ஒப்படைத்து விட்டேன் அவர் இப்பொழுது திருப்பூரில் வாழ்கிறார்.

★ தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தர் திரு.வ.ஐ. சுப்பிரமணியம் அவர்களிடம் பறவைகள் பற்றிய ஆய்வுக்காக நல்கை கேட்டு நேரில் சென்ற பொழுது, அவர் எட்கர் தர்ஸ்டன் அவர்களது "Castes and Tribes of Southern India" எனும் தொகுப்பு நூல் ஜப்பான் மொழியிலும் கூட மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலப் புலமை இல்லாதவர்கள் அன்றைய தமிழ்ச்சமூகம் பற்றி அறிந்து கொள்ள அந்தத் தொகுதிகளை மொழிபெயர்க்குமாறு கூறினார். எட்கர் தர்ஸ்டன் சென்னை அருங்காட்சியாக அதிகாரியாகப் பணிபுரிந்தார். ஆனைமலை, ஊட்டி போன்ற இடங்களுக்கு நேரடியாகச் சென்று அங்கிருந்த பழங்குடி மக்களை நேரடியாகப் பார்த்து அவர்களது பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை ஆகியவை குறித்துத் தனது நூலில் விரிவாகப் பதிவிட்டுள்ளார். தமிழ் நாட்டின் சாதி அமைப்பு குறித்தும் அதில் விரிவாக ஆவணப்படுத்தி

"இவர்கள் பார்வையில் அகலிகை" நூலுக்காகத்
தமிழ்நாடு அரசின் பரிசு (2000)

உள்ளார். துணைவேந்தர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் துணைவேந்தராக இருந்த பொழுது அந்நூலின் மூன்று தொகுதிகள் கொண்டு வந்தோம். வார்த்தைக்கு ஐந்து காசு என்று தொடக்கத்திலேயே தெரிவித்தார். அதற்காக நான் பெற்ற தொகை 21,000 ரூபாய் மட்டுமே!

பிறகு 4/5/6/7 ஆகிய தொகுதிகளை நான் மொழியாக்கம் செய்தேன். அதில் நான்கு முதல் ஆறு தொகுதிகளை சுந்தரமூர்த்தி அவர்கள் துணை வேந்தராக இருந்த பொழுது அச்சில் வெளியானது. சி.சுப்பிரமணியம் அவர்கள் துணைவேந்தராக இருந்த பொழுது இறுதியாக ஏழாவது தொகுதியும் வெளியானது. ஏழாண்டுக் காலம் கடினமாக உழைத்து அதன் ஏழு தொகுதிகளையும் வெளியிட்டேன். **மொத்தம் 25,000 பக்கங்கள் கொண்ட பெரும் நூல் அது**. அந்த நூல் பின்னாளில் மிகப்பெரும் வரவேற்புப் பெற்றது.

★ வள்ளுவர் பண்ணை என்னுடைய நாவல்களை 1960களில் வெளியிட்ட பதிப்பகம். கால்டுவெல் நூலின் முன்னுரையைப் புலவர் கோவிந்தன் மொழிபெயர்த்துக் கழகம் வாயிலாக வெளியிட்டார் அதன் உரிமையைக் கழகத்திற்குத் தந்திருந்தார். பின்னர் நூலை முழுமையாக மொழிபெயர்த்த பொழுது, ஏற்கெனவே மொழிபெயர்த்த முன்னுரைப் பகுதியை அப்படியே இணைத்து விட்டார். இது உரிமை மீறலாகக் கழகம் கருதி அவர் மீது வழக்குத் தொடர்ந்தது. அதிலிருந்து அவரை மீட்க நான் முன்னுரையைத் தனியே மொழிபெயர்த்தேன்.

★ புதுமைப்பித்தன் நூல்களைத் தொகுப்பாக வெளியிட்ட ஐந்திணை பதிப்பகத்தாருடன் புதுமைப்பித்தன் இல்லம் சென்று அவருடைய துணைவியாரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்பான **“பலிபீடம்”** நாவலின் ஆங்கிலப் பதிப்பைத் தந்து உதவினார். அதுவும் கைவிட்டுப் போய்விட்டது. **“ஸ்டாலினுக்குத் தெரியும்”** நூலின் புதுமைப்பித்தன் கையெழுத்துப் பிரதி என்னிடம் இருந்தது. நாஞ்சில் நாடனும் காலச்சுவடு கண்ணனும் நேரில் வந்து “ரூபாய் 3,000 தருகிறோம்” எனக் கேட்டனர். நான் அதைக் கொடுக்கவில்லை. சில ஆண்டுகளுக்குப் பிறகு

புதுச்சேரியில் அரிய நூல்களைச் சேகரிக்கும் கண்ணன் என்பவர் ரூபாய் 8,000 தந்து அதனைப் பெற்றுக் கொண்டார். "ஸ்டாலினுக்குத் தெரியும்" நூல் முதலில் ஸ்டார் பிரசுரம் மூலம் வெளியிடப்பட்டது. அதன் கையெழுத்துப் பிரதியில் மூன்று பக்கங்களைக் காணவில்லை.

ஜெமினி ஔவையார் படத்திற்காகப் புதுமைப்பித்தன் எழுதியதை ஜெமினி ஒதுக்கி விட்டது. அதில் ஔவையாரைப் புதுமைப்பித்தன் இளமங்கையாகப் படைத்துள்ளார். அதன் சில பகுதிகள் என்னிடம் உள்ளன. அதனைத் தினமணிக் கதிரில் சில ஆண்டுகளுக்கு முன் வெளிப்படுத்தி உள்ளேன்.

★ நான் தமிழைப் போலவே ஆங்கிலத்தில் வெளியான இலக்கியங்களிலும் ஆர்வம் காட்டி வந்தேன். "கடலும் கிழவனும்" (Old man and the sea") நாவலே "கல்லும் மண்ணும்" நாவல் உருவாக உந்துதலைத் தந்தது. புரட்சியாளரான ஹெம்மிங்வேவைப் பற்றி நிறையத் தகவல்களைச் சேகரித்துள்ளேன். அப்படிப்பட்டவர் ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்பது புதிராக உள்ளது.

★ (1) "இவர்கள் பார்வையில் அகலிகை"

(2) "தமிழ்நாட்டுப் பறவைகள்"

ஆகிய எனது இரண்டு நூல்களும் தமிழக அரசு வழங்கும் ரூ.10,000 பரிசு பெற்றன.”

தொகுப்பு: கண. குறிஞ்சி

♦♦♦

முற்போக்கு இலக்கியத்தின் சமகால ஆளுமை – ச. தமிழ்ச்செல்வன்

– கண. குறிஞ்சி –

இலக்கிய விமர்சனத்திற்காக வல்லிக்கண்ணன் / தொ.மு.சி. ரகுநாதன் / க.நா. சு / இறுதியாக வா செ. குழந்தைசாமி போன்ற ஒன்பது தமிழ் எழுத்தாளர்கள் சாகித்திய அகாதமி விருது பெற்றிருந்தாலும், கடந்த 37 ஆண்டுகளுக்குப் பிறகு "தமிழ்ச் சிறுகதைகளின் தடங்கள்" எனும் விமர்சன நூலுக்காக 2025-ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது பெற்றவர் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் அவர்கள். இந்நூலில் 60-க்கும் மேற்பட்ட முன்னோடிகளின் 3,000 சிறுகதைகளை 900 பக்க அளவில் ஆய்வு செய்து ஆவணமாகத் தந்துள்ளார்.

தமிழ்ச்செல்வன் அவர்களை ஓர் இலக்கிய விமர்சகர் என்ற சிமிழுக்குள் மட்டும் அடைத்துச் சுருக்கிவிட முடியாது. அவர் பன்முக ஆளுமை மிக்கவர். சிறுகதை எழுத்தாளர் / கவிஞர் / கரிசல் படைப்பாளி / நாடக ஆசிரியர் / சிறுவர் இலக்கியக் கர்த்தா / தொகுப்பாசிரியர் / தொழிற்சங்கவாதி / மாற்றுக் கல்வியாளர் / பெண் உரிமைப் போராளி / அறிவொளி இயக்க ஒருங்கிணைப்பாளர் / களச்செயல்பாட்டாளர் மற்றும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கத்தின்

மதிப்புறு தலைவர் என்பதாக அவரது ஆளுமை விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக எழுதி வரும் அவர், 52 நூல்களைப் படைத்துள்ளார். இவரது படைப்புகள் ஆங்கிலம், பிரெஞ்சு, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

புனைவு மற்றும் அல்புனைவு நூல்களை அவர் எழுதி வந்தாலும், அண்மைக் காலங்களில் தொடர்ந்து அல்புனைவுகளை எழுதுவதில் மிக்க ஆர்வம் காட்டி வருகிறார். ஒரு சிறந்த நூலை ஒழித்துகட்டுவதற்கான ஒரே வழி அந்த நூலைப் பற்றிப் பேசாமல் கள்ள மௌனம் சாதிப்பதுதான் என்பார்கள். ஆனால், அந்த அவலத்திற்குத் தமிழ்ச்செல்வன் நூல்கள் உள்ளாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக "அரசியல் எனக்குப் பிடிக்கும்" எனும் இவரது நூல், மூன்று இலட்சம் படிகளுக்கு மேல் விற்பனையாகிப் பெரும் சாதனை படைத்துள்ளது என்பது அவருக்கான சிறந்த அங்கீகாரமாகும்.

ஆங்கில இலக்கியத் திறனாய்வின் தந்தை எனக் கருதப்படுபவர் **ஜான் டிரைடன்**. "ஒரு படைப்பின் தகுதியைக் கோட்பாடுகளின் அடிப்படையில் மதிப்பிட வேண்டும்" என்று அவர். அழுத்தமாக வலியுறுத்தினார். தமிழ்ச்செல்வனின் செல்நெறி அத்தகைய தன்மையில்தான் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. "என்னை வளர்த்தது சிறுகதை எழுத்துக்கள். அவை என்னை இடதுசாரியாக மாற்றின. என்னைப் படைப்பாளியாக மாற்றியது தெருநாடகங்கள்" என அவரே ஒருமுறை குறிப்பிட்டார்.

அவ்வகையில் தமிழ்ச்சிறுகதை மரபு எப்பொழுதும் ஒரு மதச்சார்பற்ற, சனநாயகக் கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தது. மேலும் மக்கள் மையப்படுத்தப்பட்ட, சமூக அடிப்படையிலான மற்றும் விழிப்புணர்வுக் கண்ணோட்டம் கொண்டதாக அவை அமைந்துள்ளன என்பதைத் "தமிழ்ச் சிறுகதைகளின் தடங்கள்" நூலில் அவர் தரவுகளுடன நிறுவுகிறார். அவ்வகையில் எழுத்தாளர்கள் கூறியதை மட்டுமல்லாமல், அவர்கள் கூறாமல் விட்டதையும் இவரது ஆய்வு முறை கண்டறிகிறது.

அவரது படைப்புலகில் குறிப்பிடத்தக்க மற்றோர். கூறு, அவற்றின் பன்முகத்தன்மை ஆகும். புனைவு ஆயினும்,

அல்புனைவு ஆயினும் எடுத்துக் கொண்ட பொருண்மைக்கு ஏற்ப, அதை அடர்த்தியோடு வெளிப்படுத்துவது தமிழ்ச்செல்வனின் பாணியாகும். இப்படி அவரது படைப்புகள் ஒவ்வொன்றும் அசலான, வித்தியாசமான பிரதியாக இருப்பதற்குக் காரணம், அவரது பரந்து விரிந்த பன்முக அனுபவங்கள்தான் என்பதை ஒருவர் எளிதில் உணர முடியும்.

வலதுசாரி மின்மினி வெளிச்சத்தில் இலக்கியவாதிகள் பலரும் அதை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய சூழலில், தமிழ்ச்செல்வன் அவர்களது மற்றுமோர் கண்ணோட்டம் இங்கு மிக மிகக் கருதத்தக்கதாகும். . அது இடதுசாரி மற்றும் திராவிட இயக்கப் படைப்புகளின் மீதான பிறரது விமர்சனம் குறித்தது. மக்களுக்காக எழுதுவதை இந்த வலதுசாரி எழுத்தாளர்கள், "இலக்கியச் செய்நேர்த்தி இல்லாத வெறும் பிரச்சாரப் பிரதி" என்பதாக அலட்சியமாக ஆணவத்தோடு ஒதுக்குவதற்குத் தமிழ்ச்செல்வன் மரணஅடி கொடுக்கிறார்.

"எந்த ஓர் அரசியல் இயக்கத்துடனும் தொடர்பு இல்லாத எழுத்தாளராக இருப்பதில் பெருமை கொள்ளும் ஒரு கலாச்சாரப் போக்கு இங்கு நிலவுகிறது. அந்த எழுத்தாளர்கள் மட்டுமே "தூய இலக்கியத்தை" உருவாக்குகிறார்கள் என்றும், மற்றவர்கள் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள் என்றும் கூறிவிட முடியாது. எழுத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் ஒரு சார்பு நிலையும், அழகியல் நோக்கமும் ஒருங்கே காணப்படுகின்றன. அனைத்துக் கலை மற்றும் இலக்கியங்களும் ஓரளவுக்குப் பிரச்சாரமாகவே செயல்படுகின்றன. **நான் ஓர் இடதுசாரி. நான் எழுதும் உழைக்கும் வர்க்க மக்களைப் பற்றிய கதைகள் பிரச்சாரம் என்று முத்திரை குத்தப்படுகின்றன. எனவே என் கதையில் எது பிரச்சாரம் என்று நான் அவர்களைக் கேட்கிறேன். இதுவரை எந்த பதிலும் அதற்கு வரவில்லை"** என்ற அவரது பிரகடனம், ஓர் இடதுசாரி எழுத்தாளனின் சத்திய ஆவேசத்தை வெளிப்படுத்துவதாக இருப்பதை உணர முடிகிறது.

1978-ல் தமுஎகசவில் இணைந்த தமிழ்ச்செல்வன் அவர்களது இலக்கியப் பயணம், இன்றும் தொய்வுறாமல் எழுச்சியுடன் தொடர்கிறது. புதுப்புது கருத்துக்கள், புதுப்புது உத்திகள், புதுப்புது வெளிப்பாடுகள் என்பதாக அவை மலர்கின்றன.

"மனிதவாழ்வு, ஆண் - பெண் சமத்துவம், பெண் விடுதலை, குழந்தைகளுக்கான விடுதலை ஆகிய இவை எல்லாம்தான் எனது எழுத்துக்களின் பேசுபொருளாக இருக்கிறது, இருக்கும்" என்பது அவரது திசை வழியாக உள்ளது.

சோர்வின்றித் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும் இவர், "இலக்கியம், மக்களைச் சென்றடைய ஒரு வாசிப்பு இயக்கம் தேவை. இந்தப் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்" என வலியுறுத்துகிறார். இன்று சற்றே பின்னடைவு கொண்டிருக்கும் இலக்கிய வாசிப்பினை மேம்படுத்த இத்தகைய மாற்று வழியை அவர் பரிந்துரைக்கிறார். இவரது வழிகாட்டுதல் செயலாக்கப் பட்டால், எதிர்காலத்தில் புதிய புதிய தமிழ்ச்செல்வன்கள் தோன்றித் தமிழ்ச் சமூகத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வார்கள் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

♦♦♦

சாக்ரடீசும் திருவள்ளுவரும்: இரு நாகரிகங்கள் - ஓர் அறப்பார்வை

பொன் சந்திரன்

புவியியல் ரீதியாகவும் மொழி ரீதியாகவும் வெகுதொலைவில் இருந்தாலும், இரு பழங்காலத் தத்துவ மரபுகள் மனித ஒழுக்கம் மற்றும் அறவாழ்க்கையின் நோக்கம் குறித்து வியக்கத்தக்க வகையில் ஒரே மாதிரியான முடிவுகளுக்கு வந்துள்ளன ஒன்று கிரேக்கத்தின் செவ்வியல் மரபிலிருந்து சாக்ரடீஸின் கேள்வி கேட்கும் மனதின் வழியாக வெளிப்பட்டது; மற்றொன்று பண்டைய தமிழ் நாகரிகத்தில் திருவள்ளுவரின் காலத்தால் அழியாத ஞானத்தின் வழியாக மலர்ந்தது. கலாச்சாரத்தால் பிரிக்கப்பட்டிருந்தாலும், இந்த இரண்டு மரபுகளுமே ஒழுக்கம் என்பது அதிகாரம், மரபு அல்லது பயனை அடைவதற்காக மட்டுமே உருவானது என்ற கருத்தை நிராகரித்தன. மாறாக, அவை அறத்தை அக அமைதிக்கும், மனித மேம்பாட்டிற்கும் ஓர் இன்றியமையாத நிபந்தனையாகக் கருதின.

கிரேக்கத்தின் 'டிகையோசின்' (Dikaiosyne - நீதி) என்ற கருத்தாக்கத்திற்கும், தமிழின் 'அறம்' என்ற இலட்சியத்திற்கும் இடையிலான ஒப்பீடு, அறச்சிந்தனையில் ஓர் ஆழமான ஒன்றிணைப்பை வெளிப்படுத்துகிறது. இருப்பினும், இந்த மரபுகள் அறத்தைப் புரிந்துகொள்ளும் மற்றும் கடைபிடிக்கும்

முறைகள் கணிசமாக வேறுபடுகின்றன. சாக்ரடீஸ் பகுத்தறிவு விசாரணை மற்றும் ஆன்மாவின் ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையின் மூலம் அறத்தைக் கட்டமைக்கிறார்; திருவள்ளுவர் அறத்தை அன்பு, உறவுமுறை கடமைகள் மற்றும் அன்றாட வாழ்க்கையின் அனுபவங்களின் மூலம் வேரூன்றச் செய்கிறார்.

சமூகக் கட்டுக்கோட்டிற்கு அப்பாற்பட்ட அற ஒழுங்கு

சாக்ரடீசின் மரபில், குறிப்பாக பிளேட்டோவின் 'கோர்கியாஸ்', 'கிரிட்டோ', 'ரிபப்ளிக்' போன்ற உரையாடல்களில், நீதி என்பது வெறும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதோ அல்லது வலிமையானவர்களின் விருப்பத்திற்குக் கட்டுப்படுவதோ அல்ல. அதிகாரம் மட்டுமே நீதியைத் தீர்மானிக்கிறது என்று வாதிட்ட சோஃபிஸ்டுகளுக்கு (Sophists) சாக்ரடீஸ் எதிராக நின்றார். அவரைப் பொறுத்தவரை, 'டிகையோசின்' என்பது ஒரு புறநிலை அற உண்மை. இது பகுத்தறிவால் ஆளப்படும் மனித ஆன்மாவின் சரியான இசைவு ஆகும்.

அதேபோல், திருவள்ளுவரின் 'அறம்' என்ற கருத்தாக்கம் சட்டப்பூர்வமான ஒழுக்கத்தையோ அல்லது சடங்கு நடத்தைகளையோ கடந்து நிற்கிறது. தமிழ்த் தத்துவப் புரிதலில், அறம் என்பது வாழ்க்கையின் இயற்கையான ஒழுங்கைக் குறிக்கிறது. இது தெய்வக் கட்டளையால் மேலிருந்து திணிக்கப்படுவதில்லை, மாறாக வாழ்வை நிலைநிறுத்தும் அன்பு, பரிமாற்றம் மற்றும் சமநிலையின் உள்ளார்ந்த தாளத்திலிருந்து வெளிப்படுகிறது. அறத்தின்படி வாழ்வது என்பது இயற்கையுடனும், சமூகத்துடனும், தன்னிடமும் இணக்கமாக வாழ்வதாகும்.

எனவே, இந்த இரண்டு மரபுகளுமே அறத்தை ஒரு மேலோட்டமான சமூக ஏற்பாடாகக் கருதுவதை நிராகரிக்கின்றன. மாறாக, அறம் மனித இருப்பில் ஆழமாகப் பதிந்திருக்கும் ஒன்றாகவும், உண்மையான நல்வாழ்விற்குத் தேவையான ஒன்றாகவும் கருதப்படுகிறது.

அறத்தின் அக அடித்தளம்

சாக்ரடீசுக்கும் திருவள்ளுவருக்கும் இடையிலான ஒரு குறிப்பிடத்தக்க ஒற்றுமை, ஒழுக்கம் தனிமனித மனதிலிருந்தே தொடங்குகிறது என்பதில் அவர்கள் கொண்டுள்ள பிடிவாதமாகும்.

'கோர்கியாஸ்' உரையாடலில், அநீதி இழைப்பதை விட அநீதியால் பாதிக்கப்படுவதே சிறந்தது என்று சாக்ரடீஸ் புகழ்பெற்ற முழக்கத்தை முன்வைக்கிறார். ஓர் அநீதியைச் செய்வது ஆன்மாவையே சிதைத்துவிடும், இது வெளிப்படையான வெற்றிகளைப் பெற்றிருந்தாலும் கூட, உள்மனக் குழப்பத்தையும் துன்பத்தையும் விளைவிக்கும். ஒரு சர்வாதிகாரி செல்வம் மற்றும் அதிகாரத்தைக் கொண்டிருக்கலாம், ஆனால் அவனது ஆன்மா சிதைந்திருந்தால், அவன் அடிப்படை மகிழ்ச்சியற்றவனாகவே இருக்கிறான்.

திருவள்ளுவர் இந்த அக அறப்பார்வையைத் திருக்குறளில் மிகவும் புகழ்பெற்ற குறள் ஒன்றின் மூலம் எதிரொலிக்கிறார்:

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற."

வள்ளுவரைப் பொறுத்தவரை, பொறாமை, பேராசை, சினம் அல்லது கொடிய சொற்களால் மனம் மாசுபட்டிருக்கும் இடத்தில் அறம் இருக்க முடியாது. அகத் தூய்மை இல்லையெனில், புறச் சடங்குகளோ அல்லது சமூக அந்தஸ்தோ அர்த்தமற்றதாகிவிடும். சாக்ரடீசைப் போலவே, அவரும் அற வீழ்ச்சியை ஒரு சமூகப் பிரச்சனையாகப் பார்ப்பதற்கு முன்னால், அதை ஒரு தனிமனிதனின் அக நிலையாகப் பார்க்கிறார்.

எனவே, இவ்விரு தத்துவங்களிலும், ஒழுக்கம் அரசியல் சார்ந்ததாக மாறுவதற்கு முன்பே உளவியல் சார்ந்ததாக இருக்கிறது.

அறிவும் அன்பும்: அறத்திற்கான வழிகள்

தங்களுடைய அற முடிவுகளில் ஒற்றுமை இருந்தாலும், அறத்தை எவ்வாறு வளர்ப்பது என்பதில் சாக்ரடீசும் திருவள்ளுவரும் வேறுபடுகிறார்கள்.

சாக்ரடீஸ் அறத்தை அறிவுப்பூர்வமாக அணுகுகிறார். தீமை என்பது அறியாமையிலிருந்து பிறக்கிறது என்று அவர் நம்புகிறார். மனிதர்கள் தற்காலிக இன்பங்களையோ அல்லது தவறான பொருட்களையோ உண்மையான நல்வாழ்வு என்று தவறாகப் புரிந்துகொள்வதால்தான் தீமைகளைச் செய்கிறார்கள். தத்துவ உரையாடல் மற்றும் பகுத்தறிவு ஆய்வின் மூலம்,

தனிமனிதர்கள் குழப்பத்தை நீக்கித் தங்களை உண்மையுடன் இணைத்துக்கொள்ள முடியும். இக்கோணத்தில், அறம் என்பது ஒரு வகை அறிவாகிறது.

தமிழ் மரபு மிகவும் அனுபவபூர்வமான மற்றும் உறவுமுறை சார்ந்த அணுகுமுறையைக் கையாள்கிறது. ஞானமும் பகுத்தறிவும் போற்றப்பட்டாலும், அறம் என்பது அன்பிற்கும் அருளுக்கும் பிரிக்க முடியாததாக இருக்கிறது. அறம் என்பது சுருக்கமான வாதங்களின் மூலம் கண்டறியப்படுவதல்ல, மாறாக வாழ்க்கையில் அன்புடன் பங்கேற்பதன் மூலம் கண்டறியப்படுகிறது. மற்றவர்களுடனான ஒன்றிணைப்பையும், செயல்களின் விளைவுகளையும் புரிந்துகொள்வதன் மூலம் மனிதர்கள் அறத்தைக் கற்றுக்கொள்கிறார்கள்.

சாக்ரடீஸ் விவாதங்கள் (Dialectic) மூலம் தெளிவைத் தேடுகிறார் என்றால், திருவள்ளுவர் மனிதாபிமானச் செயல்கள் மூலம் இணக்கத்தைத் தேடுகிறார்.

குடிமை மனச்சாட்சியும் இல்லற அறமும்

இவ்விரு தத்துவங்களுக்கும் இடையே மற்றொரு முக்கியமான வேறுபாடு, அறம் இயங்கும் சமூக வெளியாகும்.

சாக்ரடீஸ் கிரேக்க நகர அரசில் (Polis) ஒரு பொது விமர்சகராகச் செயல்படுகிறார். பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு அவர் ஒரு சவாலாக இருக்கிறார், அரசியல் அதிகாரங்களை எதிர்கொள்கிறார், ஏதெனியன் சமூகத்தின் அறம் சார்ந்த அனுமானங்களைக் கேள்வி கேட்கிறார். உண்மைக்காகத் தனது தனிப்பட்ட பாதுகாப்பைக் கூடத் தியாகம் செய்யத் துணிந்த குடிமை மனச்சாட்சியாக அவரது வாழ்க்கை அமைகிறது.

இருப்பினும், தமிழின் அறக் கோட்பாடு, இல்லற வாழ்க்கைக்கு அசாதாரணமான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. திருவள்ளுவர் இல்லறம் மற்றும் துறவறம் ஆகிய இரு வழிகளைப் பிரித்துக் கூறினாலும், சமூக ஒழுங்கின் முதன்மை அடித்தளமாக இல்லற வாழ்க்கையை உயர்த்திக் காட்டுகிறார். விருந்தோம்பல், குடும்பத்தைப் பேணுதல், பொருளாதார நேர்மை மற்றும் அன்பான உறவுகள் ஆகியவை அறத்தின் மைய வெளிப்பாடுகளாக மாறுகின்றன.

சமூகத்திலிருந்து விலகிச் செல்வதைப் போற்றும் மரபுகளைப் போலன்றி, திருக்குறள் அறவாழ்க்கையை அன்றாட மனிதப் பொறுப்புகளுடன் பிணைந்த ஒன்றாக முன்வைக்கிறது. இல்லறம் என்பது அறத்திலிருந்து திசைதிருப்பும் ஒன்றல்ல, மாறாக அறத்தை உறுதிப்படுத்தும் களமாகும்.

இரு மரபுகள், ஒரு மனித உண்மை

சாக்ரடீஸ் மற்றும் திருவள்ளுவரின் அறப்பார்வைகள் மிகவும் வேறுபட்ட நாகரிகங்களிலிருந்து தோன்றியிருந்தாலும், அவை இரண்டும் ஒரே அடிப்படை உண்மையை வந்தடைகின்றன: உண்மையான மனித மகத்துவம் என்பது மற்றவர்களை ஆதிக்கம் செலுத்துவதில் இல்லை, மாறாகத் தன்னைத்தானே கட்டுப்படுத்துவதில் உள்ளது.

சாக்ரடீஸ் இந்த ஆளுமையைப் பகுத்தறிவு, அறிவுசார் கடுமை மற்றும் ஆன்மாவின் ஒழுங்குபடுத்தல் மூலம் கட்டமைக்கிறார். திருவள்ளுவர் இதை அன்பு, அகத்தூய்மை மற்றும் சமூக வாழ்வில் பொறுப்பான பங்கேற்பின் மூலம் கட்டமைக்கிறார். ஒன்று பகுத்தறிவு இணக்கத்தை வலியுறுத்துகிறது; மற்றொன்று அறத்தின் ஒன்றிணைப்பை வலியுறுத்துகிறது.

இந்த மரபுகள் ஒன்றிணைந்து, அதிகாரம், செல்வம் அல்லது வெளிச்சட்டங்களால் மட்டுமே அறமான நாகரிகத்தைத் தக்கவைக்க முடியாது என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. அது அக நேர்மையையும் மனிதாபிமான நடத்தையையும் வளர்ப்பதையே சார்ந்துள்ளது. நூற்றாண்டுகளையும் கலாச்சாரங்களையும் தாண்டி, சாக்ரடீசும் திருவள்ளுவரும் ஓர் உலகளாவிய மனித விருப்பத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்: அது ஒரு நீதியான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கையைத் தேடும் பயணம்.

♦♦♦

கட்டுரையாளர்
மனிதஉரிமைச் செயற்பாட்டாளர்
உதவி: நிவேதிதா.

நன்றி: CounterCurrents.org; Socrates Studio.

நிகழ்வு – 1

எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வன் அவர்களுக்குப் பாராட்டு விழா

சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வன் அவர்களுக்குத் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் - ஈரோடு மாவட்டக்கிளை சார்பாகப் பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. விழாத்தொடக்கத்தில் இசைப் பாடல்களும் நடன நிகழ்வும் ஈர்க்கத்தக்க வகையில் இடம் பெற்றன. மாவட்டத் தலைவர் மு.சங்கரன் தலைமையில் பதிப்பாளர் மா.கோபால கிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். கவிஞரும் ஈரோடு மாவட்ட ஆட்சியருமான ச. கந்தசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். எழுத்தாளர்கள் பாமரன், ஆதவன் தீட்சண்யா, ஜீவலட்சுமி, கலைக்கோவன், ஈரோடு சர்மிளா, ஆகியோர் பாராட்டுரை

ஈரோடு தமுஎகச பாராட்டு விழா மேடையில் பங்கேற்றோர்.

நல்கினர். விருதாளர் தமிழ்ச்செல்வன் ஏற்புரை வழங்க, வலைப்பதிவர் அப்துல் ராஃபீக் நன்றியுரை கூறினார். ஆ. முத்துக்கண்ணன் அவர்களும் சு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் நிகழ்ச்சியைச் செவ்வனே ஒருங்கிணைப்புச் செய்தனர். திரளமான மக்கள் நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

கவிஞரும் ஈரோடு மாவட்ட
ஆட்சியருமான ச. கந்தசாமி
அவர்கள்.



தமுஎகச மாநிலத்துணைத்
தலைவர் ஆதவன் தீட்சண்யா

எழுத்தாளர் பாமரன்

சாகித்திய அகாதமி
விருதாளர்
ச.தமிழ்ச்செல்வன் ஏற்புரை

தமிழ்ச்செல்வன், அவரது இணையர் வெள்ளைத்தாய்,
புத்தகம் பேசுது ஆசிரியரும் வெளியீட்டாளருமாகிய க.நாகராஜன்,
புதுமலர் இதழாசிரியர் கண. குறிஞ்சி, ஆதவன் தீட்சண்யா,
கலைக்கோவன், மு.சங்கரன் மற்றும் தோழர்கள்.

தமுஎகச ஈரோடு மாவட்டப் பொருளாளர்
முத்துக்கண்ணன் அவர்கள்
நினைவுப்பரிசு வழங்கல்

நிகழ்வு – 2

‘கடந்து நிலைக்கும் காலம்’ நூல் வெளியீடு

விழுப்புரத்தில் தோழர் செந்தாரகை நூல் வெளியீடு - நினைவு விருது விழா

விழுப்புரம் இலக்கிய அமைப்புகளின் சார்பில் புரட்சிப் பாவலர், மார்க்சிய படைப்பாளி **மறைந்த தோழர் செந்தாரகை** அவர்களுடைய பாடல்கள் மற்றும் கவிதைகள் அடங்கிய **'கடந்து நிலைக்கும் காலம்'** நூல் வெளியீட்டு நிகழ்வும் அவருடைய பெயரிலான நினைவு விருது வழங்கும் நிகழ்வும் மிகச் சிறப்பாக

நூல் வெளியீட்டு நிகழ்வில் தோழர் மருதம் இ. ரவி கார்த்திகேயன், கவிஞர் புதுவை சீனு. தமிழ்மணி, தோழர் செந்தாரகையின் இளைய மகள் தமிழ்ச்சிட்டு, தோழர் செந்தாரகையின் மூத்த மகள் முனைவர் செங்கொடி, தோழர் ஏழுமலை, பேராசிரியர் பிரபா கல்விமணி, விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் துரை. இரவிக்குமார், விழுப்புரம் முன்னாள் திமுக நகர மன்றத் தலைவர் ஜனகராஜ் மற்றும் கவிஞர் அன்பாதவன், கவிஞர் பழமலய்

முனைவர் துரை. இரவிக்குமார் அவர்கள் மார்க்சிய லெனினியச் செயற்பாட்டாளர் தோழர் செல்வராஜின் மூத்த மகன் செம்முகில் அவர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்தல்.
உடன் பேரா பிரபா கல்வி மணி அவர்கள்.

விழுப்புரத்தில் நடைபெற்றது. தோழர் செந்தாரகை அன்றைய ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டத்தில் மார்க்சிய லெனினிய அரசியலை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகப் போக்குவரத்து வசதிகள் அவ்வளவாக இல்லாத காலகட்டத்தில் கால்நடையாக நடந்து களப்பணி ஆற்றியவர். மாணவப் பருவம் தொட்டே மார்க்சிய கொள்கையால் ஈர்க்கப்பட்ட அவர் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்தார். பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் மக்கள் மொழியில் புரட்சிகரக் கருத்துகளைப் பாடல்களாகவும் கவிதைகளாகவும் கொண்டு சேர்த்த தோழர் செந்தாரகையின் ஒட்டுமொத்தப் பாடல்களும் கவிதைகளும் தற்போது 'கருப்புப் பிரதிகள்' பதிப்பகத்தின் வாயிலாகக் ‘கடந்து நிலைக்கும் காலம்’ என்ற நூலாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல்களையும் கவிதைகளையும் தொகுக்கும் பணியை அவருடைய மூத்த மகள் **பேராசிரியர் செங்கொடி** செய்துள்ளார்.

இந்நிகழ்விற்கு ஏழை எளிய மக்களின் கல்விப் பணிக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த பேராசிரியர் **பிரபா கல்விமணி** தலைமை தாங்கினார். **விழுப்புரம் நாடாளுமன்ற**

எழுத்தாளர் துரை. இரவிக்குமார் விருதினை வழங்க, பெற்றுக் கொள்பவர் சரவண பாலு பதிப்பகம் தோழர் சந்திரசேகரன், தோழர் செந்தாரகையின் பேத்தி நற்றிணை, பேராசிரியர் பழமலய், தோழர் செந்தாரகையின் சகோதரர் ஏங்கெல்ஸ், தோழர் செந்தாரகையின் இளைய மகள் தமிழ்ச்சிட்டு, செம்முகில் செல்வராஜ் மற்றும் பேராசிரியர். பிரபா கல்விமணி உள்ளிட்டோர்.

உறுப்பினர் முனைவர் துரை. இரவிக்குமார் அவர்கள் தோழர் செந்தாரகையின் உருவப் படத்தையும் தோழர் செந்தாரகையின் பாடல்களை மக்கள்மயப்படுத்திய தோழர் பக்கிரிசாமி அவர்களின் உருவப்படத்தையும் திறந்து வைத்து, நூலினை வெளியிட, அதன் முதல் பிரதியைப் பேராசிரியரும் கவிஞருமான பழமலய் பெற்றுக் கொண்டார். தோழர் செந்தாரகை நினைவு விருது அவருடன் இணைந்து இயக்கப் பணியாற்றிய தோழர் செல்வராஜ் அவர்களுக்கும் சரவணபாலு பதிப்பகத்தினை உருவாக்கிய தோழர் சந்திரசேகரன் ஆகியோருக்கும் வழங்கிப் பாராட்டப்பட்டது. ஏற்புரையை பேரா. செங்கொடியும், நன்றியுரையைக் கவிஞரின் இளைய மகள் தமிழ்ச்சிட்டு அவர்களும் வழங்கிச் சிறப்பித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் துரை. இரவிக்குமார் அவர்கள், பேராசிரியரும் போராளியுமான பிரபா கல்விமணி அவர்களுக்குச் சிறப்புச் செய்தல்



அஞ்சலி

இயக்குநர் பாரதிராஜா
(1941 -2026)